

556
கண்ணன்
தீபாவளி மலர் '55.
ரூ. 1/-




Retail Branches:

285, சைனா பஜார் ரோடு, சென்னை-1

71, பாண்டி பஜார், சென்னை-17

SC
031n211
N55

1556
4-55

# குழந்தைகளே

கங்கா ஸ்நானம் செய்து, களிப்போடு விளங்கும் உங்களுடைய அன்புக் கரங்களிலே இந்த அழகான தீபாவளி மலரைச் சமர்ப்பிக்க விரும்புகிறேன். குழந்தைகளின் உற்ற நண்பனாக விளங்கும் கண்ணன் ஒவ்வொரு தீபாவளியின் போதும் புதுப் புதுப் பொலிவுடன் காட்சி தருகிறான். உங்கள் குறுமுகம் மலர்ச்சி பெறுவதே கண்ணனுடைய லட்சியம். அந்த லட்சியத்தில் விளைந்த முயற்சிதான் இந்த வருஷத்து மலர்.

மலரைப் பிரித்ததுமே நம்முடைய சிறந்த அன்புக்கும் பெருமதிப்புக்கும் உரிய தமிழ் நாட்டுத் தாத்தா ராஜாஜி அவர்களுடைய அருமையான கதை காட்சி தருகிறது. குழந்தைகளுக்கு மட்டுமல்ல, பெரியவர்களுக்கும் கூட சிறந்த உண்மை ஒன்றை அழகான உருவிலே விளக்கிக் காட்டுகிறது அந்தக் கதை. தாத்தா என்றால் அப்பா அம்மாவைவிட அவரிடம் குழந்தைகளுக்குச் சலுகை அதிகம். அவருக்கும் நம்மிடம் அதிக நம்பிக்கை, உறவு. இந்த உறவும் சலுகையும் இன்னும் பல ஆண்டுகள் இறுகிப் பெருகப் பிரார்த்தனை செய்வோம். அதற்குப் பிறகு அடுத்து அடுத்து, பல பெரியார்களும் அறிஞர்களும் பாட்டும் கதைகளுமாக எழுதி யுதவி யிருக்கிறார்கள். நடுநடுவே பிரபல எழுத்தாளர்களும் இளம் கலைஞர்களும் மனம் ரமிக்கும் கதைகளை வழங்கியிருக்கிறார்கள். ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகை; ஒவ்வொரு ருசி. எல்லாவற்றிலும் கற்பனையின் உயர்வும் கருத்துக்களின் சிறப்பும் மிளிர்கின்றன.


கதைகள் பாடல்கள் இவற்றின் தரத்துக்குத் தகுந்த மாதிரி சித்திரப் பகுதிகளும், புகைப்படப் பகுதிகளும், பொழுது போக்குப் பகுதிகளும் மலரிலே சிறப்பாக அமைந்திருக்கின்றன. எந்தப் பக்கத்தைப் பிரித்தாலும் படங்களுக்குக் குறைவே யில்லை. கண்ணுக்கு விருந்து அளிக்கும் சித்திரங்களும், புகைப் படங்களும், ஹாஸ்யப் படங்களும் மலரில் வேண்டிய மட்டும் இடம் பெற்றிருக்கின்றன. பொழுதை ரஸமாகவும் நல்ல அறிவு பெறும் வகையிலும் கழிக்கத் தனியாகவே சில பக்கங்கள் ஒதுக்கிவிடப்பட் டிருக்கின்றன. அதிலே சின்னக் குழந்தைகளுக்கு என்றும் சில பக்கங்கள் இருக்கின்றன.

வெட்டி ஒட்டும் வேடிக்கை என்ற மூவர்ணப் படமும், விமான யாத்திரை என்ற விசேஷமான புகைப்படக் கட்டுரையும் எல்லாக் குழந்தைகளுக்கும் மகிழ்ச்சியைத் தரக் கூடியவை,

இந்த மலரின் அழகிய மூவர்ண அட்டைப் படம் நமக்கு லவ குசர்களைப் பற்றிய ரஸமான கதை ஒன்றைச் சித்திரித்துக் காட்டுகிறது. மகா பராக்கிரமசாலியான அநுமார் அந்தக் குழந்தைகளினால் கட்டப்பட்டுக் கிடக்கிறார். அதைப் பார்க்கும் போது உலகமே அன்பு ஒன்றுக்குத்தான் கட்டுப்படும் என்று நமக்கு நன்றாக விளங்குகிறது.


கண்ணனிடமும், கண்ணன் வழியே பல்லாயிரக்கணக்கான குழந்தைகளிடமும் உள்ள அன்புப் பிணைப்பினாலேயே பெரியவர்களும் எழுத்தாளர்களும், கலைஞர்களும் கவிஞர்களும் இந்த மலரை இத்தனைச் சிறப்புடையதாகச் செய்திருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் கண்ணன் சார்பாகவும் உங்கள் சார்பாகவும் எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

—ஆசிரியர்.




# பொருளடக்கம்






மலர்: 6 இதழ்: 22


| | பக்கம் |
|---|---|
| குழந்தைகளே! | 1 |
| பூசனிக்கொடி - ராஜாஜி | 4 |
| கண்ணன் உறவு - நாமக்கல் கவிஞர் | 7 |
| பால் குடித்த பூனை - கி. வா. ஜகந்நாதன் | 8 |
| உழவன் மகன் - டாக்டர் மு. வரதராசனுர் | 12 |
| செல்லியும் கறுப்பனும் - கி. சந்திரசேகரன் | 13 |
| ஓலைக் கிளி - பெ. தூரன் | 17 |
| புரியுமா? - கி. சரஸ்வதி அம்மாள் | 22 |
| யானையின் பழக்கடை - சரஸ்வதி | 26 |
| புதையல் - கீதா | 30 |
| அப்பா சிபாரிசு - டாலி | 32 |
| இளமைப் பருவம் - சர்ஸ்வதி ஸ்ரீநிவாஸன் | 33 |
| பழிக்குப் பழி - த. வே. ஆறுமுகம் | 33 |
| குண்டுச் சீமா - ராஜி | 36 |
| லீடர் மணி - 'ஆர்வி' | 38 |
| விமான யாத்திரை - வசுமதி | 41 |
| வெட்டி ஒட்டும் வேடிக்கை | 48 |
| பொழுது போக்கு - தலையாட்டிப் பொம்மை | 49 |
| கண்கள் க்விஸ்-புஷ்பத்துறை சுப்ரமண்யம் | 50 |
| சித்திரக் கட்டம் - க. திருநாவுக்கரசு | 52 |







| | |
|---|---|
| இரு யானைக்குட்டிகள் | 53 |
| 49 நட்சத்திரங்கள் | 56 |
| வெட்டி ஒட்டிப் பார் - ஸுக்லா | 56 |
| தீபாவளிப் பரிசு - ரகமி | 57 |
| முக விசித்திரங்கள் | 58 |
| என்ன காட்சி? | 60 |
| சர்க்கஸ் கோமாளி | 61 |
| விடுகதைப் பாடல்கள் - ஜோதிமாமா | 62 |
| பொழுது போக்கு விடைகள் | 64 |
| அமைதியான படிப்பு - E. ராமலிங்கம் | 65 |
| பொக்கிஷம் - எஸ். ராமகிருஷ்ணன் | 66 |
| பாரஸீகக் குதிரை - காட்டூர்-கண்ணன் | 71 |
| சகுனம் - சுருமீன் | 76 |
| தீபாவளி நாளில் - என். ராமகிருஷ்ணு | |
| பிறைச் சந்திரன் - அழ. வள்ளியப்பா | 81 |
| பானையின் கதை - புஷ்ப. சுப்ரமண்யம் | 82 |
| கடைப் பையன் - 'திருச்சி அண்ணு' | 84 |
| தரும சிந்தை - 'சுகி' | 89 |
| சோம்பேறிச் சொக்கன் - தி. ஜ. ர. | 94 |
| இரும்புப் பெட்டி - கே. எஸ். பி. | 98 |
| இரட்டை வெடி - 'நீலம்' | 101 |
| புயலுக்குப் பின் - கே. சுந்தரேசன். | 105 |
| ரங்குவின் தங்கை - பூவாளூர் சுந்தரராமன் | 110 |
| குழந்தையின் மகிழ்ச்சி - என். ராமகிருஷ்ணு | 112 |
| சைக்கிள் ஆசை - சங்கரசுப்பு | 115 |
| பொம்மைத் திருடன் - 'ஸேஞு' | 121 |
| அதிர்ஷ்டம் - 'நடனு' | 124 |
| பாலர் கவி அரங்கம் | 128 |


ஓவியர்கள்: ஸாமி, சுசி, மகான்,
சுப்பு, டாலி, ரெஸாக்.

அட்டைப் படம்: தீனுநாத் தலால்.








# பூசனிக் கொடி

**ராஜாஜி**

புதுப்பட்டி ஈசுவரன் கோயிலண்டை ஒரு தென்னந்தோப்பு. அதற்கப்பால் ஒரு குப்பை மேடு. குப்பை மேட்டில் ஒரு பூசனிக்கொடி நன்றாக வளர்ந்து படர்ந்து வந்தது.

ஒரு நாள் பூசனிக்கொடிக்கும் தென்னமரம் ஒன்றுக்கும் சம்பாஷணை நடந்தது. முதலில் அன்போடு நடந்தது. பிறகு பெருமை பேசிக்கொள்ள ஆரம்பித்தன. பேச்சு வேகமாகப் போச்சு—

''தடியனாட்டம் ஓங்கி வளர்ந்திருக்கிறாய். அதற்காக இவ்வளவு பேச வேண்டியதில்லை'' என்றது பூசனிக்கொடி.

''உன் வேஷம் எங்களுக்குத் தெரியாதா? சாம்பல் பூசிக்கொண்டு சிவபக்தனைப்போல் பாசாங்கு செய்கிறாய். தரையில் உழல்கிற குப்பைக் கொடிக்கு எவ்வளவு கர்வம்?'' என்றது தென்னமரம்.

பூசனிக்குப் பெரும் கோபம் வந்துவிட்டது. 'சரி,



பார்க்கலாம்' என்று மனத்தில் நிச்சயம் செய்துகொண்டு அன்று முதல் மூன்று நாள் மகாதேவனைத் தியானித்துத் தவம் இருந்தது.

* * *

மகாதேவன் மனம் இரங்கி, "என்ன வேண்டும், என் அன்புக்குரிய கொடியே! ஏன் தவமிருந்து வருகிறாய்? உன் காய்கள் எல்லாம் வதங்கிப் போமே!'' என்றான்.

''அப்பனே! நான் உன் பக்தன். உனக்குத் தெரியாதா? இந்தத் தென்னமரம் அகங்காரங் கொண்டு என்னை ஏளனம் செய்து வருகிறது. 'உன் பூ பெரிதாகத்தான் இருக்கிறது. ஆனாலும் நீ மண்ணில் உழலும் ஒரு கொடிதானே?' என்று பொறுக்க முடியாத பேச்சுப் பேசுகிறது. இந்தத் தென்னம் ஓலைகள் மேலே காற்றில் மிகக் கர்வமாக வீசி ஆடும்போது எனக்குத் தாங்க முடியாத கோபம் வருகிறது. நான் என்ன செய்வேன்? நான் பூசி வரும் திருநீற்றைக்கூட இந்தத் தென்னமரம் பரிகாசம் செய்கிறது'' என்று அழுதது.

''உனக்கு என்ன வேண்டும், சொல். நான் வரம் தருகிறேன்'' என்றான் கருணாமூர்த்தி.

''உன் கோயில் கோபுரத்தின் மேல் என்னை ஏற்றிவிடு. நானும் உயரக் கிளம்பிச் சென்று கவுரவமாகப் பிழைப்பேன்'' என்றது பூசனிக் கொடி.

''அப்படியே!'' என்று சொல்லிவிட்டு ஆண்டவன் மறைந்தான்.

பிறகு கோவிந்தன் வந்தான்.

''ஏ! பூசனிக்கொடியே! தேவியைப் போல் அழகாக இருக்கிறாய். அன்புக்குரிய கொடியே! ஏமாந்து போகாதே. ஆசை பொல்லாதது. அவன் அவன் எங்கே இருக்க வேண்டுமோ அங்கே இருப்பது நல்லது. கோபுரத்துக்குமேல் போய் உட்கார்ந்தாயானால் நீ அபாயத்தில் சிக்கிக் கொள்வாய்'' என்றான்.

''கண்ணா, நீ என்ன, தென்ன மரத்தோடு சேர்ந்து கொண்டு என்னை முன்னுக்கு வராதபடி தாழ்த்தப் பார்க்கிறாயா? நீ சொல்லும் உபதேசத்தை அருச்





கோபுரத்தினின்று வீழ்ந்தது. இங்குமங்கும் குதித்து அடிபட்டுக் கீழே விழுவதற்குள் இருபது துண்டுகளாகி, பரிதாப நிலையில் தரையில் சிதறிக் கிடந்தது.

"ஐயோ!" என்று அழுதது தாய். துயரத்தினால் பூசனிக் கொடி வாடி வதங்கிப்போய் அதுவும் கீழே இறங்கிவிட்டது. "நமக்கு வேண்டாம் கோபுரம். ஏழைகளுக்குத் தரையே போதும். குப்பையிலும் யோக்கியமாக வாழலாம். மேலே ஏறினால் விழ வேண்டியதாகும். தரையோடு இருந்தால் விழுவது அவசியமில்லை" என்று ஞானமடைந்தது பூசனிக்கொடி.

அப்போது முற்றி உலர்ந்த ஒரு தேங்காய் பொத்தென்று மரத்திலிருந்து விழுந்தது. "அப்பாடா!" என்று கீழே உருண்டது.

"விழு! நன்றாய் விழு!" என்றது பூசனி.

"விழுந்தாலும், நான் அடியைத் தாங்குவேன்" என்றது தேங்காய்.

"பொறாமை உதவாது!" என்றது ஞானமடைந்த பூசனிக்கொடி.

பிறகு நன்றாய்ப் பூத்து நிறையக் காய்த்தது. எல்லாம் முற்றின பிறகு கோயில் மானேஜர் வண்டியில் ஏற்றி, சந்தையில் விற்றார்.

சுனனுக்குச் சொல். என்னிடம் செல்லாது!" என்று சொல்லிவிட்டுப் பூசனிக்கொடி கோபுரத்தின்மேல் ஏறிச் சென்றது.

கண்ணன் போய் மகாதேவனிடம், "அண்ணே! இந்தப் பூசனி கெட்டுப்போகும் காலம் வந்து விட்டதே" என்றான்.

"உனக்குத் தெரியாதா? பட்டால்தான் புத்தி வரும். உபதேசம் சொல்லிப் பிரயோஜனம் இல்லை" என்றான் மகாதேவன்.

* * *

**பூ**சனிக்கொடியில் காய் பெருத்தது. ஒரு பூசனிக்காய் பானையளவு பெரிதாக முற்றி, "இனி நான் கொடியிலிருக்க முடியாது" என்று தாய்க்குச் சொல்லிவிட்டு வேறுபட்டுச் சென்றது.

# கண்ணன் உறவு

**நாமக்கல் வெ. ராமலிங்கம் பிள்ளை**



கண்ணன் உறவைப் பிரியாதே;
காரிய மின்றித் திரியாதே;
எண்ணம் தூயது என்றால்
எதுசெய் தாலும் நன்றாகும். (கண்)
ஊக்கமும் உறுதியும் உண்டாகும்;
உழைப்பிலும் களைப்பேதும் அண்டாது.
ஆக்கமும் ஆற்றலும் பெறலாகும்;
ஆயன் கண்ணன் உறவாலே. (கண்)
துன்பம் எதையும் தாங்கிடலாம்;
துயரம் உடனே நீங்கிடலாம்;
அன்பும் அறிவும் பெரிதாகும்;
அச்சம் என்பது அரிதாகும். (கண்)
சிரிப்பும் களிப்பும் நிறைந்துவிடும்;
சிடுசிடுப் பெல்லாம் மறைந்துவிடும்;
விருப்பம் எதுவும் சித்திபெறும்;
வித்தகக் கண்ணன் பக்தியினால்; (கண்)
ஆடலும் பாடலும் மிகுந்துவிடும்;
அழகன் கண்ணன் புகுந்த இடம்;
ஓடலும் ஒளித்தலும் விளையாட்டாம்
ஒவ்வொரு செயலும் களியாட்டே. (கண்)
மாடுகள் மேய்க்கும் வேலையிலும்
மகிழ்ந்திடும் கண்ணன் லீலைகளால்
பாடுபட் டுழைத்திட அஞ்சோமே;
பாரினில் யாரையும் கெஞ்சோமே. (கண்)
தூதுவனாகித் துணைபுரிவான்.
தொழும்பனைப் போலும் பணிபுரிவான்;
ஏதொரு தொழிலும் இழிவல்ல
என்பது கண்ணன் வழிசொல்லும்.
எல்லா உயிர்களும் இன்பமுறும்
இன்னிசை பரப்பித் தென்புதரும்
புல்லாங் குழலை ஊதிடுவான்;
பூமியில் கடமைகள் ஓதிடுவான். (கண்)
பக்தருக் கெல்லாம் அடைக்கலமாய்ப்
பாதகர் தங்களை ஒடுக்கிடுவான்;
சக்திகள் பலவும் தந்திடுவான்,
சங்கடம் தீர்த்திட வந்திடுவான். (கண்)



# பால் குடித்த பூனை

கி.வா.ஜகந்நாதன்

இப்போது உண்மைக் கதை ஒன்று உங்களுக்குச் சொல்லப்போகிறேன். உண்மை வேறு, கதை வேறு என்றுதானே பொதுவாக நினைக்கிறார்கள்? ''வெறும் கதை அளக்கிறான்!'' என்று சொல்கிறதை நாம் கேட்டிருக்கிறோம். ஆனாலும் கட்டுக்கதை வேறு; உண்மைக் கதை வேறு. சில சமயங்களில் உண்மைக் கதை, கட்டுக் கதையை விடச் சுவாரசியமாக இருக்கும்.

சேலம் மாவட்டத்தில் வடகுமரை என்று ஒரு சின்ன ஊர் இருக்கிறது. நல்ல பட்டிக்காட்டுக்கு அதை உதாரணமாகச் சொல்லலாம். அங்கே ஒரு சாமியார் இருக்கிறார். ரொம்ப ரொம்ப நல்லவர். அப்பண்ணா என்று பேர். ஆனால் அந்தப் பேரை யாரும் சொல்கிறதில்லை.

சாமியார் என்றால் தாடி, மீசை, சடை, காவி வேஷ்டி என்று எல்லாம் நினைக்கத் தோன்றுகிறது அல்லவா? அவர் வெறும் வெள்ளை வேஷ்டிதான் கட்டுவார். அவருக்குக் கிளி, பூனை, ஆடு, மாடு, குழந்தை, கிழவர் எல்லோரிடமும் அன்பு உண்டு. தமக்கு ஒன்றுமே தெரியாது என்று சொல்லிக்கொள்வார். அவரிடம் போனால் பய பக்தியோடு போக வேணும் என்பதும் இல்லை. நமக்குச் சொந்தக்காரர் ஒருத்தரைப் பார்க்கிறது மாதிரி எண்ணிப் போனால் போதும். உண்மையிலே சொந்தக்காரரை விடச் சொந்தம் உடையவராக ஆகிவிடுவார்.

அவர் ஒரு பூனையை வளர்த்து வந்தார். அப்படிச் சொல்கிறதை விட, அவரிடம் ஒரு பூனை வளர்ந்து வந்தது என்று சொல்கிறதுதான் சரி. அதாவது அவராகப் பூனையைத் தேடிப் பிடித்து வளர்க்கவில்லை. அதுவாக அவரிடம் வந்து ஒட்டிக் கொண்டது. அவரைப் பார்க்க வருபவர்களிடமும் அது ஒட்டிக்கொண்டு, வாலைத் தூக்கித் தூக்கி, ''மியாவ் மியாவ்'' என்று கத்தும்; மேலே உராயும்.

தை மாசம் பூசம் வருமே, உங்களுக்குத் தெரியுமோ? கோவில்களில் அன்றைக்கு விசேஷமாகப் பூஜை பண்ணுவார்கள். அப்பண்ணா சாமியார் ஒரு கோவிலுக்குள்ளே குடிசை போட்டுக்கொண்டு வாழ்கிறார். தைப் பூசத்தில் அங்குள்ள சாமிக்கு அபிஷேகம், அர்ச்சனை எல்லாம் நடக்கும். ரொம்பப் பேர் அன்று அங்கே வருவார்கள். பாட்டுக் கச்சேரி, பிரசங்கம் எல்லாம் விமரிசையாக நடக்கும்.

ஒரு தடவை நான் இந்தத் தைப் பூசத்துக்குப் போயிருந்தபோது நடந்ததைச் சொல்லத்தான் இத்தனை பீடிகை போட்டுக்கொண்டேன்.

சாமியாரிடம் ஒரு பூனை வளர்ந்து வந்தது என்று சொன்னேன் அல்லவா? அந்தப் பூனை கூட்டமாக இருக்கிறதே என்று பயப்படாமல் எல்லாரோடும் ஒட்டி ஒட்டி உராய்ந்து உராய்ந்து, 'மியாவ் மியாவ்' என்று க்ஷேமம் விசாரித்தது. பார்க்கிறதற்கு அழகாகவும் இருந்தது.

சாமியார் இருக்கும் குடிசையில் ஒரு சின்ன அறையில் பழம், பால், மாலை இவைகளை வைத்திருந்தார்கள். யாருக்கோ குடிப்பதற்காக ஒரு செம்பில் பால் வைத்திருந்தார்கள். அந்தப் பூனை அறைக்குள்ளே சென்றது. என்னதான் நல்ல பூனையானாலும், நல்ல சாமியாரிடம் பழகினாலும் பூனை பூனைதானே? அதற்குப் பாலுக்கோ சோற்றுக்கோ அங்கே குறைவே கிடையாது. அப்படி இருந்தும் அந்தப் பூனைக்குத் திருட்டுத்தனமாக அந்தப் பாலைக் குடிக்க வேணுமென்று தோன்றிவிட்டது. செம்பின்மேல் மூடியிருந்த மூடியைத் தள்ளிவிட்டு அதற்குள் தலையை விட்டுப் பாலைக் குடிக்க நினைத்தது. செம்பின் வாய் அதன் தலையை உள்ளே நுழைக்கப் போதியதாக இருந்தது. கொஞ்சம் குறைவு என்றுகூடச் சொல்லலாம். பூனை பாலைக் குடிக்கும் ஆசையில் செம்புக்குள் தலையை நுழைத்துக் கொண்டது. பாலைக் குடித்து விட்டுத் தலையை இழுத்தது.

தலை வெளியே வரவில்லை. செம்பும் கூட வந்தது. தலையை நுழைக்கும்போது எப்படியோ நுழைத்து விட்டது. அப்போது பால்தான் அதற்கு நினைவில் இருந்தது. இப்போது தலையில் செம்புடன் அது உருண்டது. செம்பு கழன்று வரவில்லை. மூச்சு விடமுடியாத சங்கடம் உண்டாயிற்று. 'கட கட' வென்று உருண்டது. பூனையின் உடம்பு மாத்திரம் வெளியே தெரிந்தது. அதன் தலையிருக்கிற இடத்தில் பால் செம்பு இருந்தது.

'புஸ் புஸ்' என்று மூச்சுவிட்டுக் கொண்டும் கத்திக்கொண்டும் அது உருண்டது. அப்போது உள்ளே வந்த நான் அதைப் பார்த்தேன். பூனை உயிருக்கு மன்றாடிக்கொண்டிருந்ததைக் கண்டு, ''முருகா! முருகா!'' என்று கத்தினேன். சாமி




பேரைத்தான் அப்படிச் சொல்லிக் கூவினேன். அது எனக்கு வழக்கமாகப் போய்விட்டது. அதை கேட்டுச் சாமியார் வந்தார். நான் பூனையைத் தொடப்போனால், அது தன் நகத்தால் பீறியது. சாமியார் அதைக் கையால் பற்றினார். யார் என்ன செய்கிறார்கள் என்று தெரிந்துகொள்ள முடியாதபடி அதன் தலை செம்புக்குள் இருந்தது. அதனால் அது கைக்கு அடங்காமல் துள்ளித் துள்ளி உருண்டது. எவ்வளவுதான் மனிதர்களோடு பழகினாலும் அதற்கு மனிதனிடம் நம்பிக்கை உண்டாகவில்லை. தன்னுடைய உயிரைப் போக்க ஏற்பாடு செய்திருக்கிறார்கள் என்றே அது நினைத்திருக்க வேண்டும். சாமியார் ஏதோ பேசியபடி செம்பைப் பற்றிக்கொண்டார். பூனைக்குத் அவர் குரல் தெரியும். ஆனால் அதற்குத் தன் உயிரைத் தவிர வேறு ஒன்றுமே அப்போது நினைவு இருந்திருக்காது.

ஒவ்வொரு நிமிஷமும் ஒவ்வொரு யுகமாக இருந்தது எங்களுக்கு. நான் செம்பைப் பிடித்துக்கொண்டேன். சாமியார் பூனையைப் பிடித்து இழுத்தார். பூனையோ தன் நகங்களால் சாமியாரைப் பிறாண்டி ரத்தக் காயம் ஆக்கிவிட்டது. ஐந்து நிமிஷம் அது செம்புடன் போராட, நானும் சாமியாரும் அதனுடன் போராடக் கடைசியில் அவர் எப்படியோ பூனையை ஆபத்தினின்றும் காப்பாற்றிவிட்டார். தலை வெளியிலே 'சளக்' என்று வந்தவுடன் அந்தப் பூனை வெகு வேகமாகக் கண்ணுக்குக் காணாமல் ஓடிவிட்டது. அந்தச் சிறிது நேரத்தில் பூனை உயிருக்குத் துடித்ததையும், சாமியார் அதை விடுவிக்கத் துடித்ததையும் இப்போது நினைத்தாலும் மனசுக்கு என்னவோ மாதிரி இருக்கிறது. சாமியார் கை முழுவதும் ரத்தக் காயம். அந்த வடு ரொம்ப நாள் அவர் கையில் இருந்தது; இப்போதுகூட ஒன்று இரண்டு இருக்கலாம்.

பூனைக்கு விடுதலை தந்த பிறகு அவர் வெளியே வந்தார். ''இந்தப் பூனையின் உயிரைக் காப்பாற்ற இத்தனை திண்டு முண்டாடிப் போனேமே! செம்பு தலையுடன் ஓடிக்கொண்டே இருந்தது. அதைக் கெட்டியாக இறுக்கிப் பிடிக்க முடியவில்லை; பூனை அப்படித் துள்ளியது. பூனையையும் பிடிக்க முடியவில்லை; அது நகத்தால் கீறியது. நான் செம்பைப்பிடித்துக்கொண்டதால் எனக்குக் காயம் உண்டாகவில்லை. உங்களுக்குத்தான் கை முழுவதும் காயம்'' என்றேன்.

''நல்லவேளை; அது உயிர் பிழைத்ததே!'' என்று அவர் ஆறுதலாகப் பெருமூச்சு விட்டார்.

அப்போது, பால், தயிர் இவைகளைக்



வாத்தியார் இல்லாத சிட்சை
போட்டோ: என். ராமகிருஷ்ண



கொடுக்கும் தாய் ஒருத்தி அங்கே வந்தாள். அகிலாண்டம்மாள் என்று பேர். சின்னக்குடித்தனம் ஆனாலும் பெரிய மனசு. உற்சவத்துக்கு வருகிற பக்தர்களுக்குப் பால், நெய், வேறு சாமான் தந்து, கொஞ்சங்கூடத் தன்னைக் காட்டிக்கொள்ளாமல் இருப்பவள் அந்த அம்மாள். நாங்கள் பேசிக்கொண்டிருக்கிறபோது அங்கே வந்தாள். சாமியார் கையில் ரத்தம் ஒழுகிக்கொண்டிருந்த காயங்களைக் கண்டாள்.

''என்ன சாமி இது?'' என்று பரபரப்போடு கேட்டாள். நான்தான் பதில் சொன்னேன். சாமியார் 'இடி இடி' யென்று சிரித்தார். அவர் எப்போதுமே பலமாகச் சிரிக்கிறவர். ''மனிதன் எவ்வளவு அல்பமானவன்! சக்தி அற்றவன்!' என்று அவர் நினைத்துச் சிரித்திருக்கவேண்டும்.

நான் எல்லாம் சொல்லிவிட்டு, ''அந்தப் பூனையைத் தப்ப வைக்க எவ்வளவு சங்கடமாகப் போய் விட்டது! ஒரு வழியும் தெரியாமல் திண்டாடினேம்'' என்றேன்.

அந்தத் தாய் சிரித்துக்கொண்டாள். ''இதற்குத்தானு சாமி இவ்வளவு ரத்தக் காயம் பட்டுக்கொண்டார்கள்?'' என்ருள்.

அவர் நேரே யமனேடல்லவா சண்டை போட்டுப் பூனையின் உயிரை விடுவித்திருக்கிருர்? அது அந்த அம்மாளுக்குத் தெரியவில்லையே என்று அங்கலாய்த்தேன்.

''அடுப்பாங்குழியில் செம்பையும், வெளியிலே பூனையும் இருக்கும்படி விட்டிருந்தால் பூனை தானே தலையை இழுத்துக்கொண்டு ஓடிப் போயிருக்குமே!'' -அந்தத் தாய் தான் சொன்னுள்.

''என்ன!'' என்று ஆச்சரியத்தில் மூழ்கினவனுய்க் கேட்டேன். அந்தத் தாய் மறுபடியும் விளக்கி விட்டு, ''வீட்டில் சாதாரணமாக நடக்கிறதுதான் இது'' என்று சர்வ சாதாரணமான சங்கதியைப் போலச் சொன்னுள்.

நிலையாக இருக்கும் அடுப்புக்குள் செம்பும், வெளியிலே பூனையும் இருந்தால், அது உயிருக்குப் பயந்து தலையை இழுக்கும். செம்பைக் கையிலே இறுக்கிப் பிடிக்க முடியவில்லை. நழுவியது. அடுப்பு நழுவுமா? செம்பு அதற்குள்ளிருந்து வெளியிலே வராது. அடுப்பின் வாய் குறுகல் அல்லவா? பூனை ஆத்திரத்தோடு தலையை இழுக்கும்போது செம்பின் வாய் எவ்வளவு குறுகலாகவும் இறுகலாகவும் இருந்தாலும் அதன் தலை வெளியிலே வந்துவிடும்.

இதெல்லாம் இப்போது நன்ருக விளங்குகிறது. உங்களுக்கு விளக்கமாகச் சொல்ல முடியும்; படம் போட்டுக் காட்ட முடியும். ஆனுல் அந்தச் சமயத்தில் ஒன்றும் தெரியவில்லையே!

பூனை துடித்ததைக் கண்டு நான் துடித்தது கிடக்கட்டும். அந்த அம்மாள் ரொம்பவும் சுலபமாக ஒரு வழியைச் சொன்னபோது எனக்கு எப்படி இருந்தது தெரியுமோ? 'நமக்கு என்ன தெரிகிறது? நாம் படித்த ஆயிரக்கணக்கான பக்கங்களில் இந்த வழியைக் காணவில்லையே! என்னத்தைப் படித்து விட்டோம்! உலகம் தெரியாத படிப்பு!' என்று நாணந்தான் உண்டாயிற்று. அந்த அம்மாள் புன்னகை பூத்தபடி நின்ருள். நான் நாணத்தோடு என் அறியாமையை நினைத்துக்கொண்டு நின்றேன்.



# உழவன் மகன்

டாக்டர்
மு. வரதராசனர்

கோழியைப் போலக் கொக்கரிப்பான்
குரங்கினைப் போலச் சைகைசெய்வான்
ஏழிசைக் கலைஞர் போல்நடிப்பான்
எவ்வெவற் றையோ கூவிடுவான்
மேழியைப் பிடிக்கும் உழவன்மகன்
மேட்டெரு மைபோல் குரல்தருவான்
வாழியல் குழந்தை எனவேதான்
வாய்திறந் தழுது காட்டிடுவான்.

எழிலார் சோலைச் சம்புமடை
என்றும் காக்கும் இளைஞன்அவன்
பொழிலார் நலங்கள் நுகர்ந்திடவே
பொழுது போக்காய் வந்திருப்போர்
குழையும் வகையால் குறிப்பறிந்தே
குற்றே வலுந்தான் புரிந்திடுவான்
எழுதப் படிக்க அறியாதான்
எவரும் மகிழப் பணிசெய்வான்

அமரா வதிஆற் றங்கரையில்
அரிய வளம்சூழ் வயல்களிடைச்
சமருக் கஞ்சா வீரன்போல்
சளைக்கா தெங்கும் முந்திடுவான்
இமிரும் வண்டும் செம்போத்தும்
இனிய மரங்கள் செடிகொடியும்
தமராய்ப் பழகு வஞ்சியப்பன்
தன்மை மறக்க இயலாதே.



# செல்லியும் கறுப்பனும்



கி. சந்திரசேகரன்

"கறுப்பா, கறுப்பா!''

இது செல்லியின் குரல்.

குரலைக்கேட்டதுமே எங்கிருந்தோ ஒரு நாய் ஓடோடியும் வந்து அவள் எதிரே நின்றுகொண்டு வாலை ஆட்டியது. நாயின் உடல் கறுப்பு வர்ணம். அது வெயிலில் மின்னியது. சின்ன நாயல்ல அது. ஆயினும் ஜாதி நாயல்ல என்பது அதன் முகத்தைப் பார்த்தாலே விளங்கியது.

''எங்கேடா போனே?'' என்று செல்வி அதை வாரிக் கட்டி அணைத்தாள் செல்லி. நாயும் அவள் அணைப்பின் சுகத்தை முனகலினால் தெரிவித்தது.

செல்லிக்கு வயசு ஏழு நிரம்பி விட்டது. ஆனால் அவளை அறியாதவர் சேரியில் கிடையாது. அவள் நுழையாத குடிசை இல்லை.

கறுப்பன் செல்லியிடம் வந்து சேர்ந்த விவரம் வேடிக்கையானது. இரண்டு ஆண்டுகளுக்கு முன் ஒரு நாள் காலையில் சேரிக்குச் சிறிது தொலைவில் உள்ள பங்களாவிலிருந்து ஆக்ரோஷத்துடன் துரத்தி வந்த ஒரு ஜாதி நாய், கறுப்பனை அப்படியே கபளீகரம் செய்யப் பார்த்தது. அதன் எஜமானி அம்மாள் வைத்திருந்த சோப்புக் கட்டியைக் கறுப்பன் தெரியாமல் ஏதோ தின்பண்டமெனக் கருதிக் கவ்வி வந்துவிட்டது. அவ்வளவுதான். 'உர்' என்ற உறுமலுடன் கறுப்பனைத் துரத்திய அந்த ஜாதி நாய் கறுப்பனைப் படாதபாடுபடுத்தி விட்டது. வாயிலிருந்த பண்டத்தைக் கீழே போட்ட பிறகும் துரத்தினால் கறுப்பனால் என்னதான் செய்யமுடியும்? செல்வி மட்டும் நாயின் குரைத்தலைக் கேட்டு, தன் பாதையிலிருந்து அதைக் கவனியாமல் இந்திருந்தால், கறுப்பன் மிகவும் அபாயத்தில் சிக்கி இருக்கும்.

அன்று தொடங்கி, கறுப்பன் செல்லியின் குடிசையில் தங்கிவிட்டது. இப்பொழுதெல்லாம் கறுப்பன் அடுத்த தெருவிலுள்ள எச்சில் தொட்டியில் பொழுதைப் போக்காவிட்டால், சேரியின் குப்பை மேட்டின் மேல் முன் கால்களை நீட்டிப் படுத்தபடியே ஏதாவது எலும்புத் துண்டை கடைவாயில் கெட்டியாகப் பிடித்துக்கடித்துக்கொண்டிருக்கும். மற்ற வேளைகளில் செல்லியின் இனிமையான 'சினிமா'ப் பாட்டை ரசித்துக்கொண்டு கண்களை மூடிச் சுருண்டு அவள் எதிரேயே கிடக்கும். சில சமயங்களில் மொய்க்கும் ஈக்களைத் தனது வாயினால் பிடிக்க முயலும். செல்லியினிடம் அதற்குப் பூர்ண விசுவாசம் என்பதில் எள்ளளவேனும் சந்தேகமில்லை. செல்லிக்கு நிச்சயம் சந்தேகம் கிடையாது.

செல்லியும் கறுப்பனும் கட்டிப் புரளுவதைப் பார்த்துக் கொண்டே குடிசையினுள் நுழைந்த முருகேசன் சிரித்தான்.

''ஐயோ, மவளே! நல்ல சாதி நாயா இது? ஏன் அத்தேக் கட்டிக்கினு அழுவறே? உனக்குத் தொரை வீட்டிலேந்து வேணுமானா நல்ல குட்டியாக் கொண்ணாந்து தரேன்'' என்றான்.


செல்விக்குக் கறுப்பனைத் தன் தகப்பன் மட்டமாய் நினைப்பது சுருக்கென்று இதயத்தில் தைத்தது.

''ஒண்ணும் இல்லே போ; நாயினு. கறுப்பன் ஒசந்த சாதிதான்'' என்ருள். மறுகணம் கறுப்பன் முகத்தைத் தன் முகத்தோடு வைத்துத் தேய்த்துக் கொண்டாள். தானாகவும் அதனிடம் காதோடு ரகசியம் பேசினாள்: ''கறுப்பா, யார் என்ன சொன்னாலும் உன்னே நான் விடமாட்டேன். பாத்துக்கோ!'' கறுப்பனும் அவள் பாஷை புரிந்த மாதிரிக் கண்களை மூடி மூடித் திறந்துகொண்டே அவளை நக்கிக் கொடுத்தது.

செல்லியின் தகப்பன் முருகேசன் அடையாற்றின் அருகாமையில் துரையொருவர் வீட்டில் சவாரிக் குதிரைக்குத் தீனி முதலியவைகள் வைக்கும் வேலையாளாக இருந்தான். நல்ல உடுப்புப் போடுவான். கணக்காய் வாரத்திற்கு இரு முறை க்ஷவரம் செய்து கொள்வான். ஆளும் பார்ப்பதற்கு வாட்டசாட்டமாய்த் தோன்றுவான். வயசு முப்பத்து ஐந்துதான் ஆகியிருந்தது. பாவம்! செல்லியின் தாயிடம் அவனுக்குப் பற்றுதலே கிடையாது. அவள் புல் அறுத்து வந்து விற்றுக் காசு கொணர்ந்துதான் அடுப்பை மூட்டுவாள். ஏதோ கடன் இழவே என்று சோற்றுக்கு அரிசி வாங்க ஐந்தாறு ரூபாய்களை அவளிடம் முருகேசன் தருவானே அன்றி, பாதிச் சமயங்களில் அவள் புல் விற்ற காசுதான் அவளுக்கு உதவும். எதையாவது கேட்டால், அவள் மேல் எரிந்து விழுவான். செல்லிக்கு அந்தச் சமயங்களில் வியப்பாக இருக்கும்.

தன்னிடம் கொஞ்சி விளையாடும் தன் தகப்பன் எதனால் தாயுடன் அப்படிக் கடுகடு வென்றிருக்கிருன் என்பதை அவளால் அறிய முடியவில்லை. வரவர, தன் தகப்பன் வீட்டில் இருக்கும் கொஞ்ச நேரமும் தன் தாயுடன் பேசுவதே இல்லை என்பதை அவள் கண்டாள். ஆனால் அவளுக்கு வயசு போதாததால் இதையெல்லாம் அவள் கவனிக்கவில்லை. அக்கம் பக்கங்களிலிருந்த பெண்கள், அவள் தகப்பனில்லாத பொழுது அவள் தாயுடன் வந்து பேசுவார்கள். அவள் தாய், யாரையோ, 'அந்தத் தேவிடியாளை என்ன செய்யறேன் பாரு! ஒரு நா அவளை நான் தெருவிலே பாத்துக் காறி உமியாமே போப்போறேனு!' என்று திட்டுவாள். அவள் யாரை இப்படித் திட்டுகிருள் என்று புரியாமல் செல்லி திண்டாடினாள்.

சீக்கிரத்தில் அவளுக்கு அந்தத்



தேவடியாள் யாரென்று தெரிந்து விட்டது. துரை வீட்டில் குழந்தைகளைப் பார்த்து வந்த ஆயா ஒருத்தி, நல்ல வண்ணான் மடிப்புக் கலையாத வெள்ளைத் துணி கட்டி ஒரு நாள் தன் தகப்பனோடு சினிமா பார்க்கப் போவதைச் செல்லி கவனித்துவிட்டாள். கறுப்பனை அழைத்துக் கொண்டு வெகு தூரம் நடந்து போனபோது சினிமாக்கொட்டகை வாசல் ஒன்றில், ஒருவரோடொருவர் இடித்துக்கொண்டு சென்ற தன் தகப்பனையும் அந்த ஆயாளையும் பார்த்து விட்டாள். செல்லி அச்சமயம் தன் தந்தையை நெருங்கி, "நாயினு, சினிமாவுக்கு நானும் வரேன்" என்று தொந்தரவு செய்தாள்.



அப்போது அந்த ஆயா செல்லியை ஒரு மாதிரியாகப் பார்த்ததைச் செல்லி பிற்பாடு மறக்கவேயில்லை. ஆனால் முருகேசன் மட்டும் செல்லியைக் கோபிக்காமல், "செல்லி, தோ பாரு, உனக்கு நல்ல சாதி நாயாக் கொண்ணாந்து தருவேன். இப்போ ஊட்டுக்குச் சல்தி போ" என்று கூறினான். அதனுடன் பக்கத்திலிருந்த ஆயாவிடம், "நம்ம 'சூசி' குட்டி போட்டா, ஒண்ணு எப்படியாச்சியும் கொண்டுவா, அம்மே! என்ன நிச்சயந்தானே!" என்று புன்னகையுடன் கேட்டான் செல்லியின் எதிரே. ஒரு ஜாதி நாய் நிச்சயம் அந்த ஆயாவிடமிருந்து எதிர்பார்க்கலாம் என்பதைப்போல் ஆசை காட்டினான். செல்லிக்குப் புது நாயிடமா ஞாபகம்? அவள்தான் கறுப்பனைக் கைவிடாதவளாயிற்றே! தன் தகப்பன் பக்கத்திலிருந்த பெண்ணின் மேலாடையையும் அவள் நாசூக்காக அணிந்திருந்த ஜாக்கெட்டையும் கவனிப்பதில் முனைந்திருந்தாளே தவிர, தன் தகப்பன் சொன்னவைகளைப் பொருட்படுத்தவேயில்லை.

இது நடந்த கொஞ்ச நாளைக்கெல்லாம் ஒரு நாள் சாயந்தரம் செல்லி கறுப்பனுடன் குடிசைக்குத் திரும்புகையில் உள்ளே அமர்க்களப்பட்டுக் கொண்டிருந்த பேச்சைக் கேட்டு நின்று விட்டாள்.

அவள் தகப்பன் குரல், "என்னதான் செய்யணும்? நான் அப்படித்தான் போவேன். நீ என்ன பண்ணணுமோ பண்ணிக்கோ!" என்று கர்ஜித்தது.

அவள் தாயும் பதிலுக்கு, "நான் செத்துத் தொலையறேன்! நீ அவளைக் கட்டிக்கினு சந்தோசமா ஆளு" என்றாள்.

"ஒழி, செத்துப் போ" என்றான் முருகேசன்.

செல்லியின் இதயம் வெடித்து விடும்போல் வேதனைப்பட்டது. கறுப்பனை அவள் கை தானாகவே தடவிக் கொடுத்தது. கறுப்பனும் அவள் கையை நக்கிக் கொடுத்தது.

செல்லியைக் கண்டதும் முருகேசன் குடிசையின் வெளியே வந்தான். ''தோ பாரு செல்லி, இன்னிக்கி ஒரு சாதி நாக்குட்டி வருது உனக்கு. இத்தெத் தொலைச்சுக் கையைக் கழுவு'' என்றான். அவன் முகத்தில் தெம்பு தாண்டவமாடியது.

ஆனால் செல்லி சொன்ன பதில் தான் அவனை ஒரே நொடியில் வாயடைக்க வைத்தது.

''போ, நாயினா, நா ஒண்ணும் உன்னாட்டமா இல்லே, நெனச்சா கறுப்பனை வாணான்னு சொல்ல. எனக்கும் கறுப்பனுக்கும் நடுவே யாரும் வரக்கூடாது. நாங்க ரெண்டு பேரும் சேந்துதான் இருப்போம். இல்லேடா கறுப்பா!'' என்று கூறி, கறுப்பனை இறுக அணைத்தாள். கறுப்பனும் வாலை ஆட்டி, ஆட்டி அவளிடமுள்ள பாசத்தையெல்லாம் முனகலினாலும் நாவினாலும் தெரிவித்தது.

முருகேசன் யோசனையுடன் வெளியே போனான்.

---

## அவனா, இவனா?






மூங்கிலைக் கொண்டு கூடை, முறம் செய்கின்றவர்களைப் பார்த்திருக்கிறீர்களா? அவர்களுக்கு மேதரவர் என்று பெயர். அவர்கள் தங்கள் குடும்பத்தோடு ஊர் ஊராகச் சென்று ஒவ்வொரு ஊரிலும் சில நாட்கள் தங்குவார்கள். அவர்களுக்கு வீடு ஒன்றும் கிடையாது. போய்த் தங்குகிற இடத்தில் கூடாரம்கூடப் போட்டுக்கொள்ள மாட்டார்கள். நல்ல நிழல் கொடுக்கும் படியான ஒரு பெரிய மரம் இருந்தால் போதும். அதனடியில் தங்கித் தங்கள் தொழிலைச் செய்து வயிறு வளர்ப்பார்கள். மேதரவர் நீளமான மூங்கில்களை ஒரு கற்றையாகக் கட்டிக்கொண்டு வந்திருப்பார்கள். ஊராருக்குத் தேவையான கூடை, தட்டம் முதலான சாமான்களைச் செய்து கொடுத்துக் காசும் தானியமும் சம்பாதிப்பார்கள்.

இப்படிப்பட்ட மேதரவர் கூட்டம் ஒன்றிலே ஒரு கிழவியும் ஒரு சிறு பையனும் இருந்தார்கள். கிழவி அவனுக்குப் பாட்டி. கிழவியால் ஊருக்குள்ளே சுற்றிச் சாமான்களை விற்க முடியாது. சிறுவனாலும் நடக்க முடியாது. ஆதலால் அவர்கள் இரண்டு பேரும் மரத்தின் அடியிலேயே இருப்பார்கள். மற்றவர்கள் அனைவரும் ஊருக்குள்ளே போய்த் தாங்கள் செய்த கூடை முறங்களை விற்பார்கள். கிழவிக்கு மூங்கிலைக் கொண்டு வேலை செய்யவும் சக்தியில்லை. ஆனால் அவள் பனை ஓலையைக்கொண்டு அழகான விளையாட்டுப் பொம்மைகள் செய்வாள். சிறுவன் பெயர் தங்கவேல். கிழவி அவனைச் செல்லமாகத் 'தங்கம்' என்று கூப்பிடுவாள்.

ஒரு சமயம் அந்த மேதரவர் கூட்டம் ஒரு சிறு கிராமத்திலே வந்து தங்கியது. அந்த ஊரிலே பணக்காரர்கள் நிறைய உண்டு. அவர்கள் வீட்டுக் குழந்தைகள் புதிய புதிய விளையாட்டுப் பொம்மைகள் வேண்டும் என்று கேட்டார்கள். அதனால் அந்தக் கிழவி புதிதாகக் கற்பனை பண்ணி ஓலையாலே பின்னி ஓர் அழகிய கிளி செய்தாள். பச்சிலைகளையெல்லாம் பிடுங்கி வந்து அதற்கு அழகாகப் பச்சைச் சாயம் கொடுத்தாள். செம்மண்ணைக் கரைத்துக் கிளியின் மூக்குக்கு அழகான சிவப்பு நிறம் கொடுத்தாள். அந்தப் பொம்மைக் கிளி பார்ப்பதற்கு உயிருள்ள கிளிபோலவே இருந்தது.

ஒவ்வொரு குழந்தையும் தனக்கே அது வேண்டும் என்று போட்டி போட்டது. அதனால் கிழவி அதைப் போலவே இன்னும் பல கிளிகள் செய்தாள். அவளுக்குப் பணம் நிறையக் கிடைத்தது.



''தங்கம், இந்தப் பணத்தையெல்லாம் வைத்து உனக்கு நல்ல சொக்காய் வாங்கிக் கொடுக்கிறேன்'' என்று சிறுவனிடம் கிழவி ஆசையோடு சொன்னாள்.

அதைக் கேட்டுத் தங்கவேல் மகிழ்ச்சி யடையவில்லை. நாளுக்கு நாள் அவன் முகம் வாடத் தொடங்கியது. ஏனென்றால் அவனுக்குப் பாட்டி செய்யும் கிளிகளிடம் அத்தனை ஆசை. அவற்றை அந்த ஊர்ச் சிறுவர்கள் வாங்கிக்கொண்டு ஓடுவதைப் பார்த்து அவன் மனம் வருந்தினான்.

''தங்கம், இந்தக் கிளியெல்லாம் நமக்கு எதற்கு? காசிருந்தால் என்ன வேணுமானாலும் வாங்கலாம். பொம்மை சோறு போடுமா?'' என்றாள் கிழவி. இருந்தாலும் சிறுவனுக்குச் சமாதானம் ஏற்படவில்லை.

மறு நாள் ஒரு சிறுமி கிழவியிடம் வந்து அவளுக்கு ரொம்பப் பெரிய கிளியாக வேண்டும் என்று கேட்டாள். அவள் தகப்பனார் தான் அந்த ஊரிலே எல்லோரையும் விடப் பெரிய பணக்காரர். அதனால் கிழவி அந்தப் பெண் விரும்பியவாறே பெரிய கிளி செய்து தருவதாக ஒப்புக்கொண்டாள்.

''இன்றைக்குச் சாயங்காலமே கொடுக்கவேணும்; நிறையக் காசு கொடுப்பேன்'' என்று சொல்லிவிட்டு, அந்தப் பெண் மச்சு வீட்டுக்குள்ளே போய்விட்டாள். தங்கவேல் அவளையும், அந்த மச்சுவீட்டையும் ஆசையோடு பார்த்துக் கொண்டே நின்றான்.

கிழவி உடனே வேலை செய்யத் தொடங்கினாள். உண்மைக் கிளியைப் போலப் பத்து மடங்கு பெரியதாக இருக்கும்படி ஒரு கிளி செய்தாள். அது கொஞ்சங் கொஞ்சமாக வடிவங் கொள்ளுவதைப் பார்க்கப் பார்க்கத் தங்கவேலுக்கு மச்சு வீட்டைப்பற்றிய நினைப்பு மறந்து போய், சந்தோஷமுண்டாகி விட்டது.

மாலை நேரத்திற்குள்ளே கிளி அழகாக வடிவம் எடுத்துவிட்டது. சிறுவனுக்கு ஒரே ஆனந்தம்.

கிழவி அதை எடுத்துக் கொண்டு எதிரேயுள்ள மச்சு வீட்டுக்குப் புறப்பட்டாள். அப்பொழுதுதான் தங்கவேலுவுக்கு உண்மை புலப்பட்டது. அவன் கிழவியின் கையைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு, ''பாட்டீ, இந்தக் கிளி எனக்கு. இதை யாருக்கும் கொடுக்க வேண்டாம்'' என்றான்.

''டேய், தங்கம். சும்மா இருக்கமாட்டாயா? பிடிவாதம் செய்




தால் அடி கிடைக்கும்'' என்று மிரட்டிவிட்டுக் கிழவி நடக்கலானாள். அவளுடைய சேலையைப் பிடித்து அழுதுகொண்டே தங்கவேலுவும் கூடவே போனான்.

மச்சுவீட்டு வா ச ற் ப டி யை அடைந்ததும் கிழவி, ''அம்மா, கிளி செய்தாச்சு; வா ங் கோ!'' என்று கத்தினாள். வீட்டிற்குள்ளிருந்த அந்தச் சிறு பெண் குதூகலத்தோடு ஓடிவந்தாள்.

''கிழவி, இது உன் பேரனா? அவனுக்கும் ஒரு கிளி பண்ணிக் கொடுக்கிறதுதானே?'' என்றாள்.

''அவனுக்குக் கிளி எதுக்கம்மா? அவன் அப்படி விளையாடிப் பழகினால் சோத்துக்கு எங்கே போறது? நினைவு தெரியாத போதே இவன் வேலை செஞ்சு பழகணும்'' என்று கிழவி பதில் சொன்னாள்.

அந்தச் சிறுமி கிளியைத் தூக்கிக்கொண்டு உள்ளே ஓடி விட்டாள்.

கிழவிக்குக் காசு தாராளமாகக் கிடைத்தது. அதைப் பெற்றுக்கொண்டு அவள் திரும்பி நடக்கலானாள். த ங் க வே ல் தேம்பிக்கொண்டே பின்னால் வந்தான். மச்சு வீட்டு வெளி வாயிலுக்கு முன்னால் குப்பையிலே பி ய் ந் து போன ஒரு சிறிய கிளிப் பொம்மை கிடந்தது. அதுவும் கிழவி இரண்டு நாட்களுக்கு முன் செய்து கொடுத்ததுதான்.

தங்கவேல் அதைத் தூக்கிக்கொண்டான். அந்தப் பி ய் ந் து போன கிளியையாவது வைத்துக்கொள்ள வேணுமென்று அவனுக்கு ஆசை.

அன்று இரவிலே படுத்துத் தூங்கும் போது தங்கவேல் அ ந் த க் கிளியைத் தன் பக்கத்திலேயே வைத்துக்கொண்டான். ஆ னா ல் அவனுடைய நினைப்பெல்லாம் அந்தப் பெரிய கிளியின்மேல் தானிருந்தது. அதை நினைத்து நினைத்துக் கொஞ்ச நேரத்திற்கு ஒரு தரம் தேம்பினான். பிறகு அப்படியே தூங்கிவிட்டான்.

தூக்கத்திலே அந்தக் கிளி, ''தங்கம், தங்கம்'' என்று அவனை மெதுவாகக் கூப்பிட்டது.

தங்கவேல் கண்ணை விழித்துப் பார்த்தான். அவனுக்கு யார் கூப்பிடுகிறாரென்று முதலில் தெரியவில்லை. ''தங்கம், நான்தான் கூப்பிட்டேன். எழுந்து என் முதுகின்

## "தீமைதனைக் கேளாதே, பேசாதே, பாராதே!"

—காந்திஜி.



போட்டோ: கி. துவாரகாநாதன்.

மேல் ஏறிக்கொள். உன்னை ஒரு மாளிகைக்கு எடுத்துச் செல்லுகிறேன்'' என்றது அந்தக் கிளி.

தங்கவேலுவுக்கு அளவில்லாத மகிழ்ச்சி உண்டாகிவிட்டது. உடனே அந்தக் கிளியின் முதுகில் ஏறி உட்கார்ந்தான். கிளி லாகவமாக இறக்கைகளை விரித்து அவனைத் தூக்கிக்கொண்டு ஆகாய மார்க்கமாகப் பறந்தது. முன்னால் கிழிந்து போனதாகத் தெரிந்த அந்தக் கிளி இப்பொழுது நன்றாகப் பறந்தது. ஆகாயத்தில் பறப்பதிலே தங்கவேலுவுக்கு ஒரே ஆனந்தம். கீழே தோன்றும் காட்சிகளையெல்லாம் ஆச்சரியத்தோடு பார்த்துக்கொண்டே சென்றான்.

உயரத்தில் இருக்கும்போதே வெள்ளை வெளேரென்று முத்து மாளிகை கண்ணில் தென்பட்டது. அந்த மாளிகையில் போய் கிளி இறங்கியது.

தங்கவேலுவை எதிர்கொண்டழைப்பதற்காக அங்கே எத்தனையோ வேலைக்காரர்கள் காத்துக்கொண்டிருந்தார்கள். அவர்கள் மரியாதையுடன் தங்கவேலுவை உள்ளே அழைத்துக்கொண்டுபோய் வாசனையூட்டிய நீரில் குளிக்க வைத்து உயர்ந்த பட்டாடைகளால் அலங்காரம் செய்தார்கள். வகை வகையான பட்சணங்களோடு உணவு பரிமாறினார்கள். தங்கவேலுவுக்கு எல்லாம் ஒரே ஆச்சரியமாக இருந்தது.

எங்கே பார்த்தாலும் நவரத்தினங்கள் நட்சத்திரங்களைப் போலப் பிரகாசித்துக்கொண்டிருந்தன. அழகுமிகுந்த ஓவியங்களும் சிற்பங்களும் கண்ணுக்கு விருந்தளித்தன. அந்தச் சிறு பெண்ணின் மச்சு வீட்டைவிட இந்த மாளிகை எத்தனையோ மடங்குச் சிறப்பாக இருந்தது. மாளிகைக்கு வெளியே

பலவகையான மலர்கள் பூத்துக் குலுங்கும் உய்யான வனம் இருந்தது. அதிலே நீரூற்றுக்கள் சிலுசிலுவென்று ஓடிக்கொண்டிருந்தன. குயில்கள் பாடின; மயில்கள் ஆடின; பச்சைக் கிளிகள் கொஞ்சிக் கொஞ்சிப் பேசின.

இன்ப லோகத்தில் இருப்பதாக அவனுக்குத் தோன்றியது. அப்படியே ஒரு வெல்வெட் மெத்தை விரித்த கட்டிலிலே சாய்ந்து தூங்கிப் போய்விட்டான்.

தங்கவேல் மறுபடியும் கண்ணை விழிக்கும்போது பழையபடி மரத்தின் அடியிலே ஓலைத் தடுக்கின் மேல் படுத்திருந்தான். கொஞ்ச நேரத்திற்கு முன் அவன் மேலிருந்த பட்டாடைகளையெல்லாம் இப்பொழுது காணோம். கிழிந்துபோன பொம்மைக்கிளி பக்கத்தில் இருந்தது. பாட்டி கொஞ்ச தூரத்தில் வெறுந்தரையில் படுத்திருந்தாள். தங்கவேலுவுக்கு முதலில் கொஞ்சம் ஏமாற்றமாகத்தான் இருந்தது. ஆனால் பக்கத்திலே கிளிப்பொம்மையைப் பார்த்ததும் மனத்துக்குத் தைரியம் வந்தது. அந்தப் பொம்மை இருக்கும்வரையில் மறுபடியும் அந்த மாளிகைக்குப் போகலாம் என்ற நம்பிக்கை உண்டாயிற்று.

தங்கவேலுவின் நம்பிக்கை வீண் போகவில்லை. ஒவ்வொரு நாளும் அவன் தூங்கும்போது அந்தக் கிளிப்பொம்மை அவனை எங்கெல்லாமோ அதிசயமான இடங்களுக்குக் கொண்டு போவதாக அவன் கனவு கண்டான்.

அது முதல் பாட்டி புதிய புதிய கிளிகள் செய்து விற்கும்போது அவன் முன்போலக் கவலைப்படவில்லை. சந்தோஷமாகவே ஊரிலுள்ள குழந்தைகளுக்கு அவனே அந்தப் பொம்மைகளை எடுத்து வந்து கொடுப்பான்.

கிழவிக்கு இப்பொழுது அவனிடத்தில் கொஞ்சங்கூடக் கோபம் கிடையாது. ''தங்கம் நல்ல பையனாகி விட்டான்; இனிமேல் அவன் தொழில் செய்து பிழைத்துக் கொள்வான்'' என்று மனத்திற்குள்ளேயே மகிழ்ச்சியடைந்தாள்.



# புரியுமா?

## கி. சரஸ்வதி அம்மாள்

"என்ன அநியாயம்; இந்த அக்கிரமத்தைப் பார்த்தேளா!'' - இது அம்மாவின் குரல். அவள் எதைப் பார்த்துவிட்டு இவ்விதம் பெரிய குரலெடுத்துக் கூவுகிறாள் என்பது கிட்டுவுக்குத் தெரிந்தது. அழகான பச்சைக் கிளிக் கூட்டம், அவர்கள் தோட்டத்தில் செழிப்பாய் வளர்ந்து நிறையக் காய்களுடன் இருந்த பட்டாணிச் செடிகளில் உட்கார்ந்து கொம்மாளம் அடித்துக்கொண்டிருந்தது. அப்பொழுது இருட்டுக்கூட நன்றாகப் பிரியவில்லை. கிளிகளுடைய 'கிக்கிக்கீ' என்கிற குரலைக் கேட்டுத்தான் அவன் விழித்துக்கொண்டான். ஜன்னலண்டை ஓடிப் பார்த்தான். அடே அப்பா, எத்தனை கிளிகள்! அவைகள் எங்கிருந்துதான் வந்தனவோ! ஒரே பச்சை உடலும் சிவப்பு மூக்குமாக, கண்ணைப் பறிக்கிற அழகுடன் பட்டாணிச் செடிகள் நிறைய உட்கார்ந்திருந்தன. அவை போட்ட கீச்சுக் கீச்சுச் சத்தம் சொல்லி முடியாது; அவ்வளவு உற்சாகம்!

பட்டாணிக் காய்களைக் கைகளால் உரிப்பதுபோல் உரித்து உள்ளிருக்கும் பருப்புகளை அல்லவா தின்றிருக்கின்றன! செடிகளில் காய்களின் மேல்தோலிகள்தான் தொங்கிக்கொண்டிருந்தன.

''நம்மாலேகூட இதுமாதிரி அழகாக உரித்து எடுக்க முடியாது போலிருக்கே! கிளிகளுடைய வேலை தானா? பார்த்தாயா?'' என்று அப்பா, அம்மாவைப் பார்த்துக் கேட்டுக்கொண்டிருந்தார்.

''நன்னாயிருக்கு. நான்தான் கண்ணால் பார்த்தேனே'' என்றாள் அம்மா. ''நான்கூட இப்படிப் பார்த்ததே இல்லேம்மா'' என்று ஆள்கார முனியனும் சொன்னான். 'இன்னமும் அவை மற்றக் காய்களையும் நாசம் செய்யாமல் இருக்க என்ன பண்ணலாம்?' என்று அம்மாவும் அவனுமாக யோசனை செய்தார்கள். சோளக் கொல்லைக்குக் காவல் வைப்பார்களே, அதுபோல் பொம்மை செய்து வைத்தார்கள். சட்டியிலே கரும்புள்ளி செம்புள்ளி குத்தி மாட்டினார்கள். ஒன்றும் பிரயோஜனமில்லை. பயமுறுத்துவதற்காக வைத்திருந்த பொம்மை மேலேயே அவை 'ஜம்' மென்று உட்கார்ந்து விளையாடத் தொடங்கின.

அம்மா முனியனிடம், ''ஏண்டா, பறவை சுடுகிற துப்பாக்கி வாங்கி வந்து சுடலாமா?'' என்று கேட்டாள். கிட்டுவுக்குத் தூக்கிவாரிப் போட்டது. ''அம்மா, வேண்டாம்மா. பாவம், கிளிகள் பட்டுப் போல என்ன அழகாயிருக்கு! ஒண்ணுக்கொண்ணு கொஞ்சிக் கொஞ்சி என்ன பேச்சுப் பேசுகிறது! அவைகளைச் சுட்டால் பாவந்தான் வரும்'' என்று கெஞ்சினான்.

''பாவமா! நன்னாயிருக்கு, அவைகளை ஒண்ணுகூட விடாமல் கொன்னாலும் தோஷமில்லை'' என்றாள் அம்மா. அவளுக்கு அத்தனை கோபம். முனியன் ஒரு யோசனை சொன்னான்; ''என் மவன் இருக்கிறானம்மா, சின்னப் பய. அவனைக் காவலுக்குப் போடுவோம். அவன் கிளிகளை விரட்டி அடிச்சுடுவான்'' என்றான். அப்படியும் அம்மாவுக்குச் சந்தேகம், 'சின்னப் பயலாச்சே எழுந்திருப்பானோ?' என்று. ''அம்மா, என் தங்கச்சி பெண்ணு வந்திருக்கிறா. சின்னப்

பொண்ணுதான். சூரி; வெகு சூடிகை. அவளும் வந்தா, தானும் எழுந்து, பயலேயும் எழுப்பிவிடுவா. இரண்டு பேருமே நல்லாப் பாத்துக்குவாங்க'' என்ருன் முனியன். அப்படியே ஏற்பாடாகிவிட்டது.

ஆனல் கிட்டுவுக்குத்தான் பறவைகள் இனி வராமல் போய்விடுமே என்று வருத்தமாக இருந்தது. வராந்தாவில் அந்தச் சிறுவனும் சிறுமியும் வந்து படுத்துக்கொண்டார்கள். அதிகாலையில் 'கலகல' என்கிற அவர்கள் பேச்சுக் குரல் கேட்டுத்தான் கிட்டு எழுந்திருப்பான். அவர்கள் இருவரும் போட்டி போட்டுக்கொண்டு, சுற்றிச் சுற்றி வந்து கிளிகளை விரட்டுவதைப் பார்க்க அவனுக்கு வேடிக்கையாக இருந்தது. செடிகளிலே அவைகளை உட்கார விடாமல் செய்துகொண்டிருந்தார்கள். கிளிகள் கீச்சுக் கீச்சென்று கத்திக்கொண்டு நாலுபுறமும் பறந்தோடின. அன்ருடம் விடியும் பொழுது இது ஒரு விளையாட்டாக இருந்தது. அவனும் சில சமயம் அவர்களோடு சேர்ந்து கிளிகளை விரட்டினுன். ஒருவிதமாய்க் கிளிகள் வருவது நின்று போயிற்று. பட்டாணிக்காய்களும் பத்திரமாய் உள்ளே வந்து சேர்ந்துவிட்டன. அதற்குப் பிறகும் அந்த பையனும் பெண்ணும் தோட்டத்தைவிட்டுப் போகவில்லை. பகலெல்லாம் அங்கேயே சுற்றி வந்துகொண்டிருந்தார்கள். அவர்கள் பேச்சும் சிரிப்பும், சில சமயம் சண்டையும் அழுகையும், அதோடு முனியனுடைய அதட்டலும் அடிக்கடி கேட்கும்.

முனியனுவது சாப்பாட்டிற்கு வீடு சென்று சிறிது பொறுத்துத்தான் வருவான். அவர்கள் சாப்பாட்டிற்குக்கூடப் போவதில்லை. அங்கேயே சோறு கொண்டுவந்து சாப்பிட்டார்கள். தோட்டத்துக் குழாயடியில் பல்தேய்த்துக் குளித்து எல்லாம் செய்தார்கள். அவர்கள் ஒருவருக்கொருவர் எண்ணெய் தேய்த்துத் தலை முழுக்காட்டிக் கொள்வதுகூட அவ்விடத்தில்தான். இவைகளையெல்லாம் பள்ளிக்கூட நேரம்போக மற்ற நேரங்களில் கிட்டு வெகு சுவாரசியமாகப் பார்த்துக்கொண்டிருந்தான். கிளிகள் போய்விட்டனவே என்கிற வருத்தங்கூட அவனுக்கு இப்பொழுது இல்லை. பல சமயம் அவர்களோடு சேர்ந்து விளையாடினுன். பொழுது போவதே தெரியவில்லை. 'நமக்கும் இதுபோலச் சொந்தமாக ஒரு தோழிப் பெண் கிடைக்க மாட்டாளா?' என்கிற ஆசை எழுந்தது அவனுக்கு. ''ஏம்மா, ஊரிலே நம்ம மாமா பெண் இருக்கிருளே, அவள் ஏனம்மா இங்கே வரக்கூடாது!'' என்றுகூடக் கேட்டான்.

''அவள் வந்தால் சும்மா இருப்பாளா? உனக்குச் சரியாகச் சண்டை போடுவாளே'' என்ருர் அப்பா, விளையாட்டாக.

''ஏன் சண்டை போடணுமாம்?'' என்ருள் அம்மா.

''ஆமாம், உன் மருமகள்தானே, உன்னைப்போலத்தானே இருப்பாள்?'' என்ருர் அப்பா.

''நான் சண்டைக்காரியா? தேவலையே!'' என்று அம்மா கோபித்துக்கொண்டாள்.

''சின்ன வயசிலே உன்னிடம் நான் பட்டிருக்கிற பாடு எனக்குன்னு தெரியும்!'' என்று மேலும் அப்பா விடாமல் சொன்னுர்.





தின்ன ஆசை இராதா? கீழே விழும் அணில் கடித்த பழங்களெல்லாம் அவர்களுக்குத்தான். யாரும் பாராதிருக்கும் சமயங்களில் சமீபத்தில் இருக்கும் பழங்களுள் ஒன்றிரண்டைப் பறித்தும் தின்பார்கள்.

கிட்டு அவர்களைத் தேடிச் செல்வான். அவனைக் கண்டதும் அவர்கள் கையிலுள்ளதைத் தூரப் போட்டுவிட்டுச் சும்மா இருப்பார்கள். அவனும் அதைப் பாராதவன் போலவே இருப்பான். அப்பா, அம்மாவிடமும் சொல்லமாட்டான். அவனுக்கு அவர்களைக் கண்டிக்க மனமில்லை. மரம் நிறையத்தான் பழங்கள் இருக்கின்றனவே! தின்னால் தின்று விட்டுப் போகட்டுமே என்று இருந்துவிடுவான்.

''போருமே, அவன் குழந்தை, நிஜம்னு நினைச்சுக்கப் போறான்'' என்று அம்மா, அப்பாவை அடக்கினாள். அம்மா, அப்பாவினுடைய அத்தை பெண். சிறு வயதிலிருந்து அவர்கள் அடிக்கடி ஒன்றாய் வசித்தவர்கள்.

கிட்டுவின் வீட்டைச் சுற்றி நாலுபுறமும் தோட்டம் அமைந்திருந்தது. கொய்யாமரம், மாமரம் எல்லாம் ஒரு பக்கம் இருந்தன. கொய்யா மரத்தில்தான் எத்தனை காய்கள்! அதன் ருசியும் தனிதான். அப்படி இருக்கும் பொழுது அம்மா அவைகளை ஜாக்கிரதையாகக் காப்பாற்றப் பாடுபடமாட்டாளா? அணிற் பிள்ளைகள் பகலெல்லாம் ஓயாமல் காய்களைக் கடித்துக்கொண்டிருந்தன.

இப்பொழுது தோட்டக்காரப் பையனையும் பெண்ணையும் கொய்யா மரத்திற்குக் காவல் வைத்தாள் அம்மா. கிளிகளை விரட்டுவதுபோல் காலையில் சில மணி நேர வேலை அல்ல அது. பகல் முழுதும் காவல் காக்க வேணும்; கையிலே தடிக்கம்புடன் மரத்தைச் சுற்றிக்கொண்டிருக்க வேண்டும். அப்படியும் அணில்கள் ஏமாற்றிவிட்டுப் பழத்தைக் கடித்துப் போட்டுவிடும். மேலும், பையனுக்கும் பெண்ணுக்கும்மட்டும் கொய்யாப் பழங்களைத்

ஒரு நாள் அந்தப் பையன் மரத்தின் மேலேயே ஏறிப் பழம் பறித்துக்கொண்டிருந்தான். அந்தப் பெண்ணும் மரத்தடியில் நின்று அண்ணாந்து பார்த்துக்கொண்டிருந்தாள். கிட்டு வந்தான். ''ஏண்டா, மரத்தில் ஏறிப் பறிக்கிறே? அம்மா பார்த்தால் என்ன ஆகிறது?'' என்றான். ''இல்லே, கிட்டு'' என்று ஏதோ சமாதானம் சொல்லிக்கொண்டு பையன் அவசரமாய் இறங்கினான்.

அதற்குள் அம்மாவே வந்துவிட்டாள். கிட்டு பயந்தே போனான். 'பட்டாணிகளைத் தின்ற கிளிகளையே கொன்றுவிட வேண்டும்' என்று அம்மாவுக்குக் கோபம் வந்ததே; பழத்தைப் பறித்த பையனையும் பெண்ணையும் அம்மா சும்மா விடுவாளா? வேலையை விட்டு விரட்டி விடுவாளே!' என்றுதான் நினைத்தான். அவர்களுக்காகமட்டும் அவன் மனம் கஷ்டப்படவில்லை. தனக்காகவுந்தான் வருத்தப்பட்டான். அவர்கள் போன பிறகு அவனுக்குப் பொழுது எப்படித் தான் போகும்?

''ஏண்டா, மரத்தில் ஏறிப் பழமா பறிக்கிறே? நல்ல காவல்டா நீ!'' என்று அதட்டும்போதே அந்தப் பெண், ''அம்மா, நான்தான் அம்மா கேட்டேன், அவனா பறிக்கல்லே'' என்றாள். பையனை என்ன செய்துவிடுவார்களோ என்று அவளுக்கு நடுக்கம். கிட்டு பயந்தபடி ஒன்றும் நேரவில்லை. அந்தப் பெண்ணின் நடுக்கத்தையே சிறிது நேரம் பார்த்துவிட்டு, ''என்ன பெண்ணடீ நீ! அவனைத் தப்புக் காரியம் செய்யச் சொல்லலாமா? இதுமாதிரி இனிமே செய்தா உங்க ரெண்டு பேரையுமே உதைச்சு அனுப்புவேன், தெரியுமா?'' என்று அதட்டுவது போலச் சொல்லிவிட்டுப் போய்விட்டாள்.


கிட்டுவுக்கு ஆச்சரியம் தாங்கவில்லை. அதிசயித்து நின்றான்.

அம்மா சிறு பெண்ணாயிருந்த பொழுது ஒரு விஷயம் நடந்தது: கிராமத்தில் அவள் தன் மாமா வீட்டுக்குப் போயிருந்தாள். அந்த மாமாதான் இப்போது அவள் மாமனார். அவளும், கிட்டுவின் அப்பாவும் அப்பொழுது அத்தங்காள் - அம்மாஞ்சி மட்டுந்தான்; இருவருமாகக் கொல்லைக் காடு சுற்றுவார்கள். ஒரு நாள் அவளுக்காகப் பழம் பறிக்க மாமரத்தின் உயரக் கிளை ஒன்றில் ஏறினான் அம்மாஞ்சி. அதுசமயம் அவர்கள் தாத்தா திடீரென்று அங்கு வந்துவிட்டார். அவர் சற்றுக் கோபக்காரர். ''யாருடா அங்கே மரத்தின் மேலே? இறங்குடா'' என்று அதட்டினார். எங்கே அம்மாஞ்சியை அடித்துவிடுவாரோ என்று அவளுக்குப் பயம் வந்துவிட்டது. அம்மாஞ்சியிடம் அவளுக்கு அத்தனை பிரியம். அதைத் தடுப்பதற்காக, ''நான்தான் தாத்தா, பழம் கேட்டேன்'' என்று நடுங்கினபடி தாத்தாவின் கால்களை இறுகக் கட்டிக்கொண்டாள். பேத்தியைக் குனிந்து பார்த்த தாத்தாவின் கோபம் தணிந்துவிட்டது.. ''அடி அசட்டுப் பெண்ணே, என்ன காரியம் பண்றே? அவன் அத்தனை உயரத்திலிருந்து விழுந்து காலை முறித்துக்கொண்டால், நீ நொண்டி ஆம்படையானைக் கட்டிக்கொண்டுன்னா காலம் தள்ளணும்!'' என்று சொன்னார். ''ஏண்டா, பெண்டாட்டி சொன்னா எதுவேணா செய்யறதா? சாவதானமாய் இறங்கி வாடா!'' என்று அம்மாஞ்சியையும் செல்லமாய் அதட்டினார். அவளுக்கு வெட்கம் வந்துவிட்டது; உள்ளே ஓடிவிட்டாள்.

சிறுவயதில் நடந்த அந்தச் சம்பவம் நினைவுக்கு வந்துவிட்டது அம்மாவுக்கு.

அவர்களைக் கண்டிக்க அவளுக்கு மனம் எப்படி வரும்?

ஆனால் இதை எல்லாம் விளக்கிச் சொன்னாலும் கிட்டுவுக்குப் புரியுமா? அவனுக்கு ஆச்சரியமாகத்தான் இருந்தது. அவர்களை விரட்டாமல் போனது ஆறுதலாகவும்தான் இருந்தது.





# யானையின் பழக்கடை

சரஸ்வதி

காட்டில் வசித்துக்கொண்டிருந்த ஒரு யானைக்கு ஏதாவது வியாபாரம் செய்ய வேண்டும் என்று ஆசை உண்டாயிற்று. தீபாவளி சமயமும் நெருங்கியதால் ஒரு பழக்கடை வைத்து நிறைய லாபம் சம்பாதிக்க எண்ணம் கொண்டது. இந்த யோசனையை அதன் மனைவியும் அதன் பிள்ளையும் ஏகமனதாக ஒப்புக் கொண்டன. ஆனால் பெரிய யானைக்குக் கடையில் யாரை நம்பி வைப்பது என்ற யோசனைதான் பலமாக இருந்தது. "இதற்கு யோசனை என்ன? நம்ப பையனுக்கு இப்போ பள்ளிக்கூடம் சாத்தி இருக்கா. தீபாவளி கழிச்சுத்தான் திறக்கப் போறு. அதுவரையிலும் அவன் கடையைக் கவனிச்சுக்கட்டுமே" என்று சொல்லிற்று யானையின் மனைவி. யானையும் அந்த யோசனையை ஒப்புக் கொண்டது.

மறுநாள் காலையில் புதிதாக ஒரு பழக்கடை காட்டில் உள்ள பெரிய கடை வீதிக்குப் பக்கத்திலே தோன்றிற்று. அந்தக் கடைக்கு முன்னால், 'யானையின் பழக்கடை. இங்கே காட்டுப் பழங்கள், நாட்டுப் பழங்கள் - எல்லா விதமான பழங்களும் கிடைக்கும்' என்று ஒரு பலகையில் எழுதியிருந்தது. யானைக்குட்டி உட்கார்ந்துகொண்டு வியாபாரத்தைக் கவனித்தது.

புதிய கடையாதலால் பழக்கடைக்கு மிருகங்கள் கூட்டம் கூட்டமாக வந்தன. யானைக் குட்டியும் வந்த மிருகங்களை எல்லாம் விசாரித்து, பழங்களை விற்று

வந்தது. பெரிய யானை வாங்கி வந்த பழங்களெல்லாம் சாயங்காலத்திற்குள் விற்றுப் போயின. அதைப் பார்த்த பெரிய யானை சந்தோஷம் அடைந்து தினந்தோறும் விதவிதமான பழங்கள் எல்லாம் வாங்கி வந்தது. யானைக்குட்டியும் தன் சாமர்த்தியத்தினால் காலையில் தன் தகப்பனார் வாங்கி வந்த பழங்களைச் சாயங்காலத்திற்குள் காலி ஆகும்படி செய்தது. இப்படியாக ஒரு வாரம் யானையின் பழக்கடையில் நல்ல வியாபாரம் ஆயிற்று.

பெரிய யானை சந்தோஷம் மிக அடைந்து, ஒரு வாரத்தில் எவ்வளவு லாபம் கிடைத்தது என்று அறிய ஆவல் கொண்டது. மாலை கடை மூடிய பிறகு, பணப் பெட்டியைத் திறந்து எண்ணினால் அதற்குத் தூக்கிவாரிப் போட்டது. அருகிலிருந்த யானைக்குட்டியைக் கூப்பிட்டு, ''இதுதானா ஒரு வாரத்தில் பழங்கள் விற்ற பணம்?'' என்றது.

''ஆமாம், அப்பா!'' என்று யானைக்குட்டி தன் தும்பிக்கையை ஆட்டியது.


உடனே யானைக்குக் கோபம் வந்தது. ''காலையில் வாங்கிய பழங்கள் யாவும் மாலையில் விற்றுவிடுகின்றன. இந்த ஒரு வாரத்தில் நான் வாங்கிய பழங்களின் விலை சுமார் ரூபாய் நூறு இருக்கும். பெட்டியில் சரியாக ரூபாய் ஐம்பதைக்கூடக் காணவில்லையே!'' என்று கோபமாகச் சொல்லிற்று.

அதைக் கேட்ட யானைக்குட்டி, ''அப்பா, அப்பா! விற்ற பணத்தை அப்படியே நான் பெட்டியில்தான் வைத்திருந்தேன். நான் அந்தப் பணத்திலிருந்து காலணாகூட எடுக்கவில்லை'' என்றது.

''அப்படியானால் விற்ற பழங்களுக்குக் கணக்குப் பார்த்துச் சரியான பணம் வாங்கவில்லை என்று தெரிகிறது. உனக்குத்தான் கணக்கு என்றால் சிம்ம சொப்பனம் மாதிரியாச்சே!'' என்று கோபமாகச் சொல்லிற்று யானை.

''இல்லை, அப்பா, இனிமேல் நான் சிலேட்டை வைத்துக்கொண்டு, சரியாகக் கணக்குப் பார்த்துப் பழங்

## தெருப் பாடகர்



இடது கையால் சுருதி மீட்டி, வலது கையினால் சுஞ்சிரா வாசித்து, காலினால் ஜாலரா போட்டு, வாயினால் பாடிக்கொண்டிருக்கிறார் இந்தத் தெருப் பாடகர்!

—போட்டோ: எம். கே. ஆர்.

களை விற்கிறேன், அப்பா!'' என்றது யானைக்குட்டி.

இருந்தாலும் யானைக்குட்டியின் பதிலைக் கேட்டு யானை சமாதானம் அடையவில்லை. அதற்கு ஏதோ ஒரு சந்தேகம் ஏற்பட்டது. அதை வெளியில் சொல்லிக்கொள்ளவும் அதற்கு விருப்பமில்லை. தன் சந்தேகத்தைத் தீர்த்துக் கொள்ள ஒரு நாள் யானைக்குட்டி வியாபாரம் செய்துகொண்டிருக்கும்போது மறைவாக ஓர் இடத்தில் நின்று பார்த்துக்கொண்டிருந்தது.

அப்பொழுது கடையில் ஒருவரும் இல்லை. யானைக்குட்டி மாத்திரம் தான் நின்றுகொண்டிருந்தது. யாராவது தன்னைப் பார்க்கிறார்களா என்று சுற்று முற்றும் பார்த்தது. ஒருவரும் அதன் கண்களில் தென்படாததனால் மெதுவாகக் கடையில் வைத்திருந்த மல்கோவா மாம்பழக் கூடையிடம் தன் துதிக்கையைக் கொண்டுபோயிற்று.

அடுத்த நிமிஷம் அதன் வாயில் ஒரு மல்கோவா மாம்பழம் சென்றது. இதே மாதிரியாக ஒவ்வொரு விதமான பழமும் அதன் வாய்க்குள் சென்றுகொண்டிருந்தது. மறைவிலிருந்து பார்த்த யானைக்குக் கோபம் கோபமாக வந்தது. 'நான் நினைத்தபடியேதான் நடக்கிறது. இப்படி நடந்தால் பழக்கூடைகள் எல்லாம் சாயங்காலம் காலி ஆவதில் என்ன ஆச்சரியம்?' என்று அடங்காக் கோபம் கொண்டு, வெகு வேகமாகக் கடையின் அருகில் சென்றது. எதிர்பாராமல் யானையைப் பார்க்கவே, யானைக்குட்டிக்கு என்ன செய்வது என்று புரியவில்லை.

''கடையிலுள்ள பழங்களெல்லாம் சீக்கிரம் காலி ஆவதன் ரகசியம் இப்பொழுதுதான் எனக்குத் தெரிந்தது. இனிமேல் உன் பாசாங்கு என்னிடம் பலிக்காது'' என்று யானை உரக்கக் கத்திற்று.

ஆனால் அந்தச் சாமர்த்தியம் பொருந்திய யானைக்குட்டி, ''அப்பா அப்பா, நீ என்னைத் தவறாக எண்ணுகிறாய். நான் சற்று முன்பு பழங்களின்மீது தூசி படிந்திருக்கே என்று ஒவ்வொன்றாகத் துதிக்கையில் எடுத்து வாயினால் ஊதினேன். பார்ப்பதற்கு உனக்கு நான் தின்பதுபோல இருந்திருக்கும்'' என்று சொல்லவே, யானை பதில் சொல்லாமல் கோபத்துடன் தன் மனைவியிடம் நடந்த சமாசாரத்தைச் சொல்லிற்று.

யானையின் மனைவி தன் குழந்தையைச் சொன்னவுடன் கோபமடைந்து, ''நீங்கள் நினைக்கிறபடி குழந்தை ஒன்றும் அப்படித் திருடித் தின்னமாட்டான். அப்படியே தின்றால்தான் என்ன? நம்ப குழந்தைதானே! நானே உங்களிடம், 'யானைக் குட்டிக்கு உடம்பு இளைத்து வருகிறது. அவனுக்குச் சாத்துக்குடி, டொமேட்டோ இவைகளை எல்லாம் வாங்கிக்கொடுங்கோ' என்று சொன்னேன். நீங்கள் கவனிக்கவில்லை. நீங்கள் வாங்கிக் கொடுக்காவிட்டாலும் அவன்மீது வீணாகத் திருட்டுப் பட்டம் சூட்டாதீங்கோ'' என்றது.

தீபாவளி நெருங்கவே ஏதாவது புதிய பழங்களாகக் கடையில் விற்பனைக்கு வாங்கி வைக்கவேண்டும் என்று எண்ணமிட்டுக்கொண்டிருந்த யானை ஒரு நாள் ஒரு சிறிய கூடை நிறைய ஒரு புதுமாதிரியான பழங்களைக் கொண்டுவந்தது. பார்ப்பதற்கு அவைகள் சிறிய டொமேட்டோ பழங்களைப் போலத் தோற்றம் அளித்தது.

''இந்தப் பழம் மிகவும் உயர்ந்த ரகத்தைச் சேர்ந்தது. இந்தப் பழத்திற்கு, 'தித்திப்பு டொமேட்டோ' என்று பெயர். ஒரு பழத்தை ஓர் அணாவுக்குக் குறையாமல் விற்றுவா. பழத்தை ஒருவருக்கும் தெரியாமல் தின்றுவிடாதே!'' என்று பெரிய யானை சொல்லவே, ''நான் ஒரு நாளும், தெரியாமல் தின்னமாட்டேன். நீ என்னை ஏதோ தவறாக எண்ணுகிறாய்'' என்றது யானைக்குட்டி.



யானை ஒன்றும் பதில் சொல்லாமல் வேகமாக வெளியே போயிற்று. உடனே யானைக்குட்டியின் கண்கள் புதிதாகக் கடைக்கு வந்திருக்கிற தித்திப்பு டொமேட்டோப் பழத்தின்மீது சென்றன. கண்கள் சென்றவுடன் அதன் துதிக்கையும் பழங்களின்மீது சென்றது. உடனே தந்தையின் புத்திமதி ஞாபகத்திற்கு வரவே, எடுத்த பழங்களைக் கூடையிலேயே போட்டுவிட்டது. ஆனால் ஆசை விடவில்லை. 'ஒரு பழம்மட்டும்! ஒரு பழத்தைத் தின்றால் அப்பாவுக்கு எப்படி தெரியப்போகிறது!' என்று மெதுவாக இங்கும் அங்கும் பார்த்துக்கொண்டு துதிக்கையினால் ஒரு டொமேட்டோப் பழத்தை எடுத்து வாய்க்கு அருகில் கொண்டு போயிற்று. அந்தச் சமயத்தில் பெரிய யானை கடையை நோக்கி மெதுவாக வரவே, யானைக்குட்டி பழத்தை வாயில் போட்டுக்கொள்ளாமல் மறைவாகக் கீழே போட்டது. உடனே 'தடால்' என்ற ஒரு சத்தம் உண்டாயிற்று. யானைக்குட்டி பயந்து நடுங்கி நின்றது. பெரிய யானை வருவதைப் பார்த்து ஒன்றும் தெரியாததுபோல கடையைச் சுற்றிச்சுற்றி வந்தது.

இதையெல்லாம் மறைவிலேயே இருந்து பார்த்துக்கொண்டிருந்த யானை கடைக்கு வந்து, "என்ன சப்தம்? ஏன் கடையெல்லாம் ஒரே புகையாக இருக்கிறது? என்ன நடந்தது?" என்று கேட்டது. யானைக் குட்டியோ பயந்து நடந்ததை நடந்தபடியே சொல்லிற்று.

உடனே யானை, யானைக்குட்டியைச் சமாதானப்படுத்தி, "நீ பழங்களைத் தெரியாமல் திருடித் தின்பதைக் கண்டு பிடிக்கவே வெங்காய வெடிகளைச் சிறிய டொமேட்டோப் பழங்களைப்போல் செய்து, கடையில் வைத்தேன். நான் எதிர்பார்த்தபடியே, நீ அந்த வெங்காய வெடியை டொமேட்டோப் பழம் என்று நினைத்து எடுத்துத் தின்னப் போனாய். எங்கே தவறி அதை வாயில் போட்டுக்கொள்ளப் போகிறாயோ என்று நான் ஓடி வந்தேன். நீ பயந்து எனக்குத் தெரியாமல் கீழே போட்டாய். அது வெடித்து விஷயத்தை எனக்குத் தெரியப்படுத்தியது. இனிமேல் நீ பொய் சொல்லாதே. திருடாதே. அப்படிச் செய்தாயானால் கடவுள் உன்னுடைய தீய செயல்களைக் கட்டாயம் வெளிப்படுத்தி விடுவார்" என்று சொன்னது.

யானைக்குட்டி, "அப்பா, என்னை மன்னித்துவிடு! இனி இப்படிச் செய்யமாட்டேன்" என்று கூறியது.






குப்பன் மிகவும் நல்லவன். உழைப்பாளி. சிறிது நேரங் கூடச் சோம்பலே அறியாதவன். நாட்டாண்மைக்காரரிலிருந்து குழந்தைகள் வரையில் அவனிடம் ஒரு மதிப்பு; அன்பு. கொடுத்த கூலிக்கு மேல் சல்லியும் கேட்க மாட்டான். அதிக ஆசையே அவனுக்கு ஒருபோதும் கிடையாது. அவன் காட்டில் விறகு வெட்டி வருவது வழக்கம். அவனுடைய வாடிக்கைக்காரர்களிடம் அவன் நெல்லாகவோ சோருகவோ வாங்கிக்கொள்வான்.

நேர்மாருனவள் அவனுடைய மனைவி செல்லாயி. அரட்டை அடிப்பதில் தேர்ந்தவள்.

ஒரு ரகசியமும் அவளிடம் தங்காது. எதையும் பிறரிடம் சொல்லாவிட்டால் பகலில் சோறு இறங்காது; இரவில் தூக்கம் கொள்ளாது. குப்பன் நாலு காசு சேர்ப்பது கூடச் செல்லாயிக்குச் சொல்லமாட்டான்.

ஒரு நாள், குப்பன் விறகு வெட்டக் காட்டுக்குச் சென்ருன். ஒரு பெரிய மரத்தைக் கஷ்டப்பட்டு வெட்டித் தள்ளிஞன். அந்த மரத்தின் அடிப்பாகத்தில் ஒரு புதையலைக் கண்டு பிரமித்து விட்டான். அதை என்ன செய்வது? செல்லாயிக்குத் தெரியாமல் வீட்டில் எப்படிப் பாதுகாப்பது? நெடு நேரம் யோசனை செய்தான். கடைசியில் ஒரு முடிவுக்கு வந்தவஞக வீட்டுக்குப் புறப்பட்டுச் சென்ருன்.

வீட்டில் அவனுக்குச் செல்லாயி தோசை செய்து வைத்திருந்தாள். அதை அவளுக்குத் தெரியாமல்

ஒளித்து வைத்துக்கொண்டான். பிறகு வெளியே சென்று ஒரு முயல், ஒரு வலை, ஓர் எலிப்பொறி மூன்றையும் வாங்கிக்கொண்டான். மீண்டும் புதையலைக் கண்டெடுத்த இடத்துக்குச் சென்றான். போகும் வழியில் உள்ள மரங்களில் ஏறி, தான் கொண்டு வந்திருந்த தோசைகளைத் தொங்கவிட்டான். அருகில் இருந்த ஏரியின் கரையில் முயலை வலையில் பிணைத்து ஓர் ஓரமாக வைத்தான். பின்னர் ஏரி மீன்களைப் பிடித்துப் பொறியில் அடைத்து ஓரிடத்தில் வைத்து விட்டான். வந்தவழியே குப்பன் திரும்பி வீட்டை அடைந்தான். மனைவியை அழைத்து, காட்டில் கண்ட புதையலைப்பற்றி அவளிடம் சொன்னான். 'விஷயத்தை யாரிடமும் சொல்லக் கூடாது. மீறி நடந்தால் புதையலைச் சர்க்காரே எடுத்துக்கொண்டு விடுவார்கள்' என்றான். அவளும் சரி என்று ஒப்புக்கொண்டாள். அவள் வார்த்தைக்கு எவ்வளவு நாள் உயிர் என்பதைக் குப்பன் நன்கு அறிவான். அன்று இரவு மழை வேறு பெய்தது. மழை விட்டதும் இரண்டு மணிக்கு இருவரும் காட்டுக்குப் புறப்பட்டார்கள். அன்று பௌர்ணமி. எனவே அவர்கள் அதிகம் சிரமப்படவில்லை.

போகும் வழியில் மரங்களில் தோசைகள் தொங்குவதைக் கண்டு ஆச்சரியத்துடன் செல்லாயி குப்பனை விசாரித்தாள்.

''நாம் புறப்படும் முன்பு தோசை மழை பெய்ததே, நீ வேலை மும்முரத்தில் அதைக் கவனிக்கவில்லை?'' என்று பதில் அளித்தான் குப்பன்.

அப்பாவி செல்லாயி அதை நம்பினாள். கொஞ்ச தூரம் சென்றதும் ஏரி கரையில் வலையில் முயல் சிக்கிக் கிடப்பதைக் கண்டாள்.

''அது நீர் முயல்'' என்றான் குப்பன்.

''அப்படியும் ஒன்று உண்டா'?'' என்று வியந்தாள் செல்லாயி.

சிறிது தூரம் சென்றபின்னர், அவள் எலிப் பொறியில் சில மீன்கள் தவிப்பதைப் பார்த்தாள்.

''தரையில்கூடச். சில மீன்கள் இந்தக் காட்டில் வாழ்கின்றன'' என்று செல்லாயியே சொல்லிக் கொண்டாள்.

கடைசியில் செல்லாயியின் உதவியுடன் குப்பன் புதையலை எடுத்துக்கொண்டு வீட்டுக்குச் சென்றான். யாருக்கும் தெரியாதபடி ஓர் இடத்தில் பணத்தை மறைத்து வைத்தான் குப்பன்.

அடுத்த நாள் பொழுது விடிந்தது. முதல் நாள் கண்டெடுத்த புதையலைப்பற்றி வழக்கம்போலச் செல்லாயி ஒவ்வொருவரிடமும் சொல்ல ஆரம்பித்தாள். ஊர் முழுவதும் அந்தச் செய்தி நொடியில் பரவிவிட்டது.

கிராமப் பஞ்சாயத்தாரின் காதுக்கு வதந்தி எட்டியது. அவர்கள் உடனே குப்பனை வரவழைத்துப் புதையலைப்பற்றி விசாரித்தார்கள்.

''என் மனைவிக்குக் கொஞ்சம் புத்தி சரியில்லை. அடிக்கடி இந்த மாதிரி அவள் உளறுவது வழக்கம்'' என்றான் குப்பன்.


அவன் சொல்வது உண்மையா என்று அறியச் செல்லாயியைப் பஞ்சாயத்தார் வரவழைத்தார்கள். முதல் நாள் இரவு நடந்ததைப்பற்றி அவளிடம் கேள்வி கேட்டார்கள்.

''மரத்தில் தொங்கிய பாதையில் இருளில் நாங்கள் சென்றோம். ஏரி கரையில் நீர் முயலைக் கண்டோம். பிறகு எலிக் கூண்டில் மீன்கள் தத்தளிப்பதைப் பார்த்தோம். கடைசியில் அந்தப் புதையலை எடுத்து வந்தோம்'' என்றாள் செல்லாயி.

கூடி இருந்தவர்கள் எல்லோரும் கொல்லென்று சிரித்தார்கள். பித்துக்குளி செல்லாயி என்று கேலி செய்தார்கள். அவளுக்கு ஒரே அவமானமாகிவிட்டது. பஞ்சாயத்தார்கள் இருவரையும் வீட்டுக்கு அனுப்பிவிட்டனர்.

அன்றிலிருந்து செல்லாயி அரட்டை அடிப்பதையே நிறுத்திவிட்டாள். குப்பன் புதையலைக் கொண்டு வசதியாக வாழ்க்கை நடத்தினான்.

# அப்பா சிபாரிசு!



# இளமைப் பருவம்

[இனியவற்றில் எல்லாம் இனியவை இளமைப் பருவத்து நினைவுகள்தான். உங்களைப்போல ஒரு காலத்தில் குழந்தைகளாக இருந்த தலைமை ஆசிரியை ஒருவரும் தலைமை ஆசிரியர் ஒருவரும் தங்கள் இளமைப் பருவத்தைப்பற்றிக் கூறுகிறார்கள். அவர்களுடைய நினைவுகள் உங்களுக்கும் இனிமை தரும் என்று நம்புகிறோம். ஆ-ர்.]

இளமைப் பருவத்து இன்பமே இன்பம். எவ்வளவு வயதானாலும் நம்முடைய குழந்தைப் பருவத்தை மீண்டும் எய்த மாட்டோமா என்று நினைப்பதும் உண்டு. கள்ளங் கபடமற்ற உள்ளத்துடன் சுயேச்சையாக ஒருவிதக் கவலையுமின்றிச் சுற்றித் திரிந்த நாட்கள் அவை. நாட்கள் உருண்டோடிச் செல்கின்றன. ஆனால் சுவடுகளை விட்டுத்தான் செல்கின்றன. சில அழிந்து விடுவன; சில அழியாச் சுவடுகளாக இருந்து நம்மை ஊக்குவிக்கின்றன.

நான் பிறந்து வளர்ந்த ஊர் புதுக்கோட்டை. அது அப்பொழுது தனி சம்ஸ்தானமாக இருந்தது. குலபதி பாலையா அவர்களின் பள்ளிக்கூடத்தில் 5-ஆம் வகுப்பு வரை படித்தேன். காலஞ் சென்ற ஸ்ரீமான் எஸ். சத்தியமூர்த்தி, டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி, ஸ்ரீமதி ருக்மிணி தேவி, ஸ்ரீமதி நல்லமுத்து ராமமூர்த்தி முதலியோரும் அந்தப் பள்ளியின் பழைய மாணவ மாணவிகள்தான்.



ஸ்ரீமதி சரஸ்வதி ஸ்ரீநிவாஸன்
(தலைமைஆசிரியை,அவ்வைஹோம்)

நான் மூன்று வயதிலேயே என் மூத்த சகோதரியுடன் பள்ளிக்கூடம் செல்வதுண்டு. எங்களுக்கு முறை 'கிளாஸ்' உண்டு. இந்தக் காலத்தில் அந்த வழக்கம் அதிகம் கிடையாது. 2 முதல் 16 வரை வாய்பாடு; தவிர வீசம், அரைக்கால், கால், அரை, முக்கால் வாய்பாடுகள்; 27 நக்ஷத்திரங்கள்; 60 வருஷங்கள் முதலியனவெல்லாம் தலைகீழ்ப் பாடம்.

ஒரு தடவை 5-ஆம் வகுப்பு மாணவர்கள் தேர்ச்சி பெற்று அப் பள்ளியை விட்டுச் செல்லும்பொழுது ஒரு போட்டோவுக்கு ஏற்பாடு செய்தார்கள். அந்த வகுப்பில் வாசித்த என் சகோதரியும் சென்றாள். நானும் பிடிவாதம் பிடித்து அவளுடன் போய்விட்டேன். அப்பொழுது எனக்கு வயது 4. வெல்வெட் சட்டை, டிராயர், காலில் காப்பு கொலுசு, அதோடு பூட்ஸ், தலை முன்பக்கம் பின்னல், அதன் நடுவில் ஒரு பச்சை வில்லை, பின்னால் ஒரு பின்னல், கழுத்தில் முத்து மாலை, காதில் டோலக் முதலியவைகளுடன் அந்தப் போட்டோவில் இருக்கிறேன். அதில் என் கணவர்கூட இருக்கிறார். எப்படி என்றால் அவரும் அப்பொழுது 5-ஆவது வகுப்பு மாணவர். அந்தப் படத்தை இப்பொழுது பார்த்தாலும் சிரிப்புத்தான் வருகிறது.

அந்த நாட்களில் பெண்கள்

அதிகம் படிக்க முன்வருவதில்லை. அதனால் எங்களுக்கு உபகாரச் சம்பளம்கூடக் கொடுத்தார்கள். நான் முதல் வகுப்பிலிருந்து இண்டர்மீடியட் முடியச் சம்பளமென்று ஒரு தம்பிடிகூடக் கொடுத்தது கிடையாது.

நாடகத்தில் நடிப்பதென்றால் எனக்கு விருப்பம் அதிகம். 10-11 வயதில் ராமதாஸின் மனைவியாக வேஷம் தாங்கி நன்றாக நடித்தேன். ஆங்கில ஹாஸ்ய நாடகத்தில் ஆண் வேடம் தரித்தேன். தலைப்பாகை சரியாகக் கிடைக்கவில்லை. உடனே எங்கள் தமிழ்ப் பண்டிதர் தலைப்பாகையை வைத்துக்கொண்டேன். தமாஷாக இருந்தது.

விழா வந்துவிட்டால் வீட்டை அலங்காரம் செய்வது குழந்தைகள் பொறுப்பு. சென்னையில் விற்பதுபோல் மாவிலை முதற்கொண்டு மார்க்கெட்டில் கிடைக்காது. தோட்டங்களுக்குச் சென்று பத்திரங்களையும், பூக்களையும் சேகரித்துக்கொண்டு வருவோம். அழகாகத் தோரணம் கட்டுவோம். அதில் ஒரு தனித் திருப்தி.

பிறருக்குச் சேவை செய்யவேண்டும் என்ற மனப்பான்மை எனக்குச் சிறு வயதிலிருந்தே உண்டு. அதில் ஆர்வமும் அதிகம். விடுமுறை நாட்களிலுங்கூட வீண் பொழுது போக்க மனம் வராது. நிறையப் புத்தகங்கள் படிப்பதில் விருப்பம் அதிகம்.

"நீ படிச்சு என்ன பண்ணப் போறே?" என்பார்கள் வீட்டில். உடனே நான், "டாக்டராகப் போவேன், இல்லாவிட்டால் பெரிய டீச்சராகப் போவேன்" என்பேன்.

கடவுள் கிருபையால் என் ஆசை நிறைவேறிற்று. குழந்தைகள் தொண்டே தெய்வத் தொண்டு என்பார்கள். இந்தத் தெய்வத் தொண்டை நீடித்துச் செய்ய இறைவன் அருள் புரிவாராக.

★

# பழிக்குப் பழி

இன்றைக்கு நாற்பது ஆண்டுகளுக்கு முன்னர் எனக்கு வயது பத்துதான். அன்று நிகழ்ந்த நிகழ்ச்சி இன்னும் என்னைத் திடுக்கிடச் செய்யும். எனக்கு அன்று உறுதுணையாக இருந்தவன் 'டைகர்'தான். டைகர் நான் வளர்த்த நாயின் பெயர். அதன் உருவ அமைப்பை நோக்கியே 'டைகர்' என்ற திருநாமம் சூட்டியிருந்தேன். டைகரும் நானும் இணைபிரியா நண்பர்களாகவேயிருந்தோம். பள்ளிக்கூடம் சென்றால் என் பின்னே! காட்டுக்கு, சோலைக்குச் சென்றால் என் முன்னே நிழல்போல் வரும். சுற்றிச் சுற்றிக் கண்ணுமூச்சி விளையாடுவது போல விளையாடும். நாளும் பொழுதும் டைகருடன்தான்.

இவையெல்லாம் நிகழ்ந்த இடம் பூதப்பாண்டி. மலையிடை விளங்கும் செல்வங் கொழிக்கும் கிராமம். நாஞ்சில் நாட்டை அழகு செய்யும் வனப்பு வாய்ந்தது அந்தச் சிற்றூர். தேமாவும் பலாவும் கனி யுதிர்க்கும் சோலைகள்; அணைதற்றி வழிந்தோடும் ஆற்று நீர் ஓசை; சிற்றோடைகளின் சலசலப்பு; மரங்களின் ஈட்டம்; மந்திகளின் கூட்டம்; இவைகள் கண்கொள்ளாக் காட்சிகள்.


ஒரு நாள் நண்பர் வீட்டில் கொழுக்கட்டை செய்திருந்தார்கள். கொழுக்கட்டை நிரம்பிய ஒரு பாத்திரத்தை என்னிடம் கொடுத்து எங்கள் வீட்டில் கொண்டு கொடுக்கும்படி சொன்னார்கள். எனக்கும் ஒன்று கொடுத்தார்கள். கொழுக்கட்டையை மகிழ்ச்சியுடன் வாயில் போட்டுக் கொண்டு, நடையைக் கட்டினேன். சுமார் இரண்டு அடி தூரம் வந்திருப்பேன். "ஆ! ஐயோ" என்றேன். கன்னத்தைத் யாரோ

கிள்ளுவதுபோல் இருந்தது. நான் அச்சத்தால் கண்களை மூடிக்கொண்டேன். என்னை அறியாமலேயே என் வாய் திறக்கப்பட்டது. இந்த உலகமே இருண்டதுபோல் இருந்தது. ஒரு விநாடியில் வாயிலிருந்த கொழுக்கட்டை மாயமாய் மறைந்தது. டைகர் அலறிக்கொண்டே ஒரு மரத்தை நோக்கிப் பாய்ந்தது. குரங்கு எப்படியோ கொழுக்கட்டையுடன் தப்பிவிட்டது. பாவம்! டைகர் ஏமாற்றத்துடன் திரும்பியது. தன் எஜமானனுக்கு உதவி செய்ய வியலாத நன்றியுள்ள பணியாளனைப்போல நாணத்துடன் என்னைப் பார்த்தது.

இந்த நிகழ்ச்சி முடிந்து நாட்கள் பல கடந்தன. டைகர் உள்ளத்தில் ஏதோ வேதனை குமுறிக்கொண்டிருப்பதாகத் தெரிந்தது. நான் மிகவும் வருந்தினேன்.

ஒரு நாள் டைகரின் வஞ்சம் தீர்க்கும் நாளாக அமைந்தது. வீட்டுக் கதவு திறந்தே கிடந்தது. ஐந்தாறு குரங்குகள் ஒன்றுசேர்ந்து 'குபீர்' என்று வீட்டிற்குள் சென்றன. அமைதியாகக் கவனித்துக்கொண்டிருந்த டைகர், புலியைப் போல் பாய்ந்தது வீட்டினுள். ஒரு பெரிய குரங்கு படுகாயப்பட்டு வெளியேறியது. பழிக்குப் பழி வாங்கிவிட்டதாக எண்ணிய டைகர் என் அண்மையில் வந்து வாலை ஆட்டிக்கொண்டு நின்றது. நானும் முதுகில் தட்டிக் கொடுத்து அதை உற்சாகப்படுத்தினேன். அன்று முதல் டைகர் உற்சாகமாகக் காணப்பட்டது.

மலைவளம் காண மரங்களின் ஊடே சிற்றாறுகளைக் கடந்து வெகு தூரம் நானும் என் தந்தையும் டைகருடன் உலாவப் போவோம். அன்று என்றுமில்லாத உற்சாகத்துடன் டைகர் எங்கள் பின்னால் ஓடி வந்தது. நாங்கள் விரைந்தோம். சிறிது தொலைவு சென்றதும் திரும்பிப் பார்த்தோம். டைகரைக் காணவில்லை. சுற்றிச் சுற்றிப் பார்த்தோம். மரங்களும் புதர்களும் அடர்ந்திருந்ததால் டைகர் இருக்குமிடம் தெரியவில்லை. மலையிடை எழும் தென்றல் காற்றின் 'உய்' யென்ற ஒலியைப் பிளந்துகொண்டு டைகரின் மரண ஒலி காற்றில் மிதந்து வந்தது. குரல் வந்த வழியே விரைந்து சென்றோம். ஆற்றின் கரையில் ஒரு பள்ளம். அதன் மத்தியில் டைகர் நின்றது. அதைச் சுற்றிலும் பத்துப் பதினைந்து குரங்குகள் நின்றன. டைகர் மருண்டு விழித்தது. குரங்குகள் சீறின. நான் அழுதேன். என் தந்தைக்கும் என்ன செய்வதென்று விளங்கவில்லை. குரங்குகள் டைகரைப் பழிக்குப் பழி வாங்க எண்ணிவிட்டன என்று எண்ணினேன். எனக்குத் தலை சுழல்வது போலிருந்தது. 'திக்கற்றவர்க்குத் தெய்வம் துணை' என்ற பழமொழி பொய்த்துவிடவில்லை. வழிப்போக்கன் ஒருவன் தடியுடன் அவ்வழியே வந்துகொண்டிருந்தான். டைகருக்குண்டான ஆபத்தைத் தெரிந்துகொண்டான். தடியை ஓங்கி வீசினான். குரங்குகள் ஓடிவிட்டன. அடுத்த விநாடி டைகர் துள்ளி யெழுந்து ஓடிவந்து என் பக்கம் நின்றது. குரங்குக் கூட்டத்தினின்றும் மீட்க முடியாத என்னைக் கேலி செய்வது போலிருந்தது. என் கண்களிலிருந்து நீர்த் துளிகள் சில தரையில் விழுந்தன. அன்று பூதப்பாண்டியை விட்டு வந்த நான் இதுவரை அங்கே போகவே இல்லை.



ஸ்ரீ த. வே. ஆறுமுகம்
தலைமை ஆசிரியர், திருநெல்வேலி.

# குண்டுச் சீமா

ராஜி

## 16

சீதாவின் பள்ளிக்கூடத்தில் விடுமுறைக்கு முன் வருஷாந்தரக் கொண்டாட்டம் நடத்துவது உண்டு. அப்போது போட்டிப் பந்தயங்களும் வேறு விதமான வேடிக்கைகள் முதலியனவும் நடக்கும். வழக்கம் போல அந்த வருஷமும் விநோத ஆடைப் போட்டியும் நடக்க இருந்தது. இந்தக் கொண்டாட்டத்திற்குத் தன் மாமாவையும் அழைத்துப் போகவேண்டும் என்று சீதாவுக்கு ஆசை உண்டாயிற்று. அவள் சாமா மாமாவிடம் சென்று, "மாமா, நீங்கள் இன்னிக்குச் சாயங்காலம் என் பள்ளிக்கூடத்தில் நடக்கப் போகும் கொண்டாட்டத்திற்குக் கட்டாயம் வரணும். வீட்டிலே எல்லாருக்கும் அழைப்பு வந்திருக்கு" என்றாள்.

சாமா மாமா, "எனக்கு வேலை இருக்கு. நான் வரல்லை அம்மா" என்றார். உடனே சீதாவுக்குக் கோபம் வந்துவிட்டது. "என்ன மாமா இது, நான் கூப்பிட்டா வர மாட்டேங்கிறே? சீமா அண்ணு கூப்பிட்டா மாத்திரம் அவன் பள்ளிக்கூடத்திலே போய் மாஜிக் பாத்துட்டு வரலாமா? என் பள்ளிக்கூடத்திலே இன்று மாலை நடக்கப் போகும் 'பான்ஸி டிரஸ்' போட்டி ரொம்ப நன்ருக இருக்கும். அதிலே பெரிய மனுஷாள் வீட்டுப் பெண்கள் எல்லாம் கலந்து கொள்வார்கள்" என்ருள்.

உடனே சாமா மாமா, "இந்தக் 'காம்பெடிஷன்' எங்கள் பையன்கள் பள்ளிக்கூடத்திலும் உண்டு. அதில் கலந்து கொள்பவர்கள் வித விதமாக மாறு வேஷத்துடன் அந்தந்த வேஷத்துக்குப் பொருத்தமான ஆடைகளை அணிந்துகொண்டு வருவார்களே. அதைத்தானே சொல்லுகிருய்?" என்று கேட்டார்.

"ஆமாம் ஆமாம். ரொம்ப நன்னு இருக்கும். வா மாமா" என்று கூப்பிட்டாள் சீதா.

"இந்தப் போட்டியிலே பெரிய மனுஷாள் வீட்டுப் பெண்களுக்குத்தான் பரிசு கொடுப்பார்கள். இருந்தாலும் நானும் சீமாவை அழைச்சிண்டு வறேன்" என்று ஒப்புக்கொண்டார் மாமா.

சீதாவின் பள்ளிக்கூடத்திலே சரியான கூட்டம். எல்லா விதமான போட்டிகளும் நடந்தன. கடைசியில், 'பான்ஸி டிரஸ் காம்பெடிஷன்' ஆரம்பமாயிற்று. மாறு வேடம் தரித்த பெண்கள் கியூ வரிசையில் நின்ருர்கள். ஒரு பெண் கிருஷ்ணன் வேஷம் போட்டுக்கொண்டிருந்தாள். மற்ருெருத்தி செம்படவன் வேஷம்; வேறு ஒருத்தி பாம்பாட்டி வேஷம் போட்டுக்கொண்டிருந்தாள். ஒரு பெண் உண்மையான ஆங்கிலேயப் பெண்மணி மாதிரி வேஷம் போட்டுக்கொண்டிருந்தாள். ஒரு பெண் குடுகுடுப்பாண்டி வேஷம் அணிந்துகொண்டிருந்தாள். இம்மாதிரியாகப் பல பெண்கள் பல வேஷம் போட்டுக்கொண்டு நின்றுகொண்டிருந்தார்கள். ஆனல் அந்தக் கியூ வரிசையில் கடைசியாகக் குறத்தி வேஷம் போட்டுக்கொண்டு நின்றுகொண்டிருந்த பெண்ணைப்பற்றிதான் எங்கும் பேச்சாக இருந்தது. அந்தப் பெண் போட்டுக்கொண்டிருந்த பாசி மணி மாலை, அழுக்குப் படிந்த பாவாடை, சட்டை, எண்ணெயே படாமல் உள்ள தலைமயிர், கையிலே தகரக் குவளை, அந்தப் பெண்ணின் பேச்சு, நடை, யாவும் உண்மையான குறத்தியைப் போலவே தோற்றமளித்தன. கியூ வரிசையில் நின்றுகொண்டிருந்தவர்கள் ஒவ்வொருவராக மேடை மீது ஏறி நின்ருர்கள். யாருக்கு நல்ல வேஷப் பொருத்தம் என்று



தேர்ந்தெடுக்க மூன்று பெரிய உத்தியோகஸ்தர்கள் நியமிக்கப்பட்டிருந்தார்கள். அவர்கள் ஒவ்வொரு பெண்ணையும் ஏதாவது கேள்வி கேட்டுவிட்டு மேடையை விட்டு இறங்கச் சொல்லிக் கொண்டு வந்தார்கள்.

கியூ வரிசையில் குறத்தி வேஷம் அணிந்துகொண்டிருந்த பெண் மாத்திரம் சற்றுக் கூச்சத்தினுல் தயங்கித் தயங்கி மேடைக்குப் போகாமல் நின்றுகொண்டிருந்தாள். வேடிக்கைப் பார்க்க வந்தவர்கள் அந்தப் பெண்ணுக்கு தைரியம் கூறி, ''ஏன் பெண்ணே, பயப்படறே? உனக்கு வேஷப் பொருத்தம் மிகவும் நன்ருக இருக்கிறது. உனக்குத்தான் கட்டாயம் பரிசு கிடைக்கும். தைரியமாக மேடைக்குப் போய் நில்லு'' என்ருர்கள். குறத்தி வேஷப் பெண்ணும் தைரியமாக மேடைக்குச் சென்ருள். அந்தப் பெண்ணைப் பார்த்தவுடன் அங்கே தேர்ந்தெடுப்பதற்காக உட்கார்ந்திருந்த மூன்று உத்தியோகஸ்தர்களும் ஆச்சரியம் அடைந்தார்கள். ''எங்கே ஒரு பாட்டுப் பாடு, அம்மா'' என்று அவர்கள் சொன்னதுதான் தாமதம்; கையிலுள்ள தகரக் குவளையில் கைகளினுல் தாளம் போட்டுக்கொண்டே குறத்தியைப்போலச் சினிமாப் பாட்டு ஒன்றைப் பாடி மேடையைச் சுற்றி வந்தாள். பாட்டு முடிந்தவுடன் சபையில் பலத்த கரகோஷம் ஏற்பட்டது. அங்கே இருந்த மூன்று உத்தியோகஸ்தர்களும் அவளுக்குத்தான் முதல் பரிசு கொடுப்பது என்று தீர்மானித்தார்கள். உடனே அந்தக் குறத்தி வேஷம் அணிந்திருந்த பெண்ணைக் கூப்பிட்டு, ''உன் பெயர் என்ன? நீ எந்த வகுப்பில் படிக்கிருய்? உன் வீட்டின் விலாசம் என்ன?'' என்று கேட்டார்கள்.

''எனக்கு வீடு ஏதுங்க, சாமி? நாங்க எங்கேயாச்சியும் ஒரு மரத்தடியில் படுப்போம். எனக்குப் பேரு ஒண்ணும் கிடையாதுங்க. அதோ அங்கிருக்குற ஐயாக்காரரெல்லாம் மேடைக்குப் போகச் சொன்னுங்க. நான் வந்தேன்'' என்று சொல்லிக்கொண்டிருக்கும் பொழுதே ஒரு பெரிய குறத்தி கோபமாக அங்கே வந்தாள். ''இங்கே என்ன பண்றே? உன்னை எங்கெல்லாம் தேடறது? இங்கே வேடிக்கை பாக்கவா இப்போ நேரம்? வா!'' என்று அந்தப் பெண்ணை இழுத்துக்கொண்டே போய்விட்டாள். அப்பொழுதுதான் அங்கிருந்தவர்கள் எல்லாருக்கும் அந்தப் பெண் வேஷம் தரித்த குறத்தி அல்ல என்றும் உண்மையாகவே அவள் குறத்தி என்றும் தெரிய வந்தது. இந்த வேடிக்கையான சம்பவத்தைப்பற்றிச் சாமா மாமா வீட்டுக்கு வந்ததும் எல்லோரிடமும் சொல்லிச் சொல்லிச் சிரித்தார். ''நான் மாத்திரம் அந்த மூன்று உத்தியோகஸ்தர்களில் ஒருவராக இருந்திருந்தால் அந்தக் குறத்தியின் தைரியத்தை மெச்சி அவளுக்குப் பரிசு கொடுத்திருப்பேன்'' என்ருர்.

(தொடரும்)



# லீடர் மணி

**'ஆர்வி'**

மணி தன் நண்பர்களைப் பார்த்து, ''இவ்வளவு கேவலமான முறையில் தேர்தல் நடக்கும் என்று தெரிந்திருந்தால், நான் அபேக்ஷகராக நிற்கச் சம்மதித்திருக்கவே மாட்டேன்'' என்றான்.

''இதிலே கேவலம் என்னடா நடந்துவிட்டது? தோல்வி ஜுரத்தில் உளறுகிறாயே!'' என்று அந்தப் பக்கமாக வந்த பாலுவின் நண்பன் ஒருவன் மணியைப் பார்த்துப் பரிகாசம் செய்தான்.

''தோல்வியைக் கண்டு நான் அஞ்சவில்லை. நீங்கள்தான் நடு நடுங்கி, லஞ்சம் கொடுக்கிறீர்கள்?'' என்றான் மணி.

''அடேடே, 'சீச்சீ, பழம் புளிக்கும்' என்ற நரி மாதிரிப் பேசுகிறாயே! கௌரவமாக முன்னேயே விலகியிருக்கலாமே!'' என்றான் பாலுவின் நண்பன்.

தேர்தல் அன்று மாலையே ஓட்டுக்களை எண்ணத் தொடங்கினார்கள். பாலுவின் நண்பர்கள் மாலையும் கையுமாக வெளியே காத்து நின்றார்கள். முடிவு தெரிந்ததும் ஒரு சைக்கிள் ஊர்வலம் கிளம்ப வாடகை சைக்கிள்கள் பேசித் தயாராக ஏற்பாடு செய்திருந்தார்கள்.

பள்ளிக்கூடமே திரண்டு கூடியிருந்தது. தலைமையாசிரியர் மேடைமீது ஏறி முடிவை வாசித்தார்: ''குழந்தைகளே! பெரிய பெரிய தேர்தல் எல்லாம் தலை குனியும்படி தேர்தலில் கலந்து கொண்ட அருமை மாணவர்களே, மாணவிகளே! இந்த வருஷத்து லீடராக நீங்கள் பெருவாரியான ஓட்டுக்கள் கொடுத்துத் தேர்ந்தெடுத்திருக்கும் மணியை நான் பாராட்டி வாழ்த்துகிறேன்.''

அவருடைய முடிவு கணநேரம் இடி விழுந்த அதிர்ச்சிபோல் திகைப்பாக இருந்தது. அனைவரும் அசையாமல் நின்றார்கள். அவர்கள் கோஷம் செய்வதற்கு முன்பாகவே தலைமையாசிரியர் மீண்டும், ''குழந்தைகளே! ஓட்டுகளின் விவரம் வருமாறு: ஆயிரத்து அறுநூறு ஓட்டுகள் மணிக்கு. நூற்றிப் பதினேழு ஓட்டுகள் அவனோடு போட்டி போட்ட பாலுவுக்கு! எட்டில் ஒரு பங்குக்கும் குறைவான ஓட்டுப் பெற்ற பாலு, வகுப்பு லீடர் பதவியையும் இழக்கிறான்'' என்று கூறி முடித்த போது, மாணவ மாணவிகளின் பலத்த கரகோஷம் வானை முட்டியது. மணிக்கே தன் காதுகளை நம்ப முடியவில்லை. 'இது என்ன கனவா நினைவா?' என்று அவன் திகைத்துப்போய் நின்றான்.

''லீடர் மணிக்கு!''

''ஜே!''

''வாடகை சைக்கிள்களுக்கு!''

''ஷேம்!''

''தோல்வி மாலைகளுக்கு!''

''டபிள் ஷேம்!''

''தோல்வி வீரர் பாலுவுக்கு''

'அசுக்' என்று ஒரே ஒரு தும்மல் சத்தம்தான் கேட்டது. மற்றவர்கள் கேலியாகச் சிரித்தார்கள். பாலுவின் முகம் செவ செவ என்று ஆகிவிட்டது.

எல்லாரும் மணியைத் தலையில் தூக்கிகொண்டு ஓடினார்கள். ஒருவன் பாலுவுக்கு வந்த மாலையையே பிடுங்கி மணியின் கழுத்தில் போட்டான். ஒரே ரகளையும் ஆரவாரமுமாக இருந்தன.

''மணி-ஒரு விஷயம்! உடனே ஜெனரல் ஆஸ்பத்திரிக்குப் போகலாம்; கிளம்பு!'' என்று யாரோ காதருகில் சொன்னார்கள்.

மணி திரும்பிப் பார்த்தான். குப்புசாமிதான் அவனைக் கூப்பிட்டுக்கொண்டிருந்தான். என்னமோ, ஏதோ என்று மணி உடனே அவன் பின்னால் கூட்டத்துக்குத் தெரியாமல் நழுவிச் செல்லலானான்.


மணி தன் வெற்றியைத் தானே எப்படிச் சொல்லுவது என்ற தயக்கத்துடன் ஆஸ்பத்திரிக்குள் நுழைந்தான். ஆனால் சந்துரு சந்தோஷத்தோடு புன்முறுவல் செய்து, ''கூச்சப்படாதே மணி. எனக்குத் தெரியும். குப்புசாமி சொல்லிவிட்டான். உன்னை லீடர் எலெக்ஷனுக்கு உன் இஷ்டம் இல்லாமலே வற்புறுத்தி உன் வகுப்பு மாணவர்கள் நிறுத்தி வைத்திருக்கிறார்கள். உனக்குச் சொல்லாமலே வெற்றியையும் தேடித் தந்துவிட்டார்கள்'' என்றான் சந்துரு.

''ஆமாம்'' என்று தலையை ஆட்டினான் மணி.

''எனக்கு இதைக் கேட்டதிலிருந்து எத்தனை சந்தோஷமாக இருக்கிறது, தெரியுமா? ஹாஸ்டலில் நடந்த திருட்டுக்கும் உனக்கும் சம்பந்தம் இல்லை என்று தெரிந்தபோது ஏற்பட்ட சந்தோஷத்தைவிடச் சந்தோஷமாக இருந்தது. பெருமையாகவும் இருந்தது'' என்றான் சந்துரு.

''ஹாஸ்டலில் நடந்த திருட்டா? ஓ! பாலுவின் பெட்டியை உடைத்து, திருடப்பட்டிருந்ததைத்தானே சொல்கிறாய்?''

''ஆமாம் மணி, ஆமாம். பாலர் கதிரில் உன் திருட்டுச் சரித்திரம் வரப் போகிறது என்று சொன்னார்களே, அதைத்தான் சொல்



கிறேன்! அந்தத் திருட்டு அப்புறம் ரொம்ப நாள் கழித்துத்தான் அம்பலம் ஆயிற்று. அருணஜடை வீட்டில் இருந்தானே கங்கன், உன் பழைய விரோதி, அவன் வேலை அது. உன்மீது பழியைச் சுமத்தவே அந்தப் பயல் அந்த வேலை செய்திருக்கிறான். அப்புறம் குப்புசாமிதான் உதைத்து விஷயத்தை வெளிப்படுத்தினான். அந்த ஹாஸ்டல் பாலு உண்மை தெரிந்தும் உன்னைக் கேவலப்படுத்துவதற்காக இந்தப் பிரசாரம் செய்திருக்கிறான்!'' என்றான் சந்துரு.

மணிக்கு இந்த விஷயங்கள் எல்லாம் ஆச்சரியமாய் இருந்தது. மற்றொரு விதத்தில் பெருத்த ஆறுதலாகவும் இருந்தது. ''அப்பாடா!'' என்று பெருமூச்சு விட்டான்.

''ஆமாம்; அந்தக் கங்கன் இப்போது எங்கே?'' என்றான்.

''அவனா? பார்ஸ்டல் ஸ்கூலில் வாசம் செய்கிறான் இப்போது. திருட்டின் அவதாரம்! நமக்குச் சாப்பாடு எப்படி அவசியமோ அதைப்போல அவனுக்குத் திருட்டுத் தொழில் அவசியம். திருடாவிட்டால் அவனால் வாழவே முடியாது. குப்புதான் அவனைப் பார்ஸ்டல் ஸ்கூலில் சேர்க்க முயற்சி எடுத்துக்கொண்டது; இனியாவது அவன் திருந்தவேண்டும்'' என்றான் சந்துரு.

''அவ்வளவு தூரம் நடந்திருக்கிறதா? எனக்கு இதெல்லாம் ஒன்றும் தெரியாதே! நான்கூட பாலுவுக்கு எதிராக எலெக்ஷனுக்கு நிற்க யோசனை செய்தேன். ஹாஸ்டல் திருட்டை என்மீது சுமத்தி, கேவலமாகப் பிரசாரம் செய்து என்னை அவமானப்படுத்துகிறானே என்று பயந்தேன். இப்பொழுதுதான் எனக்குத் தெம்பு வந்தது. எல்லாம் உன்னால்தான்'' என்று மணி விடைபெற்றுத் திரும்பினான்.

சுமார் ஐந்து தப்படிகூட நடந்திருக்க மாட்டான். அதற்குள் சந்துரு, ''மணி! மணி!'' என்று கூப்பிட்டான்.

மணி திரும்பி அவன் கட்டிலண்டை வந்து உட்கார்ந்தான். பின்புறத்திலிருந்து மறுபடியும் யாரோ, ''மணிதான்! நம்ப மணியேதான்!'' என்று ஓர் அம்மாள் உரத்த குரலில் யாரிடமோ சொல்லிக் கொண்டிருந்தது காதில் விழுந்தது.

மணியும் சந்துருவும் அந்தப் பக்கமாகத் திரும்பிப் பார்த்தார்கள். மணிக்குத் தன் கண்களையே நம்ப முடியவில்லை.


நோயாளியின் கட்டிலில் அவனுடைய தந்தை படுத்திருந்தார். அவர்தான் எவ்வளவு பலஹீனமாகக் காணப்பட்டார்! பக்கத்தில் அவனுடைய சித்தி ஒரு ஸ்டூலில் அமர்ந்திருந்தாள். இருவரும் மணியையே ஆவலோடு பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

(தொடரும்)

போட்டோவுக்கு நிக்கமாட்டேன், போ!



போட்டோ: என். ராமகிருஷ்ண.




# விமான யாத்திரை

'வசுமதி'

உலகம் சிறிதாகிக்கொண்டே வருகிறதென்றால், நம்ப முடியவில்லை; இல்லையா? ஆனாலும் இது உண்மைதான். பதினைந்து அல்லது இருபது வருஷங்களுக்கு முன்னால், பதினெட்டு நாட்கள் பிரயாணம் செய்து அடையக்கூடிய ஓர் இடத்தை, இன்று பதினெட்டே மணிகளுக்குள் நீங்கள் அடையலாம். இப்போதாவது ஒத்துக் கொள்வீர்களா, உலகம் சிறிதாகிக் கொண்டே வருகிறது என்பதை!

இன்று காலையிலே சென்னை. நாளை மாலையிலே பாரிஸ், அல்லது லண்டன்; மறுநாள் நியூயார்க்கு! எப்படி? கனவு காண்பதுபோல் இருக்கிறதல்லவா? மணிக்கு முந்நூற்றைம்பது மைல் வேகம் பறந்து செல்லக்கூடிய விமானங்கள்தான் இந்தக் கனவை நனவாக்குகின்றன. இன்னம் சொல்லப்போனால், இடைவிடாமல் பிரயாணம் செய்தால் நூற்றிருபது மணிகளுக்குள்ளே, சென்னையை விட்டுக் கிளம்பி, உலகையே ஒரு முறை சுற்றிவிட்டு மறுபடி சென்னை வந்து விடலாம்!

ஒரு நாள் நாங்கள் எல்லோரும் அமெரிக்கா செல்லப்போகிறோம் என்று தெரிந்ததும் எனக்குப் புல்லரித்தது. ஐம்பத்தொரு வருஷங்களுக்கு முன், 'ரைட்' சகோதரர்கள் 'கிட்டி ஹாக்' என்ற இடத்திலே முதன் முதலாக, வானத்திலே மனிதன் பறக்க முடியும் என்பதை நிரூபித்துக் காண்பித்தார்கள். அன்று சில விநாடிகளே அவர்கள் விமானம் ஆகாயத்தில் இருக்க முடிந்தது. இன்று மணிக்கணக்கிலே விமானங்கள் ஆகாயத்தில் பறந்துகொண்டிருக்கின்றன.

இந்தியாவிலிருந்து வெளிநாடுகள் செல்ல, எட்டு முக்கிய விமானக் கம்பெனிகள் தங்கள் விமானங்களில் ஏற்றிச் செல்லத் தயாராக இருக்கின்றன. இவற்றுள் முக்கியமானவை நமது தேசியக் கம்பெனியான ஏர் இந்தியா இன்டர்நாஷனல், டிரான்ஸ் வர்ல்டு ஏர்லைன்ஸ், பிரிட்டிஷ் ஓவர்ஸீஸ் ஏர்வேஸ் கார்ப்பரேஷன், பான் அமெரிக்கன் வர்ல்டு ஏர்வேஸ், கே. எல். எம். ராயல் டட்ச் ஏர் லைன்ஸ் என்பவை.




லண்டன் - வெஸ்ட் மினிஸ்டர் பாலம்

வெளிநாடு போவதென்றால் 'பாஸ்போர்ட்' வேண்டும், நம்முடைய 'பாஸ்போர்ட்' நம்மை வெளி நாடுகளுக்குச் செல்ல அநுமதிக்கிறதே தவிர, மற்ற நாடுகளிலே தங்க, அந்த நாட்டின் அநுமதி வேண்டும். இந்த அநுமதி தான் 'விஸா'. டிரான்ஸ் வர்ல்டு ஏர் லைன்ஸ் (T.W.A.) என்ற விமானக் கம்பெனியின் ஒத்துழைப்பிலே, நாங்கள் இந்த 'விஸாக்'களை வாங்கிக் கொண்டோம்.


சென்னையிலிருந்து பம்பாயை அடைந்து அங்கிருந்து இரவிலேதான் எங்கள் விமானம் புறப்பட இருந்தது. பம்பாயிலிருந்து கெய்ரோ செல்லும் இந்த விமானம் 'கான்ஸ்டலேஷன்' என்ற பிரிவைச் சேர்ந்தது. இது மணிக்கு முந்நூறு மைல் வேகத்திலே, தரை மட்டத்திலிருந்து 20,000 அடி உயரத்திலே பறந்து செல்லும். இந்த விமானத்திலே, மறைகளும் 'ரிவெட்'டுகளும் தவிர 134,000 தனித்தனி அங்கங்கள் உண்டென்றால் நமக்குத்தலையைச்சுற்றுகிறதல்லவா இந்தக் 'கான்ஸ்டலேஷன்' விமானங்களைத் தவிர இன்னும் நாற்பத்

சுவிட்ஜர்லாந்திலுள்ள மாட்டர்ஹார்ன் மலைச்சிகரம்



தெட்டு வகையான விமானங்கள் உலகின் பல் வேறு மார்க்கங்களிலே பறக்கின்றன.


எல்லாப் பிரயாணிகளும் அவரவர்கள் இடத்தில் உட்கார்ந்தவுடன், அவரவர்கள் 'ஸீட் பெல்ட்டை'ப் போட்டுக்கொள்ள வேண்டுமென்று பிரயாணிகளை உபசரிக்கும் 'ஹோஸ்டெஸ்' எங்களைக் கேட்டுக்கொண்டாள். சில நிமிடங்களிலே விமானம் அந்தக் 'கான்க்ரீட் ரன்வே'யில் ஓட ஆரம்பித்தது. சிறிது தூரம் சென்றவுடன், திரும்பி வேகமாக ஓடி, சில விநாடிகளுக்குள்ளே தரையை விட்டுக் கிளம்பி, மேலே 'விர்'ரென்று ஏற ஆரம்பித்தது. கீழே தெரிந்த கட்டடங்கள், கொஞ்சம் கொஞ்சமாகச் சிறிதாகிக் கடைசியிலே ஒரு கறுப்புப் புள்ளியாக மாறியது. எங்களை 'ஸீட்'டுடன் சேர்த்துக் கட்டிய 'பெல்ட்'டைப் பிறகு அவிழ்த்து விட்டோம்.




பாரிஸ் – ஈபில் கோபுரம்

விமானம் கிளம்பிய சிறிது நேரத்துக்கெல்லாம் எங்களைத் தேடிச் சாப்பாடு வந்தது. நாங்கள்

எகிப்திலுள்ள ஸ்பிங்ஸ்ஸும் பிரமிட்டும்





முதல் வகுப்பு விமானத்தின் உட்புறத் தோற்றம்

புலாலுணவு சாப்பிடுவதில்லை என்று முன்னமேயே அறிவித்திருந்ததால், எங்களுக்குச் சைவ உணவு கொடுக்கப்பட்டது. பழ ரசம், தக்காளி சூப், பூரி, பருப்பு, சாதம், கறி, தயிர், சட்னி, மாங்காய் ஊறுகாய், இனிப்புப் பட்சணங்கள், பழம், காபி - மிகவும் சம்பிரமமான சாப்பாடுதான்!

இரவு ஒன்பதரை மணி. 'ஹோஸ்டெஸ்' எங்கள் 'ஸீட்'டில் உள்ள ஒரு சிறு பிடியைத் தளர்த்தினாள். ஈஸி சேரில் சாய்ந்துகொள்வதுபோல், எங்களால் சாய்ந்து தூங்க முடிந்தது.

டூரிஸ்ட் விமானத்திலே, ஐம்பத்தொரு பிரயாணிகள் ஏற்றிச் செல்லப்படுகிறார்கள். சில விமானங்களிலே தூங்கிச் செல்லத் தனியே 18 'பெர்த்'கள் உள்ளனவாம்.

கெய்ரோ விமான நிலையத்தை முன்பு 'கிங் பரூக்' நிலையம் என்று அழைத்தார்கள். இப்போது அது 'கெய்ரோ இண்டர்நாஷனல்' நிலையம் என்று அழைக்கப்படுகிறது.

கெய்ரோவில் சிறிது நேரம் இளைப்பாறிவிட்டு, ஊர் சுற்றக் கிளம்பினோம். இங்கே முக்கியமாகப் பார்க்க வேண்டிய இடங்களான 'பிரமிட்டு'கள் 'ஸ்ஃபிங்ஸ்' இரண்டையும் பார்த்தோம். தேசத்திற்கே உயிர் நாடிபோல் விளங்கும் நீல நதியையும் நாங்கள் பார்த்துவிட்டு வந்தோம்.

அங்கிருந்து ரோம் நாலரை மணிநேர தூரத்தில் இருக்கிறது. இந்தப் பிரயாணத்தின்போது எங்களுக்கு மனோரம்மியமான காட்சி தெரிந்தது. விமானத்தில் 10000 அடி உயரம் பறக்கும்போது 123 மைல்கள் வரையிலும், 20000 அடி உயரப் பறக்கையிலே 173 மைல்கள் வரையிலும் பார்க்க முடியுமாம்.

ரோமுக்கு மேலே பறக்கும்போது ஸெண்ட் பீடர்ஸ் கதீட்ரலுடைய வெள்ளைக் கும்பமும், 'கொலோஸிய'த்துடைய பாழடைந்த பகுதிகளும் தெரிந்தன. ரோமை நினைத்தவுடன் நமக்குப் பண்டைச் சரித்திரமும் ரோம சாம்ராஜ்யத்தின் பழம் பெருமையும் நினைவுக்கு வருகின்றன. நகரெங்கும் நீர்ச்சுனைகள். உலகெங்கும் புகழ்பெற்ற கலைச் சின்னங்கள், சித்திரம், சிற்பம் எல்லாம் இங்குள்ள கண்காட்சிச் சாலையில் உள்ளன.

இரண்டரை மணி நேரத்தில் நாங்கள் ஜெனிவாவை அடைந்தோம். உலகத்தின் விளையாட்டு மைதானத்துக்கும் அழகிய ஏரி

களுக்கும், பாய்ந்தோடும் சிறு நதிகளுக்கும் உறைவிடமான சுவிட்சர்லாந்தின் அழகுக்கு ஈடு இணை ஏதும் இல்லை. ஜெனிவா ஏரி, மாட்டர்ஹார்ன் சிகரம் இரண்டும் மனோரம்மியமான காட்சிகள். சர்வதேச சங்கம் இருந்த மாளிகை, ருஸ்ஸோ ஞாபகச் சின்னம் இவைகளையெல்லாம் அங்கே சுற்றிப் பார்த்தோம்.

ஜெனிவாவில் இருந்து கிளம்பிய நாங்கள் ஒன்றரை மணி நேரத்தில் பாரிஸை அடைந்தோம். இரவு ஒன்பது மணி என்றாலும், பகல் போல் இருந்தது பாரிஸ் நகரம். எங்களுடன் வந்தவர் கூறியதுபோல் இரவு எட்டு மணிக்குப் பின்னர்தான் பாரிஸ் விழித்துக் கொள்கிறது என்று சொல்ல வேண்டும். பழங்கால மாளிகைகளும் சர்ச்சுகளும், கட்டடங்களும் நிறைந்தது பிரான்ஸ். பாரிஸ் என்றால் உடனே நினைவுக்கு வரும் வெற்றி வளைவும் 'ஈபில் டவரு'ம் நாங்கள் பார்த்தவற்றுள் முக்கியமானவை.

லண்டனில் ஸெண்ட் பால்ஸ் கதீட்ரல், பக்கிங்ஹாம் அரண்மனை, பார்லிமெண்ட் கட்டடம், லண்டன் பாலம், ஹைட்பார்க், கென்ஸிங்டன் தோட்டங்கள் முதலிய இடங்களைப் பார்த்துவிட்டு மறுநாள் இரவு ஒன்பது மணிக்குக் கிளம்பினோம்.

இப்போது நாங்கள் சென்ற விமானத்தில் 'ஸீட்'டுகளைத் தவிர முழு 'பெர்த்'களும், சாய்வு ஸீட்'டுகளும் இருந்தன.


அயர்லாந்திலுள்ள 'ஷான'னில் கொஞ்ச நேரம் தங்கிய பிறகு மறுபடி கிளம்பியது எங்கள் விமானம். கண்ணுக்கெட்டிய வரை எங்கே பார்த்தாலும் ஒரே சமுத்திரம். மேலே மினுக் மினுக் என்னும் நட்சத்திரங்கள். பம்பாயிலிருந்து கெய்ரோவுக்குப் பிறகு, இதுதான் விமானத்தில் நீண்ட பிரயாணம். அட்லாண்டிக் சமுத்திரத்தில் கால நிலைகளையறிந்து சொல்லுவதற்காக என்றென்றும் நிறுத்தப்பட்டிருக்கும் கப்பல்களுடன் ரேடியோத் தொடர்பு கொள்வாராம் விமானி.

மறுநாள் காலையில், நியூயார்க்கின் வானளாவிய கட்டடங்கள் எங்களுக்குத் தெரிந்தன. சென்னையிலிருந்து கிட்டத்தட்ட பதினாலாயிரம் மைல்கள் தூரத்திலுள்ளது நியூயார்க். புறப்பட்டதிலிருந்து ஒரு வாரத்துக்குள்தான் எவ்வளவு இடங்களில் இறங்கிப் பார்த்துவிட்டு வந்திருக்கிறோம்!

திரும்பி வருகையிலே எனக்கு பஸிபிக் மகா சமுத்திரம் வழியாக வரவேண்டுமென்று ஆசை. அதற்குண்டான வித்தியாசத்தை மட்டும் கொடுத்துவிட்டால், டிக்கட்டுகளை மாற்றிக் கொடுக்கிறார்கள் விமானக் கம்பெனியார். விமானக் கம்பெனிகளில் இந்த டிக்கட் முறை மிகவும் சிறப்பாக இருக்கிறது. இதற்கெல்லாம் காரணம் பல விமானக் கம்பெனிகளின் பிரதிநிதிகளும் கூடி ஸ்தாபித்த 'இண்டர் நாஷனல் ஏர் டிரான்ஸ்போர்ட் அஸோஸியேஷன்'தான். இந்த 'அயாடா' ஸ்தாபனத்தினால் எல்லாருக்கும் குறிப்பாக விமானப் பிரயாணிகளுக்குப் பல சௌகரியங்கள் ஏற்பட்டுள்ளன.



டூரிஸ்ட் விமானத்தில் ஓர் இரவு



நியூயார்க் ஸ்கைலேன் பாலம்

நியூயார்க்கிலிருந்து ஸான்பிரான் ஸிஸ்கோவுக்கு நேராக மூன்று விமானக் கம்பெனிகள் பிரயாணிகளை ஏற்றிச் செல்கின்றன. நான் இம்முறை பிரயாணம் செய்தது டி. டபிள்யூ. ஏ. கம்பெனியாரின் 'ஸூபர் ஜி' கான்ஸ்டலேஷனில். இதுதான் சமீபத்திலே வந்துள்ள புது விமானம். இதிலே முதல் வகுப்புப் பிரயாணிகள் அறுபத்து



ரோமாபுரியிலுள்ள வாடிகன் அரண்மனே

இரண்டு பேர் செல்லலாம். இந்த விமானத்திலே 'ராடர்' வசதிகள் உண்டு. பிராணிகள் உறையாட ஒரு தனி அறையே இருக்கிறது.

ஸான்பிரான்ஸிஸ்கோவில் ஒரே ஒரு நாள் தங்கிவிட்டு, நாங்கள் அங்கிருந்து ஞாயிறு அன்று பதினொரு மணிக்குக் கிளம்பினோம். அன்று மாலையிலே எங்கள் விமானம், ஹவாய் தீவுகளிலுள்ள ஹோனலூலுவில் இறங்கியது. இங்கே இரண்டு மணி நேரம்போல் தங்கினோம். எட்டு முக்கிய தீவுகள் கொண்டது இந்த ஹவாய். இங்கேதான் பெயர் பெற்ற 'வைகிகி' கடற்கரை இருக்கிறது. சுற்றியுள்ள கடலிலே பல பவழத்தீவுகள் உள்ளன.


ஹோனலூலுவிலிருந்து கிளம்பி அடுத்து நாங்கள் நின்றது சுமார் 2200 மைல் தூரத்திலுள்ள 'வேக்' தீவிலே. சாதாரணமாய் எட்டு மணி நேரத்திற்குள்ளே இந்த இடத்தை அடைந்திருக்க வேண்டுமல்லவா? 'வேக்' தீவிலே நாங்கள் இறங்கியபோது செவ்வாய்க்கிழமை காலை 2-30 மணி. இதன் காரணம் ஹோனலூலுவுக்கும் 'வேக்' தீவுகளுக்கும் மத்தியிலே நாங்கள் 'இன்டர் நாஷனல் டேட் லேன்' என்ற தேதிக் கோட்டைத் தாண்டியதுதான்.

'வேக்' தீவுகளிலிருந்து புறப்பட்டு ஜப்பானிலுள்ள 'டோக்கியோ' வந்தடைந்தோம். 'ஷியா பார்க்', அரண்மனை முதலிய இடங்களைப் பார்த்துவிட்டுக் கிளம்பினோம்.

டோக்கியோவிலிருந்து கிளம்பிய மறுநாள் காலை நாங்கள் 'ஹாங்காங்' கிலிருந்தோம். இந்த இடம் துரக்கிழக்கு வியாபாரத்துக்கு ஒரு கேந்திரஸ்தானம். இங்கிருந்து கல்கத்தா வரும் வழியிலே தாய்லாந்திலுள்ள பாங்காக் நகரத்தில் கொஞ்ச நேரம் தங்கினோம். மாலை முன்றேமுக்கால் மணிக்குக் கல்கத்தா 'டம்டம்' விமான நிலையத்தை மிதித்தவுடன், தாய்நாட்டிற்குத் திரும்பிவந்த சந்தோஷம் என்னைத் திக்குமுக்காடச் செய்தது. மறுநாள் அதிகாலையில் கல்கத்தாவைவிட்டுக் கிளம்பி, பகல் பன்னிரண்டு மணிக்கு மீனம்பாக்கத்தில் இறங்கினேன்.

ஐம்பதே வருடங்களுக்குள் இத்தனை வளர்ச்சி பெற்ற இந்தத் தொழிலோடு நம்முடைய வளர்ச்சியும் கலந்திருப்பதைத் தெரிந்து கொண்டேன்.

[இந்தக் கட்டுரையைத் தயாரிக்கத் துண்டுப் பிரசுரங்களும் புகைப்படங்களும் தந்து உதவிய T. W. A. ஸ்தாபனத்தாருக்கு எங்கள் நன்றி உரியது. ஆ-ர்.]




நாடு, மக்கள், நாணயம்.

# வெட்டி ஒட்டும் வேடிக்கை


## செய்யவேண்டிய விதம்

முதலில் பையன் கழுத்தில் D என்று குறிப்பிட்ட வட்டமான சிறு பாகத்தை வெட்டி எடுத்து விடுங்கள். வட்டத்தின் இருபுறங்களிலும் சிறு கோடுகள் இருக்கின்றன, அல்லவா? அவற்றையும் கத்தியினால் கிழித்துக் கொள்ளுங்கள். பிறகு C, B என்று போட்டுள்ள புள்ளிக் கோடுகளையும் கத்தியினால் கிழித்துக் கொள்ளுங்கள். கண்ணாடி டம்ளரில் கோடு போட்டுக் காட்டப்பட்டிருக்கும் பாகத்தையும் வெட்டி எடுத்து விடுங்கள். இப்போது எதிர்ப்புறமுள்ள அட்டையைக் கவனியுங்கள்.

அதில் பையனுடைய தலைப்பாகம் தெரிகிறது. அந்தப் பாகத்தைச் சுத்தமாகக் கத்தியினால் கோட்டோடு வெட்டிக் கொள்ளுங்கள். பக்கத்தில் காணப்படும் நீண்ட சித்திரத்தை வெட்டி எடுத்து, அதில் A என்று குறிப்பிடப் பட்டிருக்கும் பாகத்தையும் வெட்டி எடுத்து விடுங்கள். இப்பொழுது முன் பக்கத்திலுள்ள படத்தின் பின் பாகத்தில் B பகுதியில் நீண்ட சித்திரத்திலுள்ள B பகுதியைச் செருகிவிட வேண்டும். அதன் கீழ்ப்பகுதியிலுள்ள C என்ற துவாரத்தின் வழியாக மேலே தள்ளிவிடவும். பிறகு பையனின் தலைக்குக் கீழுள்ள வால்போன்ற பகுதியை D என்ற துவாரத்தின் வழியாகச் செலுத்திப் பின்புறத்தில் A என்று குறிப்பிட்டிருக்கும் பாகத்தில் செருகி விட வேண்டும்.

C என்ற அட்டைத் துண்டின் கீழ்ப் பகுதி வெளியே நீட்டிக்கொண்டிருக்கும். அதை மேலும் கீழுமாக உயர்த்தி இழுத்தால் அந்தப் பையன் கண்ணாடி டம்ளரிலிருந்து, குளிர்ப் பானத்தை உறிஞ்சுவதையும், பானம் தீர்ந்துபோய், மறுபடி நிரம்புவதையும் பார்க்கலாம்; மகிழ்ச்சியோடு பார்த்துக் கொண்டே இருக்கலாம்.





வெட்டி ஓட்டும் வேடிக்கை




விவரம் எதிர்ப் பக்கம்

# பொழுது போக்கு

இந்தப் பகுதி உங்கள் மண்டையைக் குழப்பவோ உங்களைத் திக்கு முக்காடச் செய்யவோ ஏற்பட்டதல்ல. இந்தப் பதினாறு பக்கங்களும் ஐந்து முதல் பதினைந்து வயதுள்ள எல்லாக் குழந்தைகளுக்கும் சிறந்த பொழுது போக்காக இருக்கும். பொழுது போக்குவதற்காக நீங்கள் உங்கள் மூளையைக் குடைந்துகொண்டு விழிக்கலாம். வயிறு வலிக்கச் சிரிக்கலாம். பிறர் அறிவை ஆழம் பார்த்துச் சோதிக்கலாம். எல்லோருமாகச் சேர்ந்து ஆனந்தப்படலாம்.


## தஞ்சாவூர்-தலையாட்டிப் பொம்மை





வர்ணம் பூசிப் பாருங்கள்

1–இல் சிவப்பு. 2–இல் பச்சை. 3–இல் ஊதா. 4–இல் மஞ்சள்.

1












10

9




# கண்கள்

இங்கே சில மிருகங்கள், பட்சிகளின் கண் பாகத்தைமட்டும் பார்க்கிறீர்கள். இதைக்கொண்டு அது எந்த மிருகம் அல்லது பிராணி என்பதைக் கண்டு




3

4




7





8



11



12


# க்விஸ்

பிடிக்க வேண்டும். எல்லா விடைகளும் சரியாக இருந்தால் நூறு மார்க்கு

விடைகள்: 64-ஆம் பக்கம். போட்டோ: புஷ்பத்துறை சுப்ரமண்ய


# சித்திரக் கட்டம்

க. திருநாவுக்கரசு






விடை: 64-ஆம் பக்கம்.

# இரு  க் குட்டிகள்

1 பெரிய  .  என்றால் ,  போன்ற  ய  களும் ,  போன்ற பி  களும் அங்கே வாழ்ந்தன. சிறு சிறு  களும்,  களும்,  களும் நடு நடுவே இருந்தன.

1 நாள்  களில்  தின்றுகொண்டிருந்த   ன.  கள் ஓடின.  கள் ஊளையிட்டன. ,  போன்ற  பறந்து சென்றன.  போல்  தி எழுந்தது. 1  க் கூட்டம்  செடி  களை நாசம் செய்துகொண்டு வந்தது.  கள் எங்கும் உ கூட்டமாகத் தான் செல்லும்.  ய  கள் கூட இந்தக் கூட்டத்தைத்  டு அஞ்சி, வெளியில்  காட்ட .  கள்


கரடீ க் கூடிந்து போயின. களும்
யான வெளிகளும் இருந்த சமவெளியை ந்தன.
களை ஒடித்து, களை முறித்து பசி ஆறின.
களைப் பெரிய கள் காணித்து வந்தன.
அப் இருந்தும் 2 க் குட்டிகள் தங்கி நின்று
விட்டன. இல் ந்துவிட்ட யால்
மற்ற கள் தவலிக்க கள் 2ம் காட்
நோக்கிச் சென்றன. ப போல் எரித்தது.
அங்கே 1 இழ தனியே நின்றது. அதைக் ட
2 களும் பயந்து வேறு யே சென்றன.
ஒரு குறுக்கிட்டது. 2 குட்டிகளும்
யில் குளிக்க விரும்பின. உடனே இறங்கி, களால்

த்தை உறிஞ்சி,  யில்  ந்துக் கொண்டன. பிறகு 

ஏறி, அங்குள்ள  த் தோட்டத்தை  ந்தன. 

கொண்ட மட்டும் கரும்  த் தின்றுவிட்டு,  ள. பக்

 ல் உள்ள ஒரு  இல் இருந்த  பிளிறலைக்

கேட்டு  களின் மேல்  ந்தது.  ந்தால் 

ந்தது. குட்டிகள் 2 ம்  த்தன, பின்னால் 

வெளிச்சத்தில் 1 பெரிய  வருவதைச் சிங்கம் 

டு கொண்டது. தனியே நின்ற கிழ  தான் அது. அது


தன் நீண்ட  களால் சிங்கத்தைக் குத்தியது:  யால்

சுருட்டி அடித்தது.  கள் 2 ம் இதுதான் சமயம்

என்று தப்பி ஓடித் தங்கள் கூட்டத்  போய்ச்

சேர்ந்துகொண்டன.

# 49 நட்சத்திரங்கள்




இதோ பக்கத்தில் 49 நட்சத்திரங்களை 15 நேர்க் கோடுகளில் கறுப்பு நட்சத்திரத்தில் தொடங்கி கறுப்பு நட்சத்திரத்தில் முடியும்படி இணைத்திருக்கிறது. உன்னால் அதேபோல் கறுப்பு நட்சத்திரத்தில் தொடங்கி கறுப்பு நட்சத்திரத்திலே முடியும்படி பன்னிரண்டே நேர்க் கோடுகளில் இணைக்க முடியுமா? முயன்று பார். முயன்று களைத்துப் போனால் 64-ஆம் பக்கத்தில் உள்ள விடையைப் பார்க்கலாம்.

# வெட்டி ஒட்டிப் பார்!



வர்ணமிட்ட இந்தப் பாகங்களைக் கத்தரித்துக் கொள்ளுங்கள். பிறகு இவற்றை ஓர் அட்டையில் வைத்து, சரியாகப் பொருந்தும்படி ஒட்டினால் காட்டிலே திரிகின்ற இதைக் காணலாம்.

விடை: 64-ஆம் பக்கம்.


தீபாவளிப் பரிசு

# முக விசித்திரங்கள்



## செய்யும் விதம்

கீழே காணப்படும் படத்தை வட்டமாக வெட்டி எடுத்துக் கொள்ளுங்கள். பிறகு நடுவில் புள்ளியிட்ட இடத்தை, எதிர்ப் பக்கத்திலுள்ள வட்டத்தின் மையத்தில் உள்ள புள்ளியோடு பொருந்தும்படி ஒரு குண்டூசியால் குத்திக் கொள்ளுங்கள். இப்பொழுது ஆறு முகங்கள் தெரிகின்றன. முகத்தின் மேல் பாகம் தனியாகவும் கீழ்ப்பாகம் தனியாகவும் இருக்கின்றன அல்லவா? இதில் வேடிக்கை என்னவென்றால் நடுவில் உள்ள வட்டத் தட்டைச் சுற்றி வந்தால் எந்த மேல்பாகத்தோடும் கீழ்ப்பாகமும் பொருந்தும். மொத்தம் இந்த மாதிரி எத்தனை விசித்திரமான முகங்கள் கிடைக்கின்றன என்பதைக் கண்டுபிடிப்பது ஒரு கணக்கு. அத்துடன் மட்டுமா? அத்தனை முக விசித்திரங்களும் நமக்கு எங்கேயோ, எப்போதோ பார்த்ததுபோல் வேடிக்கையாகவும் இருக்கும்.



விடை: 64-ஆம் பக்கம்.

# என்ன காட்சி?

முதலில் × இந்தப் பெருக்கல் குறியிட்ட இடங்களில் வெகு ஜாக்கிரதையாக வர்ணம் பூசிப் பாருங்கள். ஓர் அழகான காட்சியைக் காண்பீர்கள். பின்னர் • இவ்விதம் கரும்புள்ளிக் குறியிட்ட இடங்களிலும் வர்ணம் பூசுங்கள். இப்போது வேறு ஒரு தனி உருவத்தைக் காணலாம்.



விடை: 66-ஆம் பக்கம்

# சர்க்கஸ் கோமாளி




தீபாவளிப் பண்டிகை வந்தாலும் வந்தது; இந்தக் கோமாளிக்குக் கொண்டாட்டமாகப் போய்விட்டது. வயிறு வெடிக்கும்படி தித்திப்புத் தினுசுகளும் கார வகைகளும் அதற்குமேல் பழத் தினுசுகளும் சாப்பிட்டு விட்டு, ஒரு செம்பு காபியையும் குடித்துவிட்டான். நடக்க முடியவில்லை. இவைகள் யாவும் ஜீரணம் ஆவதற்காக, தீபாவளி லேகியத்தையும் சாப்பிட்டிருக்கிறான். எங்கே, இவன் தின்ற பட்சண வகைகளையும் பழவகைகளையும் அவன் சட்டையிலுள்ள எழுத்துக்களைக் கொண்டே உங்களால் சொல்ல முடிகிறதா, பார்ப்போம்!

விடை: 64-ஆம் பக்கம்.

# விடுகதைப் பாடல்கள்



ஜோதிமாமா



## 1

பச்சைநிறம் சிவப்புமஞ்சள்
  நிறமும் உண்டு;
பறக்கின்ற கொடிஅல்ல;
  பூவும் அல்ல.
உச்சியிலே திரியுண்டு;
  விளக்கு மல்ல.
உள்மருந்து கொள்ளும்;
  நோயாளி அல்ல.
அச்சமுற ஒலிசெய்யும்;
  சிங்கம் அல்ல.
அழகாகத் தொடுத்திருப்பார்;
  மாலை அல்ல.
இச்சையுடன் இளைஞர்கொள்வார்;
  மிட்டாய் அல்ல.
இதன்பொருளை இன்னதென
  இசைப்பார் உண்டோ?

## 2


காம்புமிக நீண்டிருக்கும்;
  காயும் அல்ல.
கறுத்தசட்டை அணிந்திருக்கும்;
  வக்கீல் அல்ல.



மேம்படுகுல் லாயணியும்; போலீஸ் அல்ல.
விதவிதமாய் ஒளிகொடுக்கும்; விளக்கும்அல்ல

வீம்புமிகு குழந்தைகள் வேண்டுமென்று
விரும்புவார்; தின்பண்டம் அதுவு மல்ல.

ஆம்பெட்டி யுள்வைப்பார்; ஆடை அல்ல.
அதை இன்ன தென்றுரைக்க ஆற்றல்
உண்டோ?



## 3

உழவன் விதைக்காத விதை
கொத்தன் கட்டாத கட்டடம்

வண்ணான் வெளுக்காத வெள்ளை
சிற்பி செதுக்காத கல்.

## 4

ஆலையிலே பம்பரமாய் ஆடிவளர்ந் தோமே
அண்ணன் அடித்தானே தம்பிசிரித் தானே

எல்லோரும் கூடி ஏற்றினர் அக்கினியில்
பிரித்து எடுத்தனரே பேய்க்கோலம்
கொண்டனரே

ஆட்டிக் குலுக்கி அடுப்பிலே வைத்தாரே
துள்ளி விழுந்தோமே தொண்ணூறாய்
ஆனோமே

காலில் உதைபட்டுக் கால்சாரி போனோமே.

## 5

பச்சை நிறச் சிப்பாய்
பவளநிறச் சிப்பாய்
உச்சிதமாம் வெள்ளைநிறம்
உள்ளதொரு சிப்பாய்
மூன்று பேருங் கூடி
முத்துக் கோட்டைக்குள்ளே
சேர்ந்து போகக் கண்டோம்
சிவப்பிரத்தம் கண்டோம்.



விடைகள்: 64-ஆம் பக்கம்

# பொழுதுபோக்கு விடைகள்


## கண்கள் க்விஸ்

1. கோழி. 2. புறா. 3. கிளி. 4. மான். 5. சிங்கம். 6. ஆடு. 7. யானை. 8. நாய். 9. புலி. 10. முயல். 11. பூனை. 12. பசு.

## சித்திரக் கட்டம்

இடமிருந்து வலம்: 1. வில். 2. சாவி. 4. பல். 6. ரயில். 7. மயில். 8. குதிரை. 12. ஒட்டகம். 13. படம். 14. புறா. 16. கை. 17. எலி. 18. பன்றி.

மேலிருந்து கீழ்: 1. விளக்கு. 3. விரல். 4. பல்லி. 5. தாமரை. 9. திருடன். 10. ஓடம். 11. பாம்பு. 15. மான்.



49 நட்சத்திரங்கள்

12 கோடுகள்

வெட்டி ஒட்டிப் பார்: கலைமான்.

தீபாவளிப் பரிசு: குழந்தைகளுக்குத் தீபாவளிப் பரிசு கண்ணன் தீபாவளி மலரே.

முக விசித்திரங்கள்: மொத்தம் 36 விதமான முகங்களைக் காணலாம்.

என்ன காட்சி? : குதிரைச் சவாரி; யானை சவாரி.

சர்க்கஸ் கோமாளி: 28 வகைப் பட்சணங்கள்; 2 வகைப் பழங்கள். 1. குஞ்சாலாடு. 2. தேங்காய் பர்பி. 3. பாதம் ஹல்வா. 4. பாதுஷா. 5. மைசூர்ப்பாகு. 6. குலோப் ஜாமன். 7. பால்பூரி. 8. போளி. 9. பால் கோவா. 10. கோதுமை ஹல்வா. 11. அவல் கேசரி. 12. சர்க்கரைப் பொங்கல். 13. ஜிலேபி. 14. ரஸகுல்லா. 15. ஜாங்கிரி. 16. பஜ்ஜி. 17. போண்டா. 18. மிக்சர். 19. இட்டிலி. 20. தோசை. 21. அப்பளம். 22. உப்புமா. 23. பக்கோடா. 24. ஓமப்பொடி. 25. அப்பம். 26. தேன் குழல். 27. தயிர் வடை. 28. வறுவல். பழம்: 1. வாழைப்பழம். 2. ஆரஞ்சுப் பழம்.

விடுகதைப் பாடல்கள்: 1. பட்டாஸ். 2. மத்தாப்பு. 3. பல். 4. சட்டிபானை. 5. தாம்பூலம்.



அமைதியான படிப்பு



# பொக்கிஷம்

## எஸ். ராமகிருஷ்ணன்

ரமணி அன்று காலையிலிருந்து பத்தாவது முறையாகப் பீரோவைத் திறந்து, தனக்காகத் தன் தகப்பனார் வாங்கி வந்த புதிய டிராயரையும் சட்டையையும் எடுத்துப் பார்த்தான். இன்னும் அரை மணி நேரத்தில் அந்த அழகிய ஆடைகள் அவன் உடலை அலங்கரிக்கும்.

பையன்கள் எல்லோரும் அவனையே பார்ப்பார்கள். ''டேய், ரமணி! உன் டிரஸ் மிகவும் நன்றாக இருக்கிறது. எங்கேடா வாங்கினாய்? என்ன விலையடா?'' என்று கேட்பார்கள். அவன் மனம் கற்பனை உலகிலே சஞ்சரிக்கத் தொடங்கியது. எத்தனை நாழிகை அவன் அப்படியே நின்றுகொண்டிருந்தான் என்பது அவனுக்கே தெரியாது.

''ஏய் ரமணி!'' என்று அவன் தாய் கூப்பிட்டதும்தான் தன் நிலையை உணர்ந்தான். தன்னை சுதாரித்துக் கொண்டு, ''ஏம்மா?'' என்றான்.

''மணி ஐந்தேகால் ஆகிவிட்டதே. புறப்படவில்லையா?''

''அடேடே, கவனிக்கவே இல்லையே. இதோ கிளம்பிவிட்டேன்'' என்று ஓடினான் அவன்.

அன்று அவன் படிக்கும் பள்ளியில் ஆண்டு விழா. அந்த ராஜ்யத்தின் மந்திரி ஒருவர் தலைமை வகிக்கிறார். அன்றைத் தினம் பல

போட்டிகளும் பந்தயங்களும் இருந்தன. அவைகளில் வெற்றி பெற்றவர்களுக்கு மந்திரி தகுந்த பரிசு அளிப்பார்.

எல்லோரையும் கவர்ந்த போட்டி ஒன்றே ஒன்றுதான். அந்தப் போட்டியில் அநேகமாக எல்லோருமே பங்கு கொள்ளலாம். புது முறையான போட்டி; அந்த ஆண்டு புதிதாக வந்த தலைமை உபாத்தியாயர் கண்டுபிடித்த போட்டி.

'ஒவ்வொரு பையனும் காப்பாற்றத் தகுந்ததாக நினைக்கும் பொருள் எது எது என்று நினைக்கிறீர்கள்; அது இனி கிடைக்கக் கூடாத பொருளாகவும் இருக்க வேண்டும்.' இதுதான் நிபந்தனை. பையன்களின் புத்திசாலித்தனத்தைச் சோதிப்பதற்காகவே இந்தப் போட்டி.

ரமணி இதில் சேரத் தயங்கினான். அவனிடம் அப்படி உயர்ந்த பொருள் ஒன்றுமில்லையே. கண்டிப்பாகக் கோடி வீட்டுக் கோபுதான் இந்தப் பரிசைத் தட்டிக் கொண்டு போவான். காரணம் அவன் அப்பா, இங்கிலாந்து அமெரிக்கா முதலிய தேசங்களுக்குப் போய் வந்திருக்கிறார். பல அரிய விலையுயர்ந்த பொருள்களை வாங்கி வந்திருப்பார். அவைகளில் ஒன்றைக் காட்டி வெகு சுலபமாகக் கோபு பரிசைத் தட்டிக்கொண்டு போய்விடுவான் என்று எண்ணினான் ரமணி.

ரமணியின் எண்ணத்தை அறிந்த அவன் தந்தை, ''கவலைப்படாதே. என்னிடம் அரிய பொக்கிஷம் ஒன்று இருக்கிறது. அது பலரிடம் இருக்கலாம். ஆனால் அதை யாராலும், ஏன் கடவுளே பெற முயன்றாலும் இனி அடைய முடியாது; கிடைக்காது. அதனால் பரிசு உனக்குத்தான்'' என்று கூறினார்.

ரமணி எல்லையில்லா மகிழ்ச்சி கொண்டான். மந்திரி கையால் பரிசு பெறப் போகிறோம் என்ற ஆனந்தத்தில் முகம் கழுவி, புதிய ஆடைகளை அணிந்து கொண்டான். தன் தந்தையின் அறையை அடைந்து, ''அப்பா, நேரமாகி விட்டது'' என்றான்.

அவர் எழுந்தார். பெரிய பெட்டியைத் திறந்தார். அதனுள்ளிருந்து சிறிய கைப்பெட்டியை எடுத்து, அதையும் திறந்தார். அதனுள் அழகான சிறிய மணிபர்ஸ் இருந்தது. அதிலிருந்து ஒரு பத்து ரூபாய் நோட்டை எடுத்து, கண்களில் ஒற்றிக்கொண்டு, ''ரமணி, ஜாக்கிரதை. கெட்டுப் போக்கி விடாதே'' என்று சொல்லிக் கொண்டே அவனிடம் நீட்டினார்.

அதைக் கண்டதும் மலர்ந்திருந்த அவன் முகம் சுருங்கியது. ''அப்பா, இதுவா விலைமதிப்பில்லா பொக்கிஷம்? இது பத்து ரூபாய் நோட்டல்லவா? இதன் மதிப்பு பத்து ரூபாய்தானே!'' என்றான்.

''சீ, அசடே! இதன் மதிப்பு உனக்குத் தெரியாது. நான் இப்போது சொல்லவும் போவதில்லை. இதைக் கொண்டுபோய்க் கொடு. கண்டிப்பாகப் பரிசு உனக்குத் தான்'' என்றார் அவர்.

''உண்மையாகவா?'' என்றான் ரமணி, கம்மிய குரலில்.

''கண்டிப்பாக உனக்குத்தான்.''

''பரிசு கொடுக்கப் போவது நீங்கள் என்று எண்ணமோ?''

''நானாக இருந்தால் உனக்குத் தான் கொடுப்பேன். மந்திரி தலைமை வகிப்பதால் இதன் மகிமையை நன்கு அறிவார். அதனால் பரிசு உனக்குத்தான், போ.''

திருப்தியில்லா மனத்துடன் போகத் தொடங்கினான் ரமணி. அதுவரையிருந்த மகிழ்ச்சியும், நடையில் மிளிர்ந்த துள்ளலும் அவனிடமிருந்து மறைந்தன. அப்பா ஏமாற்றுகிறார். இதைக் கொண்டுபோய்க் காண்பித்தால் கண்டிப்பாக எல்லாரும் என்னைப் பரிகசிப்பார்கள். பத்து ரூபாய் நோட்டை மந்திரியோ, மற்றவர்களோ, பார்த்திருக்க மாட்டார்களா என்ன? நூறு ரூபாய் - ஏன் ஆயிரம் ரூபாய் நோட்டைக்கூட பார்த்திருப்பாரே மந்திரி!' என எண்ணினான்.

அவனோடு கோபுவும் பாலுவும் சேர்ந்து கொண்டார்கள். கோபு தன் கையில் அழகான வெல்வெட் பெட்டி ஒன்று வைத்துக்கொண்டிருந்தான். பாலுவின் கையிலும்

ஓர் அட்டைப் பெட்டி. இரண்டையும் பார்த்தான் ரமணி. கோபுவின் தகப்பனர் அமெரிக்கா போனவர். பாலுவின் தகப்பனர் சிங்கப்பூர், ஜப்பான் என்று போனவர். அதனுல் இருவருமே விலையுயர்ந்த பொருளாகக் கொண்டு வந்திருப்பார்கள்.

"டேய், பெட்டியில் என்னடா?" என்று கோபுவைப் பார்த்துக் கேட்டான் ரமணி.

கோபு பெட்டியைத் திறந்தான். அதனுள் அரை அடிக்கு, தந்தத்தினுல் செய்த அமெரிக்கா சுதந்தர தேவியின் சிலை இருந்தது.

ஆகா, அதன் அழகே அழகு! கண்டிப்பாகப் பரிசு கோபுவுக்குத்தான்!

"நீ என்னடா கொண்டு வந்திருக்கிறுய்?" என்று பாலுவைக் கேட்டான் ரமணி.

அவன் தன் தந்தப் பெட்டியிலிருந்து மரகத புத்தரைக் காண்பித்தான். அதுவும் மிக அழகாகவே இருந்தது.


இப்போது பரிசு கோபுவுக்கா, பாலுவுக்கா? சிந்தித்தான் ரமணி. முடிவு காண முடியவில்லை. 'சரி, முடிவை மந்திரிக்கே விட்டுவிடுவோம்' எனத் தீர்மானித்தான்.

"நீ ஒன்றும் கொண்டு வரவில்லையா?" என இருவரும் ஒரே சமயத்தில் கேட்டு ரமணியைத் திக்குமுக்காடச் செய்தனர்.

"இல்லேடா" என்றுன் ரமணி.


"ஏண்டா?" என்றுன் கோபு.

"எங்கப்பா, அமெரிக்கா போயிருக்கிறுரா.." என்று ஆரம்பித்தான் ரமணி.



''இல்லை; சிங்கப்பூர், ஜப்பான் முதலிய நாடுகளுக்குப் போயிருக்கிறாரா?'' என்று முடித்தான் பாலு. கோபு சிரித்தான். ரமணிக்கு ஆத்திரம் தாங்கவில்லை. அப்பாவின்மேல் தான் அசாத்தியக் கோபம் வந்தது. 'இந்தப் பத்து ரூபாயைக் காண்பிப்பதில்லை. காண்பித்தால் எல்லோரும் சிரிப்பார்கள்' என முடிவு செய்துகொண்டான்.

அன்று பள்ளியில் எங்கே பார்த்தாலும் தோரணம். கட்டடத்தின் உச்சியிலே தாயின் மணிக்கொடி பட்டொளி வீசிப் பறந்துகொண்டிருந்தது. விழா நடப்பதற்காக விளையாட்டு மைதானத்தில் பெரிய பந்தல் போடப்பட்டிருந்தது. கொத்துக் கொத்தாக விளக்குகள் தொங்கிக்கொண்டிருந்தன. எல்லாம் ஒரே சமயத்தில் எரிந்தால் எவ்வளவு அழகாக இருக்கும் என்று சிந்தித்தான் ரமணி. ஒரே திருவிழாக் கோலம்தான்!



ரமணியின் புது ஆடைகளைச் சில மாணவர்கள் புகழ்ந்தார்கள். அவன் விரும்பியபடி, அவன் விரும்பிய கேள்விகளையே கேட்டார்கள். ஏதோ சுவாரஸ்யமில்லாமல் பதில் சொன்னான் அவன்.

வாசலருகில் பரபரப்பு உண்டானதைக் கண்டதும் ரமணி திரும்பினான். பளபளப்பான புத்தம் புதிய கார் ஒன்று வந்து நின்றது. அதிலிருந்து ஒருவர் இறங்கினார். அவரை ஒரே மரியாதையுடன் தலைமை ஆசிரியரும் ஏனையவர்களும் விழா நடக்கும் பந்தலுக்கு அழைத்துச் சென்றார்கள்.

'இவர் யார். இவருக்கு ஏன் இவ்வளவு மரியாதை?' என எண்ணினான் அவன். பக்கத்தில் இருவர் பேசிக்கொண்டது அவன் காதில் விழுந்தது: ''மந்திரி சரியான நேரத்திற்கு வந்துவிட்டாரே!''

ரமணி கிராமத்தில் வசித்தவன். இந்த ஆண்டுதான் பட்டணத்திலிருக்கும் பெற்றோரோடு வசிக்கவந்தான். ஐந்தாம் வகுப்பில் படித்து வந்தான். 'மந்திரி என்றால் ராஜா ராணிக் கதையில் வருவதுபோல் பட்டாடை அணிந்து பட்டாக் கத்தியுடன், தலையில் கிரீடத்துடனும் வருவார்' என்று எண்ணியிருந்த அவனை, நாலு முழ வேஷ்டியும், ஒரு ஜிப்பாவும் அணிந்திருந்த மந்திரி வந்து ஏமாற்றிவிட்டார்.

யாரோ தன்னைத் தொடுவதை உணர்ந்த ரமணி, தலை நிமிர்ந்து பார்த்தான். அவன் தந்தைதான்! அவரோடு பேசவே அவனுக்குப் பிடிக்கவில்லை. அவன் கையைப் பற்றி விழா நடக்கும் இடத்திற்கு அழைத்துச் சென்றார் அவர்.

எல்லாப் போட்டிகளும் முடிந்தன. ரமணி பெயர் கொடுத்திருந்த போட்டி ஒன்றுதான் பாக்கி. இதோ அதுவும் தொடங்கியாகிவிட்டது. தலைமை உபாத்தியாயர் போட்டியில் சேர்ந்திருந்த மாணவன் ஒவ்வொருவனின் பெயரையும் வரிசையாகப் படித்துக்கொண்டே வந்தார். அழைக்கப்பட்டவர் எல்

லாம் அவரவர் கொண்டுவந்த பொருள்களை மந்திரியின் முன் இருக்கும் மேஜையின் மேல் வைத்தனர். தலைமை ஆசிரியர் அவரவர் கொண்டுவந்த பொருள்களின் பெயர்களைக் குறித்துக்கொண்டார்.

''ரமணி!'' என்றார் தலைமை ஆசிரியர். ரமணி தயங்கினான். அருகிலிருந்த அவன் தந்தை, ''போடா!'' என அவனை மெதுவாகத் தள்ளினார். வேறு வழியின்றி ரமணி மேடையருகே சென்று, தன் பையிலிருந்த பத்து ரூபாய் நோட்டை மந்திரியிடம் நீட்டினான். இதைக் கவனித்த மாணவர்களும் மற்றவர்களும் கைதட்டிச் சிரித்தார்கள். ரமணி மந்திரியின் முகத்தைப் பார்த்தான். நோட்டைப் பிரித்துப் பார்த்த அவர் முகத்திலும் முறுவல் தோன்றியது.

ரமணிக்கு ஒரே அவமானம். கண்ணீர் கண்களுக்குத் திரையிட, தட்டித் தடுமாறி, தன் இடத்தை அடைந்து அமர்ந்தான். அவன் தந்தை அவனைத் தேற்றினார்.

மந்திரி தன் முடிவைத் தெரிவிக்க வேண்டியதுதான் பாக்கி. தலைமை ஆசிரியர் மந்திரியோடு சில விநாடி பேசிக்கொண்டிருந்தார். பிறகு, ''இந்தப் போட்டியிலே பரிசு பெற்ற மாணவன் பி. ரமணி, ஐந்தாம் வகுப்பு, பி—பிரிவு'' என்று படித்தார்.

ரமணிக்குத் தன் காதுகளையே நம்பமுடியவில்லை. ''அப்பா!'' என்று கத்திக்கொண்டே அவரைக் கட்டிக்கொண்டான். அவர் அவன் முதுகில் தட்டிக் கொடுத்தார்.

மந்திரி எழுந்தார். ''பல நாட்டுப் பொருள்கள் இங்கே வந்துள்ளன. நம் நாட்டின் தலைசிறந்த கை வேலைப்பாடு அமைந்த பொருள்களும் இங்கே இருக்கின்றன. இவைகளை மீண்டும் நாம் வாங்கிவிடலாம். ஆனால் பரிசு பெற்ற மாணவன் பொக்கிஷமாகப் பாதுகாத்து வந்ததை யாராலும் இனிப் பெறமுடியாது. அதனால் அவனுக்கு இந்த வெள்ளிக் கோப்பையைப் பரிசாக அளிக்கிறேன். என்று சொல்லி, கோப்பையை ரமணியிடம் கொடுத்து அவன் முதுகில் தட்டிக் கொடுத்தார்.


பிறகு, ''பி. ரமணி கொண்டு வந்த அரிய பொக்கிஷம் இது தான்'' எனச் சொல்லி, தம் முன் இருப்போரிடம் அந்தப் பத்து ரூபாய் நோட்டைக் கொடுத்தார்.

எல்லோரும் ஆவலோடு அதை வாங்கிப் பார்த்தார்கள். சிலர், ''பரிசு கொடுத்தது சரியே'' என்றார்கள்.

ஆம், நியாயமான முடிவுதான். அந்தப் பத்து ரூபாய் நோட்டிலே ஐந்தே ஐந்து எழுத்துக்கள் எழுதப் பட்டிருந்தன: 'மோ. க. காந்தி' நம் நாட்டுப் பிதாவின், அஹிம்சா மூர்த்தியின் கையெழுத்து. யாராலாவது அதை இனிப் பெற முடியுமா, சொல்லுங்கள்!

**தீபாவளி எலி!**






# பாரஸீகக் குதிரை

**காட்டூர் - கண்ணன்**

முன் காலத்தில் அரச சபைகளிலெல்லாம் கதை சொல்லுகிறவர்கள் இருப்பார்கள். அவர்கள் சகல கலைகளும் சாஸ்திரங்களும் கற்றறிந்த வித்வானைப் போலவும், அரசனுக்கு யோசனை கூறுவதில் சிறந்த மந்திரி போலவும் இருக்கவேண்டும். அரசர்கள் கதை சொல்லுகிறவர்களுக்கு அதிக மதிப்பும் கௌரவமும் அளிப்பார்கள்.

காளிங்கபுரம் என்ற நகரை, கருணாலயன் என்ற அரசன் வெகு சிறப்பாக ஆண்டு வந்ததாகச் சொல்லுவார்கள். அந்த மன்னனுக்குக் கதை சொல்லுகிறது யார் தெரியுமா? சாதாரண மனிதர்கள் அல்ல. ஒரு பூதமே வந்து கருணாலயன் விரும்பிய போதெல்லாம் வந்து கதை சொல்லிக்கொண்டிருந்ததாம். பூதம் என்றால் கொஞ்சம் பயமாகத்தான் இருக்கும்.

ஆனால் கதை சொல்லுகிற பூதத்திடம் பயப்படவே கூடாது. அரசன் எப்பொழுது கதை கேட்க வேண்டுமென்று விரும்புகிருனே அப்பொழுதெல்லாம் அந்தப் பூதம் அவன் எதிரில் தோன்றி அவன் மனக் கவலையைப் போக்கும் வண்ணம் பல கதைகளைச் சொல்லும். அவனுக்குச் சிறந்த யோசனைகளையும் கூறி உலகத்தில் அவனுக்கு வெற்றியும் பெயரும் புகழும் ஏற்பட உதவி செய்யும். இப்படிப்பட்ட அரசனுக்கு என்ன குறை இருக்கும்?

ஒரு நாள் அரச சபையில் ஒரு பெருத்த விவாதம் நடந்தது. 'உலகத்தில் ஒருவன் சகல சாஸ்திரங்களையும் கற்று அறிந்திருந்தால் போதும்; வாழ்க்கையில் உயர்ந்தவனுகவும் சிறந்தவனுகவும் விளங்கலாம்' என்ருர் ஒரு புலவர். இன்னொரு புலவர் அதை மறுத்து, 'எல்லாவற்றையும் கற்றுவிட்டால் மாத்திரம் போதாது. அநுபவ அறிவும், பகுத்தறிவும் இருந்தால்தான் சிறந்தவனுக விளங்க முடியும்' என்ருர். விவாதம் முடிவே இல்லாமல் வளர்ந்தது. கடைசியாக அவர்கள் அரசனை நோக்கி, "அரசே, எங்களில் யார் சொல்லுவது நியாயம் என்று நாளைத்தினம் தாங்களே தீர்ப்பளிக்கவேண்டும்" என்று வேண்டிக்கொண்டார்கள். அரசனும் ஒப்புக்கொண்டான்.

அன்று இரவு அரண்மனை மேல் உப்பரிகையில் போய் நின்று, கதை சொல்லும் பூதத்தை நினைத்தான். பூதம் அரசன் எதிரில் தோன்றி, "மன்னவனே, என்ன சேதி?" என்றது.

"அறிவிற் சிறந்த பூதமே, ஒரு சந்தேகம்! உலகத்தில் சகல சாஸ்திரங்களும் படித்ததனலேயே ஒருவன் சிறந்தவனுகி விடுவான அல்லது அநுபவமும் பகுத்தறிவும் கொண்டவனே சிறந்தவனுவான?" என்ருன் அரசன்.

"அரசனே, இது உனக்குத் தெரியாதா? படித்த படிப்பு கடல் போலிருந்தாலும் அது எம்மாத்திரம்? கல்விமட்டும் இருந்தால் எதையும் சாதித்துவிட முடியாது. கல்வி அறிவோடு அநுபவ ஞானமும் உள்ளவனே சிறந்தவனுக முடியும். மச்சபுரத்தில் இருந்த வேதபாஸ்கரன் கதையை நீ அறிவாயா?" என்றது.

"அதென்ன கதை? சொல்லு" என்ருன் அரசன்.

பூதம் சொல்லத்தொடங்கியது.

**ம**ச்சபுரத்தில் வசித்த வேதபாஸ்கரன் என்ற வேதியன் சிறு வயதிலே குருகுல வித்தியாப்பியாசம் செய்து, சகல சாஸ்திரங்களிலும் தேர்ந்தவனுகி, உலகத்தில் சம்பாதித்து வாழ்க்கை நடத்த எண்ணினன். பல வருஷ காலம் குருகுலவாசத்திலேயே புத்தகப் புழுப்போல அவன் இருந்துவிட்டதால் உலக ஞானம் அவனுக்கு அவ்வளவாக ஏற்படவில்லை. நிறையப் படித்துவிட்டோம் என்ற அகங்காரம் மட்டும் இருந்தது. அவன் ஒருவரையுமே மதிப்பதில்லை. தான் பிடித்த முயலுக்கு மூன்றே கால்கள் என்ற முறையில் பிடிவாத மகவே எதையும் சாதிப்பான். அவனுடைய கர்வத்தையும் மூடத்தனமான போக்கையும் அறிந்த ஊர் ஜனங்கள் அவனை லட்சியம் செய்வதே இல்லை. இதனல் ஊரில் பிழைப்பதே அவனுக்குக் கஷ்டமாக இருந்தது. அவன் வேறு தேசம் சென்று தன் கல்வித் திறனைக் காட்டிப் பொருளீட்ட நினைத்தான். அதற்காக ஒரு சவாரிக் குதிரை வாங்க நினைத்தான். தன்னிடம் இருந்த நூறு பொற்காசுகளை மூட்டையாகக் கட்டி எடுத்துக்கொண்டு சந்தைக்குச் சென்ருன். அங்கே சொக்கப்பன் என்ற சலவைத் தொழிலாளி ஒருவன் தனக்குப் பயன்படாத சுமை கழுதை ஒன்றை எப்படியாவது விற்றுவிட வந்திருந்தான்.

குதிரை வாங்க வந்த வேதபாஸ்கரன் சலவைத் தொழிலாளி வைத்திருப்பது ஒரு நல்ல சாதிக் குதிரைக் குட்டி என்று எண்ணினன். ஏனெனில் அவன் படித்த அசுவ சாஸ்திரத்தில் அப்படி ஒரு நல்ல சாதிக் குதிரைக்கு, சாமுத்திரிகா லட்சணம் சொல்லப்பட்டிருப்ப

தாய் அவனுக்குத் தோன்றியது. அந்தச் சலவைத் தொழிலாளியை நெருங்கி, ''இந்தக் குதிரைக் குட்டி என்ன விலை?'' என்றான்.

இதைக் கேட்டதும் கழுதையை விற்க வந்த சொக்கப்பன் திகைப்படைந்துவிட்டான். கண்ணெதிரே நிற்கும் கழுதையைப் பார்த்து ஒருவன் குதிரை என்றால் எப்படி இருக்கும்? அவன் ஒரு நிமிஷம் யோசித்தான். இப்படி ஓர் ஏமாந்த கிராக்கி தன்னிடம் வந்து சிக்கியது அவனுக்கு அதிருஷ்டமாகத்தான் பட்டது. ''ஏஞ் சாமி, இந்தக் குருதைக் குட்டியை வாங்க உனக்குச் சக்தி போதுமா? காசுமீரத்துக் குருதையாச்சே!'' என்றான்.

வேதபாஸ்கரன் சொக்கப்பனை அறிவற்றவனாக எண்ணினான். ''நீ அசுவ சாஸ்திரம் படித்திருக்கிறாயா? இதைப் போய் காசுமீரத்துக் குதிரை என்கிறாயே! இந்த லட்சணமுள்ள குதிரைகள் பாரஸீகத்திலிருந்துதான் வரும்..''

''இருக்கட்டுமே. நான் படிக்காதவன்தானே, சாமி! எனக்கு என்ன தெரியும்? இது பாரஸீகத்துக் குதிரைக் குட்டியாகவே இருக்கட்டும். இதை உங்களால் விலை கொடுத்து வாங்க முடியுமா?'' என்றான் சொக்கப்பன்.

''என்னாலா வாங்க முடியாது? நான் அசுவ சாஸ்திரம் படித்தவன். எனக்கு எல்லாம் தெரியும். பாரஸீகக் குதிரைக் குட்டி எல்லாம் நூறு பொன்தான் விலை பெறும்..'' என்றான்.

'நூறு பொன்' என்ற உடனேயே சொக்கப்பன் திகைப்பும் ஆச்சரியமும் அடைந்தான். தன்னுடைய கழுதை இவ்வளவு விலை போகும் என்று அவன் கனவுகூடக் கண்டதில்லை. அன்று நரி முகத்தில்தான் விழித்திருக்கிறோம் என்று எண்ணி, ''நூறு பொன்னா? நூற்றைம்பது பொன்னிருந்தால் கொடுத்துவிட்டுக் குதிரைக் குட்டியை ஓட்டிக்கிட்டுப் போங்க'' என்றான்.


''நூறு பொன்தான் தருவேன். இஷ்டமா? நான் சகல சாஸ்திரமும் படித்தவன். என்னை ஏமாற்ற முடியாது'' என்றான் பாஸ்கரன்.

''எனக்கென்ன சாமி தெரியும்? நீங்க படிச்சவங்கன்னு தெரிஞ்சா இப்படி விலை கூறுவேனா? சரி. நூறு பொன்னையே கொடுத்துவிட்டு, குதிரைக் குட்டியை ஓட்டிக்கிட்டுப் போங்க'' என்றான்.

வேதபாஸ்கரன் நூறு பொன்னை எண்ணிக் கொடுத்துவிட்டு, கழுதையை ஓட்டிக்கொண்டு வந்தான். எதிரில் வந்த குடியானவன் ஒருவன் வேதபாஸ்கரன் ஒரு கழுதையை ஓட்டிக்கொண்டு வருவதைப் பார்த்துவிட்டு, ''என்ன சாமி, கழுதையை ஓட்டிக்கிட்டு வர்றீங்களே?'' என்றான்.

கழுதை என்றதும் வேதபாஸ்கரனுக்கு அசாத்தியக் கோபம் வந்தது. ''கழுதையா? நன்றாகப் பார். பாரஸீகக் குதிரைக் குட்டி. நீ படிக்காதவன்தானே? உனக்கு என்ன தெரியும்?'' என்றான்.

அவன் கோபத்தைக் கண்ட அந்தக் குடியானவன் அவனோடு



சண்டை போட இஷ்டமில்லாமல், ''கழுதையோ குதிரையோ, கத்தினுல் தெரியுது'' என்று போய்விட்டான்.

வேதபாஸ்கரன் குதிரை என்று நினைத்த கழுதையைத் தன் வீட்டுத் தோட்டத்தில் கட்டிவிட்டு வந்து ஆயாசத்துடன் படுத்தான். உடனே கழுதை கத்தியது. இதைக் கேட்டு வேதபாஸ்கரன் திகைத்தான். அசுவ சாஸ்திரப்புத்தகத்தை எடுத்துப் புரட்டிப் பார்த்தான். அதில் பாரஸீகக் குதிரை எப்படிக்கத்துமென்று எழுதியிருக்கவில்லை. 'ஒருவேளை நம்முடைய குதிரையின் குரல் இப்படி இருக்கலாம்' என்று அதை முதுகில் கட்டிக் கொடுக்க எண்ணி அதன் பின்புறம் நெருங்கினுன். பாவம்! அப்பொழுது அந்தக் கழுதை தன் பின்கால் இரண்டையும் ஒரே சமயத்தில் தூக்கி அவனை உதைத்துத் தள்ளியது. உதைபட்டுக் கீழே விழுந்த பின்புதான் வேதபாஸ்கரன் உண்மையாக இது குதிரையல்ல, கழுதை என்பதை உணர்ந்தான். புத்தி இல்லாமல் ஏமாந்து போனதை ஊரார் அறிந்தால் வெட்கம் என்று அஞ்சி, கழுதையை அவிழ்த்து விரட்டிவிட்டான்.

**பூ**தம் கதையை முடித்துவிட்டு, ''மன்னவா, படிப்பு மாத்திரம் ஒருவனுக்குப் போதாது. அநுபவமும் பகுத்தறிவும் ஆற்றலும் வேண்டும் என்று இதிலிருந்து விளங்கவில்லையா?'' என்றது.

''விளங்குகிறது. ஆனுல் படிப்பு இல்லாமல் உலக அநுபவமும் பகுத்தறியும் சக்தியும் இருந்தால் போதுமா?'' என்றுன் அரசன்.

''அதுவும் போதாது. சொக்கப்பன் படிக்காத காரணத்தால் அந்தப் பொன்னை எப்படி இழந்தான் தெரியுமா? அது ஒரு வேடிக்கைக் கதை'' என்று பூதம் கதை சொல்ல ஆரம்பித்தது.

**வே**தபாஸ்கரனிடம் கழுதையை விற்ற சொக்கப்பன் பொற்காசுகளை மூட்டையாகக் கட்டிக்கொண்டு வீட்டுக்குப் போனுன். உலகத்தில் இப்படிக் கழுதையைக் குதிரை என்று எண்ணி ஏமாறுகிறவர்கள் உண்டா என்பதே அவனுக்குப் பெரிய ஆச்சரியமாக இருந்தது. ஆனுல் இவ்வளவு படித்த வேதியன் எப்படி ஏமாறுவான் என்ற சந்தேகமும் அவனுக்கு எழுந்தது. தான் இவ்வளவு நாளும் கழுதை என்று நினைத்தது உண்மையாகவே பாரஸீகக் குதிரையாகவே இருக்குமோ என்ற சம்சயம் அவனுக்கு ஏற்பட்டது.

அவனுடைய கிராமத்தில் தந்தன ராயர் என்று ஒருவர் இருந்தார். அவர் சாஸ்திரங்கள் படித்தவர். பட்சி சாஸ்திரம், மிருக சாஸ்திரம் எல்லாவற்றிலும் மிகுந்த அநுபவமுள்ளவர் என்றும் ஊரில் சொல்வார்கள். அவரிடம் போய், தன் சந்தேகத்தை நிவர்த்தி செய்து கொள்ள நினைத்தான் சொக்கப்பன்.

அவர் வீட்டு வாசற்திண்ணையில் உட்கார்ந்திருந்தார். சொக்கப்பன் போய் நமஸ்காரம் செய்துவிட்டு, ''சாமீ! பாரஸீகக் குதிரை எப்படி இருக்கும்? அதன் அங்கலட்சணங்களை எல்லாம் கொஞ்சம் சொல்லுங்க'' என்றுன்.

ஏழைச் சொக்கப்பன் பாரஸீகக் குதிரையைப்பற்றித் தெரிந்துகொள்ள வந்தது தந்தன ராயருக்கு வியப்பாக இருந்தது. அவர் பரிகாசமாகச் சிரித்து, ''குட்டையாக இருக்கும்; முன்னுடி காது கொஞ்சம் பெரிதாக நீட்டிக்கொண்டிருக்கும், மூக்குச் சிறிது வெளுத்திருக்கும், பின் கால் வளைந்திருக்கும். அதாவது கிட்டத்தட்ட உன் வீட்டுக் கழுதை போலிருக்கும்'' என்றுர்.

''ஹா! அப்படிச் சொல்லுங்க. அந்தச் சந்தேகத்தைத் தீத்துக்கத்தானே வந்தேன்! அதிருக்கட்டும். அது என்ன விலை இருக்கும்?''

''நல்ல விலை மதிப்புத்தான். . ஐந்நூறு பொன்னிலிருந்து ஆயிரம் பொன் வரையில் இருக்கலாம்'' என்றுர் ராயர்.

''ஆ! அப்படியா? அநியாயமாய் ஏமாந்து போய்விட்டேனே'' என்று சொல்லிக்கொண்டே தன் வீட்டுக்கு வந்தான் சொக்கப்பன். அருமையானப் பாரஸீகக் குதிரையை ஆயிரம் பொன்னுக்கு விற்காவிட்டாலும் ஐந்நூறு பொன்

னுக்காவது விற்றிருக்கலாமே. நூறு பொன்னுக்கு விற்றால் எவ்வளவு நஷ்டம்? எத்தகைய மதி மோசம்?

சொக்கப்பனின் நிலை இப்படி இருக்க, வேதபாஸ்கரன் விரட்டிய கழுதை எங்கெங்கோ சுற்றியலைந்து தடுமாறிக் கொண்டிருந்தது. அதை ஆடுதலையான் என்ற குறவன் கட்டி இழுத்துக்கொண்டு குளக்கரைக்கு விற்க வந்தான். இரவெல்லாம் மனைவிசாரத்தால் தூங்காமலிருந்த சொக்கப்பன் காலையில் எழுந்து குளக்கரைக்குப் போகும்போது ஆடுதலையான் கழுதையோடு நிற்பதைப் பார்த்தான். அவனுக்கு ஒரு கணத்தில் புரிந்துவிட்டது. ''ஏய்! உனக்கு இந்தக் குதிரை ஏது?'' என்றான். ஆடுதலையான் பரபரவென்று விழித்தான். ''குதிரையா—இது கழுதையில்ல!'' என்றான்.

''கழுதையா? சீ! அசுவ சாஸ்திரத்திலே என்ன எளுதி இருக்குன்னு உனக்கு என்ன தெரியும்? தந்தன ராயர் எனக்குப் படித்துச் சொன்னாரு. இது பாரஸீகக் குதிரை. இதை நீ விற்கத்தானே கொண்டு வந்தே?'' என்றான்.

''ஆமாம்.''

''என்ன விலை?''


''குதிரைன்னா விலை அதிகமாகத்தானே இருக்கும்? இருநூறு பொன்'' என்றான் ஆடுதலையான்.

''நூறு பொன் தருகிறேன். காதும் காதும் வச்சாப்பிலே வியாபாரத்தை முடிச்சுக்கோ'' என்றான் சொக்கப்பன்.

''போவுது-காலை வியாபாரம்! எடுங்க'' என்றான் ஆடுதலையான்.

சொக்கப்பன் நூறு பொற்காசுகளைச் சரியாக எண்ணிக்கொடுத்துவிட்டு, சந்தையில் குறைந்தது ஐந்நூறு பொன்னுக்காவது இதை விற்றுவிட வேண்டும் என்று கழுதையை ஓட்டிச் சென்றான்.

சொக்கப்பன் சந்தையில் கழுதையை வைத்துக்கொண்டு, ''பாருங்க. பாருங்க. பாரஸீகக் குதிரை. ஐந்நூறு பவுன், ஐந்நூறு பவுன்!'' என்று ஏலம் போட்டான். சந்தைக்கு வந்திருந்த ஜனங்கள் அவன் கழுதையைக் குதிரை என்று சொல்லிக் கூச்சல் போடுவதை




**வருபவர்:** தீபாவளி வெடிகள் நிறைய இருக்கு; வேணுமா, ஸார்?

**ஆசிரியர்:** ஏதேது, கார்ட்டூன் போடுகிறதை விட்டுட்டு, பட்டாசு வெடி வியாபாரத்திலே இறங்கிட்டேளா நீங்களும்? பலே பேஷ்!

**வருபவர்:** அதில்லை ஸார்; ஹாஸ்ய வெடிகளைத்தான் சொல்கிறேன்! தீபாவளி சம்பந்தமானவை!

—பீ. கலாசாமி, தூத்துக்குடி.

எண்ணி நகைத்தார்கள். அவனுக்குப் பைத்தியம் பிடித்துவிட்டது என்று சொல்லி விரட்டினார்கள். ஜனங்கள் செய்த கலாட்டாவில் கழுதை மிரண்டு, கயிற்றை அறுத்துக்கொண்டு நாலுகால் பாய்ச்சலில் ஓடியது. சொக்கப்பனும், ''ஐயோ, என் பாரஸீகக் குதிரை போச்சே, போச்சே!'' என்று அலறிக்கொண்டு ஓடினான்.

பூதம் அரசனுக்குக் கதையை சொல்லி முடித்து, ''மன்னவா! அநுபவமும் பகுத்தறிவும் இருந்தாலும் கல்வி அறிவு இல்லாததனால் ஏற்பட்ட மூடத்தனத்தை அறிந்து கொண்டாயா?'' என்றது.

''பூதமே! நீ சொன்ன கதைகளினால் என் மனக் குழப்பம் தீர்ந்தது. நாளைத் தினம் சபையில் நீ சொன்ன கதைகளைச் சொல்லித் தீர்ப்பளிப்பேன்'' என்றான் அரசன்.

# சகுனம்

சுறமீன்


காலேஜிலிருந்து 'அட்மிஷன் கார்டு' வந்துவிட்டது. நான் உண்மையிலேயே ஒரு பாக்ய சாலிதான். எந்தக் கல்லூரியில் மாணவனாகப் படித்து, ஸ்ரீநிவாச சாஸ்திரி, கணிதமேதை ராமாநுஜம், கஸ்தூரிரங்க ஐயங்கார் போன்ற பலர் பெரியவர்களாக விளங்கினார்களோ, அதே கல்லூரியில் படிக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்துவிட்டது. வரும் வியாழக்கிழமைக்குள் பிரின்ஸிபால் முன்பு ஆஜராக வேண்டும்.

பஞ்சாங்கத்தைப் புரட்டினேன். நாள், கிழமைகளில் எனக்குப் பற்று அதிகம். சனிக்கிழமை நிறைந்த நாள். ராகுகாலத்தின் பின்பகுதி நல்ல வேளை என்று அறிந்தேன். பிறகு அழுக்குச் சட்டை, அழுக்கு வேஷ்டி, பறட்டைத் தலையுடன் கிளம்பினேன். சாமானை மறந்து வைத்துவிட்டுத் திரும்ப வந்து அதை எடுத்துக்கொண்டு கிளம்பினால் நல்லது என்று யாரோ கூறினார்கள். அதன்படியும் செய்து வைத்தேன்.

பிறகு ஒரு மைலைக் கடந்து சுவாமிமலை பஸ் ஸ்டாண்டை அடைந்தால், பஸ் தவறிவிட்டது என்பதை அறிந்தேன். "அட தேவுடா" என்று கையில் தலையை வைக்காமல், "அடடா! வெரிகுட் சகுனம்" என்று மனத்திற்குள் கடவுளை வாழ்த்திக் கொண்டேன். இனிமேல் மூன்று நாற்பத்திரண்டே முக்கால் மணிக்குத்தான் அடுத்த பஸ்.

என் ஷோக்கையும் ஸ்டைலையும் கண்டுவிட்டுப் பலர், 'இவன் ஒரு சீமான் வீட்டுப் பிள்ளையாக்கும்' என்று எண்ணுவதாக நான் நினைத்துக் கொண்டேன். ஆம்; நான் உண்மையிலேயே சீமான் வீட்டுப் பிள்ளைதான். என் பையில் மின்னுவது சுளையாக ஒரு பச்சை நோட்டாக்கும், காலேஜில் சிரித்துக் கொண்டு கட்டிவர. எதற்கு அபத்தம்போல் 'அழுதுவிட்டுவர' என்று கூறவேண்டும்?

அப்புறம் பஸ்ஸும் வந்து



தொலைந்தது. என்னைச் சற்றும் மதிக்காமல் கண்டக்டர் சுப்பராயன் என்னிடமும் இரண்டரையணாதான் வாங்கிக்கொண்டான். "மீதிச் சில்லறை இந்த ஒருரூபாய்க்குத் தர வேண்டாம், கண்டக்டர்" என்றேன். என்னை என்னவோவென்று நினைத்துவிட்டான் போலிருக்கிறது! ஒரு மாதிரியாக என்னைச்

சாய்த்துப் பார்த்துவிட்டு, ''தம்பி! பஸ் தற்சமயம் சென்னை போகவில்லையே!'' என்றான்.

கிடக்கிறான், நான்ஸென்ஸ்!

* * *

மடத்தெருவில் பஸ்ஸிலிருந்து இறங்கி அரண்மனை ராமையர் பாலம் வழியே காவேரியைக் கடந்து சென்றேன். அப்போது ஒரு நீண்ட மனித வரிசை வாலானது கும்பகோணம் காலேஜாகிய அநுமாருக்குச் சொந்தமாயிருந்தது. விஷயம் ஒன்றுமில்லை.. பிரின்ஸ்பால் அறை முன்பு பேட்டிக்காகத் தவம் செய்துகொண்டு ஒரு பெரிய்ய்ய்..ய 'க்யூ' நின்றுகொண்டிருந்தது. நான் அந்த வாலுக்கு முத்தாய்ப்பு வைத்ததுபோல் நின்றேன்.

அரைமணி ஆயிற்று.

கடைசியில் ஒரு பியூன் வெளியே வந்தான். ''பாக்கிப் பேர் அல்லாரும் வூட்டுக்குப் போயிட்டு 'மண்டே' அன்னிக்கு வரலாம்'' என்று பராக் கூறினன்.

உண்மையிலேயே 'அட தேவுடா' என்று கத்திவிட்டேன். ஏனெனில் அன்றிரவுக்குள் நான் ஊர் திரும்ப வேண்டும். எனக்குக் கும்பகோணத்தில் ஒருவரையும் தெரியாது. கையிலோ பணமதிகம். எக்கச் சக்கமான இடத்தில் மாட்டிக் கொண்டுவிட்டேன்.



பஸ் இனிமேல் இரவு ஏழு மணிக்குத்தான்.

சுவாமிமலையிலிருந்து எங்கள் ஊராகிய அலைவந்தபுரம் குறைந்தது ஒரு மைல் தூரத்தில் இருக்கிறது. முதல் நாள்தான் அமாவாசையாதலால் ஒரே இருட்டு.

எங்கேயாவது 'மினுக் மினுக்'கென்று தெரு லாந்தர் ஒன்று எரிய யோசனை செய்துகொண்டிருக்கும். காற்றிற்கும் அதற்கும் நெடுநாளாகத் தீராப் பகை. சிறிது பலமாகக் காற்றடித்துவிட்டால் போதும். 'அந்த அற்பன் முகத்தில் விழிப்பானேன்?' என்று அந்த 'மினுக்' எங்கேயாவது ஒளிந்துகொள்ளும்.

இரண்டாவதாக, சட்டமறியல் வீரர்களின் முகாம் ஒன்று எங்களூர் செல்லும் ரஸ்தாவில் உள்ளது. அதாவது அநாகரிகமான வார்த்தைகளில் கூறப்போனல் திருட்டுத்தனமாகக் குடித்துவிட்டுக் கூத்தாடும் கயவர்களின் கும்பல் என்று கூறலாம்.

நடுவழியில் ஓர் ஐயனர் கோயில். உயரமான கரிய தோற்றத்துடன் கையில் ஒரு வாளுடன் ஐயனர் நிற்கிறார்.

நியூயார்க்கில் ஏதோ கணக்கெடுத்திருக்கிறார்

களாம், மூன்று நிமிஷத்துக்கு ஒரு கொலை; நிமிஷத்திற்கு இரண்டு கொள்ளை என்று. ஆனல் இந்தப் பொட்டை வழியில் நடந்திருப்ப வைகளைக் கணக்கெடுத்தால் அலை வந்தபுரம் உலக 'ரெகார்'டை ஸ்தாபித்துவிடும்.

நாகரிக நாட்டில்தான் குற்றங்கள் அதிகமாம். அப்படியானல் எங்களூர் மிகச் சிறந்த நாகரிக ஊர் அல்லவா?

'கருமமே' என்றெண்ணிக் கொண்டு பஸ் 'ஸ்டாப்'பை நோக்கி நடந்தேன். நெடு நேரம் ஆன பிறகு ஒரு பஸ் வந்தது. ''இடமில்லை'' என்ற இனிமையான வார்த்தைகள் வெளி வந்தன.

சரியாக எட்டரை மணி.

'பாம்..பாம்..பாம்..!' என்ற சப்தம் கேட்டது. திரும்பிப் பார்த்தேன். நாலு சக்கரம் வைத்த ஒரு ஓட்டைத் தகரப் பெட்டி வந்து நின்றது. 'கடவுளே' என்று குனிந்தவாறே ஏறினேன்.

அச்சமயம் திடீரென வானம் கறுத்தது. நான் எவ்வாறு சுவாமி மலையிலிருந்து ஊர் போய்ச் சேரப்




**உதவி ஆசிரியர்:** இந்த வாரம் வைத்தியப் பகுதியிலே எதைப் பற்றி ஸார், எழுதலாம்?

**ஆசிரியர்:** ஓ! இது தீபாவளி வாரந்தானே! அப்போ கேட்கணுமா? அஜீரணத்தைப் பற்றித்தான்!

—பி. கலாசாமி, தூத்துக்குடி.

போகிறேன் என்று வருத்தப் படுவதைக் கண்டு தானும் வருத்தப் பட ஆரம்பித்தது. முதலில் மரியாதைக்காகச் சில கண்ணீர்த் துளிகளைச் சிந்தியது. பின்பு கண்களைச் சிமிட்டி, 'பி. வி .ஜி. வாக்ஸினேஷன்' தகராறுபோல் இடைவெளி இல்லாது, 'ஹோ' வென்று கதற ஆரம்பித்துவிட்டது.

''மேலக்காவிரி இறங்குதா?'' என்ருன் டிரைவர்.

''இல்லை, ரைட்!'' என்ருன் கண்டக்டர்.

''கொட்டையூர் விநாயகர் கோயில்?''

''இல்லை, ரைட்!''

''புளியஞ்சேரி?''

''இல்லை, ரைட்!''

''பாபுராஜபுரம்?''

அதே பல்லவி. மாதக் கடைசியில் ஒவ்வொரு சாமானுக்கும் அம்மா பல்லவி வாசிப்பதுபோல் கண்டக்டரும் ஆரம்பித்துவிட்டான்.

திம்மக்குடி சுடுகாட்டினருகே வந்துகொண்டிருந்த பஸ், திடீரென நின்றுவிட்டது. 'இந்த இருட்டிலும் டப்பா தள்ளும் வேலையா நமக்கு? அதுவும் சுடுகாட்டினருகில்?' என்று எண்ணியவாறே கண்டக்டரைப் பார்த்தேன். அவன் டிரைவரைப் பார்த்தான். 'என்ன அண்ணே! யாராச்சியும் ஏறுருங்களா?'' என்று கேட்டான். உடனே டிரைவர், ''இல்லீங்க! ரோட்டின் குறுக்கே ஒரு தென்னை மரம் விழுந்து கிடக்குது'' என்ருன்.

அந்தச் சமயம், ''அசைந்தீர்களோ சுட்டு விடுவேன். ஜாக்கிரதை!'' என்று அடித்தொண்டையிலிருந்து ஒரு கட்டைக் குரல் தொனித்தது. காலில் சப்தம் செய்யாத் கிரேப் பூட்ஸ்களும், இடுப்பில் நீல புல் பாண்ட் ஒன்றும் கறுப்பு நிற பெல்ட்டும், அதில் ஒரு கைத்துப் பாக்கியும், உடம்பில் கை மடித்துவிடப்பட்ட நீல நிறச் சட்டையும், கண்களில் கறுப்புக் கண்ணுடியும், வாயை மூடியவாறு மூக்கின் கீழே காதைச் சுற்றி முக மூடி ஒன்றும், தலையைச் சுற்றி ஒரு பிளாஸ்டிக் உறையுடன் பிறர் பொருளை அவர் சம்மதமின்றி,



தமக்குச் சொந்தமாக்கிக் கொள்ளும் தொழிலாளர் ஒருவர் காட்சியளித்தார். அவரது கையில்,—

மூன்றரை அடி நீளமுள்ள சக்தி வாய்ந்த 'பாயிண்ட் த்ரீ - ஓ - த்ரீ இடாலியன் ரைபிள்.'

என். ஸி. ஸி. யில் இரு வருஷங்கள் இருந்து பழகிய எனக்குத் தெரியும் அந்தத் துப்பாக்கியின் மகிமை!

ஒருவர்மேல் ஒருவர் இடித்துக் கொண்டு ஒருவர் பின் ஒருவராக நாற்பத்தொரு பேர் நின்ருல் அவ்வளவு பேரையும் கொல்ல, முதல்வன் மேல் சுடும் ஒரு 'புல்லெட்'டே போதும்.


இந்தத் துப்பாக்கியை ராணுவ அலுவலகத்திலிருந்து எவ்வாறு இவன் கைப்பற்றிஞன் என்று யோசிக்கக்கூட நேரமில்லே.

என்னருகில் ஒரு தாடிக்காரர். முகம், வாய் அவருக்கு உண்டோ அல்லது முழுவதும் சிகைதானே என எண்ணும்படி இருந்தது அவர் தோற்றம். எங்கேயோ அந்தக் குகையிலிருந்து இரு கறுப்புக்கண்ணடிக் கோலிகள் மின்னிக்கொண்டிருந்தன. 'டாகூரின் அண்ணுவுக்கு ஒன்றுவிட்ட ஓர்ப்படி பிள்ளேக்குத் தம்பியின் டியரஸ்ட் பிரண்டுக்கு ஒன்றுவிட்ட மச்சினன் பேரனுக்கு அடுத்தவீட்டுக்காரராக்கும்' என்று எண்ணிக் கொண்டேன் நான். அப்பேர்ப்பட்ட கோலிகள் திடீரென என்மீது ஒளியை வீசின. 'இவனிடம்தான் பணம் உள்ளது; எங்களே விட்டு விடு' என்று கேட்டுக்கொள்வதன் பொருட்டுத்தான் என்னேப் பார்த்தாரோ என்னவோ தெரியாது. எது எப்படியாஞல் என்ன? தொழிலாளர் நேரே என்னிடம் வந்தார்.

"ஹாண்ட்ஸ் அப்!"

ஒரு நிமிஷத்தில் எனது பர்ஸ் அவர் கைக்கு மாறியது. மறு நிமிஷம் தொழிலாளர் அந்தக் கொட்டும் மழையிலும் இருட்டிலும் சுடுகாட்டுப் பக்கம் சென்று மறைந்துவிட்டார். வழக்கப்படி யாவரும் துக்கம் விசாரிக்கத் தொடங்கினர். "தம்பி! அவன் கையில் மட்டும் துப்பாக்கி அல்லாமல் வேறு கத்தி கடப்பாரை ஏதாவது இருந்தால் இந்நேரம் எமலோகம் போயிருப்பான்" என்றனர். வெறும் வாய்ப்பேச்சு வீரர்கள்! இப்போது மட்டும் என்ன? திருடன் எமலோகம் (!) பக்கம் தானே போயிருக்கிருன்!

மறுநாள் காலே முதல் காரியமாகக் கும்பகோணம் போலீஸ் ஸ்டேஷனுக்கு ஒரு தந்தி கொடுத்தேன். மாலே மூன்று மணிக்குக்




''பட்டாசுக் கடை வைக்கப் பயந்துகொண்டே இருந்தீங்களே! பிறகு எப்படித் தைரியமா ஆரம்பிச்சுட்டீங்க?''

''பக்கத்திலே 'நெருப்பணைக்கும் எஞ்சின்கள்' இருக்கிற தைரியத்திலேதான்!''

—பி. கலாசாமி, தூத்துக்குடி.

---

குடந்தைக்கு நேரில் செல்வதாக இருந்தேன். ''இந்த மட்டுமாவது உன்னைக் கொல்லாமல் விட்டானே அவன். நான்தான் ராகு காலத்தில் போகாதேடா என்று முட்டிக்கொண்டேனே, கேட்டாயா? நீ காலேஜில் படிச்சுக் கிழிச்ச லக்ஷணம் போதும்'' என்று வீட்டில் கடிந்துகொண்டனர்.

சைக்கிள் மணிச் சத்தம் கேட்டது. தந்திச் சேவகன் ஓர் உறையை என்னிடம் நீட்டினான்.

''பணம் கிடைத்துவிட்டது. இன்று மாலைக்குள் என்னைச் சந்திக்கவும்.

குண்டன்லால், போலீஸ்
ஸப் இன்ஸ்பெக்டர்.''

நிஜமாகவே அன்று சகுனம் பார்த்துக் கிளம்பினேன்.

என்னைக் கண்டதும் லால்ஜீ அவர்கள், ''நீதானா தம்பி சுருமீன்?'' என்றார்.

''நீ தந்தி கொடுத்தபின் திம்மக்குடியிலிருந்து ஓர் ஆள் வந்து என்னையும் மற்றும் சில ஆட்களையும் கையோடு அழைத்துச் சென்றான். திம்மக்குடி சுடுகாட்டினருகில் நாங்கள் கண்ட காட்சி பயங்கரமாயிருந்தது. திருடன் மூக்கறுந்த தேவன் நீலம் பூத்து இறந்து கிடந்தான். அவனருகில் எரிந்த 'டார்ச்' ஒன்றும் அருகில் ஒரு நாகப் பாம்பும் தென்பட்டன. துப்பாக்கிச் சனியனால் அடிக்கப்பட்ட நாகப் பாம்பு நசுங்கியவாறே கிடந்தது. திருடனின் காலில் ஆடு சதையில் பாம்பு கடித்த அடையாளம் நன்கு புலப்பட்டது. விஷயம் எனக்கு நன்கு புரிந்துவிட்டது.

''அதாவது இருட்டில் ஓடிக்கொண்டிருந்த திருடன் பாம்பை மிதித்திருக்கிறான். அதனால் ஆக்ரோஷமடைந்த பாம்பு படம் எடுத்து அவனைத் தீண்டியிருக்கிறது. திருடன் 'டார்ச் லைட்'டை அடித்துப் பார்த்திருக்கிறான். அதற்குள் விஷம் தலைக்கேறி விட்ட நிலையில் துப்பாக்கிச் சனியனைப் பாம்பின்மேல் வீசியிருக்கிறான். பார்க்கப்போனால் பழைய கேடி மூக்கறுந்த தேவன் மரண தண்டனை விதிக்கப்பட வேண்டியவனே. கடவுளே அவனுக்குத் தண்டனை அளித்துவிட்டார். திருடனிடமிருந்து அகப்பட்ட பொருள்களில் உன் பர்ஸூம், காலையில் உன்னிடமிருந்து நான் பெற்ற தகவலும் உன் பணம் உனக்குக் கிடைக்கச் சாதகமாயிருந்தன.


''மேலும் அந்தப் பாம்பைக் கூட நான் பத்திரப்படுத்தி வைத்திருக்கிறேன்'' என்று கூறிவிட்டுத் தம் அருகிலிருந்த ஒரு ஓலைப்பெட்டியைத் திறந்தார்.

உடனே நான் 'ஆ' வென்று அலறிவிட்டேன். காரணம்? அந்தப் பாம்பின் படத்துக்குக் கீழ் ஒரு வெள்ளை நக்ஷத்திர அடையாளமிருந்தது. அதே பாம்பு ஒரு மாதம் முன்பு என் பக்கத்து வீட்டில் வந்திருந்தபோது, ஒருவரும் அதனைக் கொல்லாது விட்டதற்கு நானே மூலகாரணம்!

# தீபாவளி நாளில்.




அலாரம் வைத்துக்கொண்டு தூங்கி . . .



அம்மா எழுப்பக் கண் விழித்து . . .

ாய்ச்சிய எண்ணெய் தேய்த்து . . .





இதமான வெந்நீரில் மங்கள நீராடி . . .

ஆனந்தமாய்ப் புது ஆடைகளை எடுத்துப் பார்த்து . . .





குதூகலத்துடன் அணிந்துகொண்டு

...சணங்களைத் தட்டோடு ருசி பார்த்து . . .





பட்டாஸ், மத்தாப்புகளை வெடித்துக் கொளுத்துகிறார்கள்.



# பிறைச்சந்திரன்

அழ வள்ளியப்பா

நறுக்கி எறிந்த நகத்தைப் போலே
  இருக்கும் நிலாவே—நீ
நகர்ந்து நகர்ந்து போவ தெங்கே?
  சொல்லு நிலாவே.


ஓடம் போல வானில் ஊர்ந்து
  செல்லும் நிலாவே—என்னை
உன்மேல் ஏற்றிக் கொள்ளு வாயோ?
  சொல்லு நிலாவே.

கொம்பைப் போலக் கூர்மை யாக
  இருக்கும் நிலாவே—என்னைக்
குத்திக் கீழே தள்ளு வாயோ?
  சொல்லு நிலாவே.


வில்லைப் போல வளைந்து நிற்கும்
  வெள்ளை நிலாவே—நீ
வேட்டை யாட உதவு வாயோ?
  சொல்லு நிலாவே.



# பானையின் கதை




(2)



(1)

(3)





(4)

1. சுற்றும் விசையிலே பிசைந்த களிமண் பானை உருப் பெறுகிறது.

2. திருவையில் பானையின் விளிம்பையும் கழுத்தையும் அமைத்துக் செப்பனிடப் படுகிறது.


3. 4. பச்சைப் பானை நிழலில் காய வைக்கப்படுகிறது.

5. உடல் ஒழுங்காகத் தட்டப் படுகிறது, மரச் சுத்தியால்.


6. சூளையிலே ஆறு மணி நேரம் வெந்து உறுதி பெறுகிறது பானை.

7. வெந்த பானைகள் சிவப்புச் சாயம் பூசப்பட்டு வெயிலில் காய வைக்கப்படுகின்றன.

8. விற்பனைக்குத் தயார்!



(5)



(6)



(7)



(8)

போட்டோ:
புஷ்பத்துறை சுப்ரமண்யம்.

# கடைப் பையன்

## 'திருச்சி அண்ணா'

பாத்திரங்கள்:

மு: கடை முதலாளி.
க: கடைப் பையன் கல்யாணம்.
பா: கடைப் பையனின் பாட்டி.
தை: தைரியம், கல்யாணத்தின் நண்பன்.
சோ: சோமு, தைரியத்தின் தோழன்.
மா: மாணிக்கம், தைரியத்தின் தோழன்.

### காட்சி 1.

மு: கடைப் பையா..டேய் கல்யாணம்..

க: என்னாங்க! முதலாளி..

மு: கடைக்குள்ளே என்ன பண்ணிட்டு இருக்கே? மிந்திரிப் பருப்பு, திராட்சைப் பழம் டின்னு கிட்டே என்ன செய்திட்டு இருக்கே?

க: கணக்குப் பாத்திட்டு இருந்தேன்..

மு: மிந்திரிப் பருப்பு, திராட்சையைக் கணக்குப் பண்ணிட்டு இருக்கியா..?

க: இல்லிங்களே.. அந்த வழிக்கெல்லாம் என் கை போகாதுங்க!

மு: (கிண்டலாக) அடா..டா! ரொம்ப நல்ல பிள்ளைதான்!...

க: நிலுவைக் கணக்கைப் பாத்திட்டு இருந்தேன்..புள்ளி எடுத்திட்டுப்போய் ஆட்களைக் கண்டு வசூல் பண்ணிட்டு....

மு: வசூல் பண்ணிட்டு வரலாம்னு பாத்தியா..அப்படியே கம்பி நீட்டிடலாம்னு பாத்தியா?

க: வந்து ஒரு மாச மாகுதே.. ஏதாவது தப்புத் தண்டா செய்திருப்பேனா? நினைச்சுப் பாருங்க முதலாளி.

மு: நினைச்சுப் பாக்கறது என்னடா? கண் கொத்திப் பாம்பாயிருந்தேன்! அதனாலே உன் கை நீளாமெ இருக்கு..கொஞ்சம் அசந்தா, என்னைத் தூக்கி விழுங்கி ஏப்பம் விட்டிருப்பியே..உன்னை இப்படியே விட்டு வச்சிருந்தா, வம்புதான்!..

க: வேலையை விட்டு நீக்கிடனும்னு முடிவு பண்ணிப் பேச நீங்களா?

மு: பாத்தியா, பூடகமாச் சொன்னதைப் புட்டு வச்சிட்டியே..இவ்வளவு புத்திசாலி நம்ம கடைக்கிக் கட்டாது, தம்பி....

க: ஒரு மாசமா எவ்வளவோ உண்மையாப் பாடுபட்டு உழைச்சிருக்கேன்..திடீர்னு வேலையை விட்டுத் தள்ளிட்டீங்கன்னா, என்ன செய்யறது? ஒரு சம்பளமாவது..

மு: சம்பளமா?..ஒரு மாசம் ஒழுங்கா வேலை பாத்தால்ல, சம்பளம்? மாசம் ஆகலையே தம்பி!

க: தயவு பண்ணி, இன்னம் ரெண்டு நாள் தங்க விடுங்க.. சம்பளம் வாங்கிட்டுப் போறேன்.

மு: இவ்வளவு பேசின பிறகு, ஒரு நிமிசம் உன்னைக் கடையிலே தங்க விடவா!..இந்தக் கணமே கடையை விட்டு இறங்கு!...

### காட்சி 2.

பாட்டி: வேலையை விட்டு நீக்கிட்டானா..ஏன் தம்பி, நிசமாவா?

க: ஆமா..பாட்டி..இடுப்பு ஒடிய வேலை வாங்கினாரு! நானும் உண்மையா உழைச்சேன்..

பா: உழைப்புக்கு இதுவா பலன்? கிட்டத்தட்ட ஒரு மாசம் இருக்குமே தம்பி..

க: மாசம் முடிஞ்சா சம்பளம் அவுக்கணுமேன்னு, இல்லாத குறையைச் சொல்லி, கோணல் கட்சி எல்லாம் பேசி, வெறுங்கையா அனுப்பிட்டாரு..மளிகை மன்னரு சாமி எப்போதுமே இப்படித்தா

ணும்..பாட்டி! சம்பளம் போடாம வேலை மட்டும் வாங்கிட்டு, ஆட்களை அனுப்பிடுவாராம்..

பா: என்ன அநியாயம்?

தை: இருக்கட்டும்..கல்யாணம், கவலைப்படாதே..

பா: வா தம்பி, தைரியம்! கல்யாணத்துக்கு நீதான் துணை..எங்கே யாச்சும் பாத்து வேலை வாங்கிக்குடு.

க: வேலை கிடைக்காமலா போவுது? எனக்குத் தைரியம் இருக்கு பாட்டி! கவலைப்படாதீங்க!

### காட்சி 3.

சோ: ஒரு தரம் சொன்ன, புத்தி இல்லையா? அடுத்த கடையைப் பாத்துப் போங்கன்னு, போவிங்களா!

மு: இந்தாப்பா, கடைப் பையா! அவுங்களை என்ன பிச்சைக்காரங்கன்னு நினைச்சியா? அடுத்த கடைக்குப் போன்னு வெரட்டிறியே.. எல்லாரும் நம்ம கிராக்கி! வாயடக்கிப் பேசு!..

சோ: அடக்கிப் பேசின, இந்த ஜனங்களுக்குப் புரியாது முதலாளி! நீங்க சும்மா இருங்க, இந்த ஊரிலே இந்த ஒரு கடைதானு? போங்களேன், வேறெ கடையைப் பாத்து!..

மு: டேய், வாய்த்துடுக்கா நீ பேசாதே; நான் பேசிக்கிடறேன்! இந்தாய்யா, இவுங்களுக்குக் கடுகு என்ன இப்படிப் போட்டிருக்கே? ஒரே கல்லுங் கட்டியுமா இருக்கே!.

சோ: கல்லுங் கட்டியுமா இல்லாத போனு, தங்கக் கட்டியா போட்டுக் குடுப்பாங்க? இந்தக் கடையிலே இப்படித்தானய்யா இருக்கும்..அரிசிலே பாதிக் கல்லாத்தான் இருக்கு! புளியிலே நார் இருக்கு! பருப்பு வேகாது! இஷ்டமிருந்தா இங்கே வாங்க!. இல்லாத போனு, நாலு கடை தள்ளிப் போங்க!.

மு: டேய்! கடைப் பையா, நீ தான் பேசறியா!..வியாபாரத்துக்கு வினை வெக்கிறியே..கடுகு மாத்திக் குடு....

சோ: எனக்கென்ன வந்திச்சு? கடுகை மாத்திக் குடுக்கறேன். அதுவும் இப்படித்தான் இருக்கப் போவுது. இருக்கற சரக்கு அப்டித்தானிருக்கு. கொண்டாய்யா



பருப்புக்காரரே, நீயும் கொண்டா. அரிசி. .எடு. .புளி. .வாங்கய்யா.

மு: உங்களுக்குல்ல, கடைப் பையன் புதிசு. .நீங்க ஒண்ணும் வித்யாசமா நினைக்காதிங்க. நான் அவனைக் கண்டிக்கிறேன்.

சோ: இந்தாங்கய்யா. புளி. . பருப்பு, அரிசி. .கடுகு யாரய்யா?

மு: டேய் கடைப் பையா!

சோ: கடைப் பையனா! யாரய்யா பையன், 18 வருசமா ரெயிலுக்கு முழு டிக்கட் வாங்கி வரேன்; பாத்துப் பேசுங்க!

மு: என் கடை ஆளை, அப்படித் தான் கூப்பிடறது பழக்கம்.

சோ: அப்போ, என் வழக்கத்தைக் காட்டவா? இப்படித் தான் கங்கையம்மன் பால் பண்ணையிலே எடக்கா பேசினாரு முதலாளி; அவருக்குப் பாலாபிஷேகம் நடத்தி, குளிரப் பண்ணினேன், தெரியுமா?

மு: என்னாது, என்னை என்ன செய்திடுவே! ஓகோகோ. .!

சோ: எகிறுதே முதலாளி! படிக்கல் தலையிலே விழப்போகுது.

மு: என்ன அடிச்சுடுவியோ!

சோ: என்னமோ எனக்கு என்ன தெரியும்? எனக்குக் கோபம் வந்தா கண், காது தெரியாமெ வருமின்னு வீட்டிலேகூட சொல்வாங்க! நெய்க் கடை முதலாளி தலையிலே, நெய் டின்னைக் கவுத்தேன்னு சொல்வாங்க.

மு: என்னையும் அப்படிச் செய்திடுவியோ?

சோ: எனக்குத் தெரியாது. தமயந்தி ஜவுளி ஸ்டோர் முதலாளியைக் கேட்டுப் பாருங்க; அவரோட ஒரு யுத்தம் போட்டவன் நான்! சரக்கு எடுத்தேன் ஒரு ஆளுக்கு. முதலாளிக்குச் சந்தேகம் வந்தது; மூட்டையைப் பரிசோதனை போட்டாரு. .பத்து கஜம் ஷர்ட் துணிக்குப் பில் போட்டேன்; அதிலே இருபது கஜம் துணி இருந்தது! ஒரு பட்டுப் புடவை பில் போடாமலே குடுத்தனுப்பினேன்.

மு: அட பாவி, நம்பினவங்களுக்கு இப்படித் துரோகம் செய்வாங்களா?

சோ: உழைக்கிறவனுக்குச் சம்பள மோசம் பண்ணலாமா? பழிக்குப் பழி வாங்கினேன். அன்னிக்கு ஒரு நாள்தான் அவர் கண்டது.

மு: பல நாளா அப்படியே நடத்தி வந்திருக்கியோ? அட பாவி! அப்போ நம்ம கடையிலே 15 நாளா இப்படித்தானா?..

சோ: வேறே எப்படி இருக்க முடியும்? நீங்களும் சம்பளம் போடறதிலே இழுபறிதானே?

மு: டேய், இறங்குடா, கடையை விட்டு!





சோ: இறங்கி நின்னுதாண்டா பேசறேன்! 15 நாளைக்குச் சம்பளம் போடு.

மு: பண்ணின அக்கரமத்துக்குச் சம்பளம் வேறெயா?

சோ: என்ன, அக்கிரமம் பண்ணினேன்?

மு: இப்பத்தான் உன் வாயாலேயே சொன்னியே!

சோ: நான் ஆயிரம் சொல்வேன், நம்பறியா! .... அத்தாட்சி காட்டு! ருசு எங்கே? டேய் முதலாளி, வழியோட 15 நாள் சம்பளம் போடு; இல்லாதவரையிலே ரைஸ் மில் முதலாளிக்கு நடந்த மரியாதை....

மு: டேய், சே..போ! ..உன் சம்பளமோ நீயோ! இந்தா 15 ரூபா, ஓடு!

## காட்சி 4.

பா: தம்பி கல்யாணம், இனிமே தைரியத்தை நம்பிப் பிரயோஜனமில்லை. ரெண்டு மாசம் ஓடிட்டுதே!

க: ஏன் பாட்டி, அப்படிச் சொல்றிங்க?

பா: அவன்தான் மன்னார் கடைக்கி, ஆள் மேலே ஆள் அனுப்பிட்டு இருக்கானாமே.. உனக்கே வினை வைக்கிறான் தம்பி. உனக்குப் புரியல்லையா?

க: அதனாலே நமக்கென்ன பாட்டி. எனக்கு வேறே இடத்திலே வேலை கிடைக்காமலா போவும்? தைரியம் சொல்லி வச்சிருக்கு, பாட்டி.

பா: மளிகை மன்னார்சாமி கடையிலே, ஒரு ஆளாவது தங்கறதில்லையாமே! ஒருவேளை நீ போய்..

க: கேட்கச் சொல்றியா பாட்டி? நான்தான் கேட்பேனா..அவருதான் எடுப்பாரா?.

பா: பின்னே வீட்டிலேயே குந்தியிருந்து என்ன செய்யப்போறே?

க: எல்லாம் போகப் போகத் தெரியும் பாட்டி; அவசரப்படாதிங்க!

## காட்சி 5.

மு: கடைப் பையா..மாணிக்கம்.

மா: உம்....

மு: என்ன உம்! இங்கே வா.

மா: உம்..

மு: என்னடா இது உம்.. உம்முனு கோட்டான் மாதிரிச் சத்தம் காட்டுறே? வெளியே வாடா!

மா: என்னாங்க?

மு: என்னடா, அசை போடறே?

மா: பேரிச்சம்பழம் தின்னுட்டு இருந்தேன்.

மு: பேரீச்சம் பழம் தின்னுட்டு இருந்தியா?

மா: ஆமாங்க, டாக்டர் உடம்பைப் பாத்துக்கச் சொன்னாரு..

பேரீச்சம் பழத்திலே சத்து நிறைய உண்டாமே!

மு: நீ திங்கவா இங்கே கடை இருக்கு?

மா: என் உடம்பு நல்லா இருந்தால்தானே, உங்களுக்கு நல்லா உழைக்கலாம்? டாக்டர் சீனியும் நெய்யும் கலந்து சாப்பிடச் சொன்னாருங்க! அதோட திராட்சையும் மிந்திரிப் பருப்பும் தின்னுட்டு வரேன்.

மு: டேய், இறங்குடா கடையை விட்டு! கடையையே முழுங்கி ஏப்பம் விட்டுடுவே போலிருக்கே?..

மா: வாதாம்பருப்பு எடுத்து ஊறப் போட்டிருந்தேன். அதை எடுத்துக்கிட்டுப் போயிடறேனுங்க. உங்க கடையிலே சேர்ந்த பிறகு தான், என் உடம்பு கொஞ்சம் தேறி இருக்குன்னு எல்லாரும் சொல்றுங்க!

மு: அட சே..போடா..பெருந் தீனிப் பயலே!. பெருச்சாளியா உன் வயித்திலே? வாங்கிப் போட்ட சரக்கெல்லாம், தின்னு ஒழிச்சுட்டியேடா.

மா: பசியோட அனுப்பாதிங்க, முதலாளி! சரி, சம்பளம்..

மு: என்னது.. சம்பளமா.. தின்னு ஒழிச்சதுக்கு நீதான் குடுக்கணும்.

மா: சரி..அப்படியே இருக்கட்டும். கையிலே தம்பிடி கிடையாது. வேலைக்கி வச்சுக்கிட்டிங்கன்னு பாக்கி யில்லாமே எல்லாம் தீத்துக் கட்டுவேன்.

மு: தீத்துக் கட்டினது போதும்டா! போய்ச் சேரு! என்னடா பல்லைக் காட்டறே?

மா: சரி..வரேன், நினைவு இருக்கட்டும். பின்னிட்டு ஒரு சமயம் தேவைப் பட்டா கூப்பிட்டு விடுங்க! (கல்யாணம் வருவதைப் பார்த்து) தம்பி கல்யாணம், எங்கே போறே? இரு..நானும் வந்துட்டேன்!

மு: யாரு, கல்யாணமா? தம்பி கல்யாணம், இங்கே வா!

மா: என்னையா?..

மு: அட சே.. நீ போய்யா! தம்பி கல்யாணம் இங்கே, வா..ஒரு சமாசாரம்!

க: என்னுங்க, அவசரமாப் போறேன்.

மு: எங்கே போறே?

க: நல்ல காலம் இப்பதான் உதயமாச்சு. கதிரவன் ஜவுளி ஸ்டோரிலே வேலைக்குப் போறேன்! 30 ரூபா சம்பளம்.

மு: நான் 40 ரூபா தரேன்! இன்னிக்கே இப்பவே, வேலையை ஒப்புக்கிடு.

க: அந்தக் கடைக்கு..

மு: பழைய கடையிலே சேந்துட்டதாக நான் சேதி அனுப்பிடறேன், கல்யாணம்! யோசனை என்ன? ரொம்பச் செல்லமா வச்சுக்கிடறேன்..என்ன, கடைப்பையா!

க: என்னுங்க, முதலாளி! சரிங்க..

## காட்சி 6.

பாட்டி: என்ன தம்பி, கல்யாணம், இது நிசம்தானு?

க: ஆமாம் பாட்டி, பழைய மளிகை மன்னுர்சாமி கடையிலேயே வேலை கிடைச்சுது.

தை: ஆமா பாட்டி.. நிசம் தான். சம்பளம் 40 ரூபா..

பா: அப்படியா!

தை: வேறே கடை ஆட்களை வச்சு, மளிகை மன்னுர்சாமிக்கு 200 ரூபாய் நஷ்டம் வந்த பிறகு தான் புத்தி வந்திச்சு!

க: ஆமா பாட்டி, எல்லாம் அண்ணன் செய்த வேலைதான். அவரு கையாள்தான் வேலைக்குப் போன எல்லாரும்! எனக்கு வேலை வாங்கித் தரத்தான் இப்படி ஒரு நாடகம் நடத்தினுரு!

தை: ஆமா, பாட்டி..திட்டம் போட்டது தம்பி கல்யாணம்! அதை நிறைவேற்றி வச்சது நான்.

பா: ஓகோ கோ.. அப்படியா சமாசாரம்!

மு: ஆமா பாட்டியம்மா..(முதலாளி வருகிறுர்)

பா: வாங்க, கடை முதலாளி!

மு: தம்பி கல்யாணம் வேலை ஒப்புக்கிட்டிருக்கு! மனசு மாறிடாமெ இருக்கட்டும்; உங்ககிட்டே சொல்லத்தான் வந்தேன்!

பா: இனிமே அப்படி எல்லாம் நடக்காது. இன்னிக்கு நல்ல செய்தி கிடைச்சது; நல்ல நாள்; விருந்து வைக்க வேண்டும்! எல்லாரும் விருந்துக்கு வாங்க!



# தரும சிந்தை

—சுகி—

எட்டாம் வகுப்பு நிம்மதியாக இருந்தது. ஆசிரியர், ''நீங்கள் எல்லோரும் தீபாவளிக்கு ஊருக்குப் போவீர்கள். இங்கேயும் சிலர் கொண்டாடுவீர்கள். ஆனால் உங்களால் இயன்ற உதவியை ஏழை எளியவர்களுக்குச் செய்யுங்கள்'' என்று சொல்லி முடித்தார். தாங்கள் உதவி செய்யப் போவதாக எல்லோரும் கைதூக்கினார்கள். அரைகுறை மனத்தோடு, ராஜுவும் கையைத் தூக்கினான்.

மணியடித்தது. ராஜு ஹாஸ்டல் அறைக்கு வந்தான். அறையைத் திறந்ததும் அவன் தாயின் கடிதம் கிடந்தது.

''அன்பு மிக்க ராஜுவுக்கு, ஆசீர்வாதம். தீபாவளிக்கு இன்று முதல் லீவு என்று எழுதியிருந்தாய். நம்முடைய கார் அங்கே வருகிறது. நீ அதிலேயே வந்துவிடு. மாலை நாலு மணிக்கே புறப்படத் தயாராக இரு. உனக்கு வேண்டிய தினுசில், சட்டை கோட்டு, வேஷ்டி எடுத்துக்கொள்ள டிரைவரிடம் பணம் கொடுத்திருக்கிறார் உன் அப்பா. வெடி, மத்தாப்புத் தினுசுகள் உனக்குப் பதினைந்து ரூபாய்க்கும் உன் தங்கைக்குப் பத்து ரூபாய்க்கும் வாங்கிக்கொள். அதற்குமேல் வேண்டாம். முக்கியமாகப் பெரிய லீவுக்கு நீ வந்தபோது, கிரேப் ஸில்க்கில் நம்முடைய வேலையாள் முத்தையன் மகன் கணபதிக்கு எடுத்து வந்தது போல இப்போதும் புதுசு எடுத்து வந்துவிடாதே. நீ சம்பாதிக்கும் போது, தான தருமம் செய்யலாம். மற்றபடி......''

ராஜுவுக்கு மேலே வாசிக்க முடியவில்லை. போன தடவை அவன் சிவப்பு கிரேப் ஸில்க்கில் ஆறு வயதுக் கணபதிக்கு ஒரு சட்டை வாங்கிப் போனதை அம்மா தவிர எல்லோரும் அவனை ஆர்வமாகப் பாராட்டினார்கள். சின்னப் பையன் கணபதி எத்தனை தரம் வந்து அவனைக் கும்பிட்டான். அம்மா எழுதினது அவன் நெஞ்சை ரம்பமாக அறுத்தது.

மாலை மணி நான்கு அடிப்பதற்கும் ஹாஸ்டலுக்குள், அவர்கள் வீட்டுக் கார் வந்து நிற்பதற்கும் சரியாக இருந்தது.

''ராஜு, ஜல்தியாகப் புறப்படு'' என்றான் டிரைவர்.

திருப்பராய்த்துறை ராமகிருஷ்ண வித்தியாலயத்தை விட்டு, கார் திருச்சியை நோக்கிப் புறப்பட்டது.

கோட்டைக்கு வந்தபோது, ரெடிமேடு கடையில் தனக்கு வேண்டிய துணிகளாக வெடி வகைகள், மத்தாப்புத் தினுசுகளாக வாங்கி நிரப்பினான். கணபதிக்கு ஒரு சட்டையோ, துண்டோ வாங்கிக் கொடுக்க அவன் மனம் விம்மியது. வாத்தியார் உதவி செய்யச் சொன்னபோது தானும் உதவி செய்வதாகக் கை தூக்கியது நினைவில் வந்தது. ஆனால் தாய்க்குக் கோபம் வந்தால்?..

''ராஜு உனக்கு வேண்டியதை வாங்கி முடித்து விட்டாய். வீட்டுக்கு இங்கிலீஷ் காய்கறிகள், மலைப் பழம், ஆரஞ்சு, ஆப்பிள் வாங்கி வரவேண்டும்'' என்று காரை பெரிய கடை வழியாக விட்டான் டிரைவர்.

பழ வகைகள், கூடை கூடையாக வாங்கினார்கள்; காய்கறிகள் வாங்கினார்கள். கூலிக்காரனுக்கு எட்டணா என்று பேசி மோட்டாருக்குக்கொண்டு வரும் வழியிலே, துணிமணிக் கடைகள் இருந்தன;

அத்தனையும் பழைய துணிமணிகள்; அதை வாங்கவும் கூட்டம் மொய்த்துக்கொண்டிருந்தது. கந்தல்களைக்கூட தீபாவளிக்கு வாங்கி அணிந்து கொள்ள ஏழைகள் நின்றுகொண்டிருந்தார்கள். ராஜுவுக்குக் கண்ணீர் வந்தது. கடையிலே, பகட்டாகக் கிரேப் ஸில்க் தொங்கியதைப் பார்த்தான். 'இப்போதும் புதுசு எடுத்து வந்து விடாதே' என்ற அம்மாவின் எச்சரிக்கை நினைவில் வந்தது. அவனுக்குப் புதிதாக ஓர் அர்த்தம் தோன்றியது. அம்மா பழைய துணி எடுத்துப் போனால் ஒன்றும் சொல்ல மாட்டாள்; வாத்தியார் சொல்லுக்கும் மதிப்பு கொடுத்ததாகும். அவன், அந்தச் சட்டையை எடுத்து விலை கேட்டான். பணக்காரர் வீட்டுப் பிள்ளை பழைய துணி வாங்க வந்ததைப் பார்த்துச் சிலர் சிரித்தார்கள்.

ஒரு ரூபாய் என்று விலை முடித்து அதையும் எடுத்துக் கொண்டு வந்தான். கார் புறப்பட்டது.

ராஜுவின் அம்மா, பையனை ஆவலோடு வரவேற்றாள். குழந்தையை அன்பாகத் தடவிக் கொடுத்தாள். காரிலுள்ள சாமான்கள் உள்ளே போய்க்கொண்டிருந்தன. டிரைவர், "தம்பி, நீ வாங்கின பழைய சட்டை இது" என்று ஒரு பொட்டலத்தைக் கொடுத்தான்.

தான் செய்த காரியத்தைத் தாயிடம் பயந்துகொண்டே சொன்னான் ராஜு. "போனால் போகிறது. உன்னுடைய பழைய சட்டை ஒன்றைத் தீபாவளிக்கு நான் கொடுக்கலாம் என்றிருந்தேன்" என்று சொன்னாள் தாய்.

வேலைக்கார முத்தையன் மகன் கார் வருவதைப் பார்த்துவிட்டு, இரைக்க இரைக்க ஓடி வந்தான். அவனுக்கு, ராஜு என்றால் உயிர்.

"தம்பி கணபதி, இந்தா உனக்கு நான் வாங்கி வந்த சட்டை. தீபாவளிக்கு நிறைய மத்தாப்பு வெடி எல்லாம் தருகிறேன்" என்று கொடுத்தான்.

"முன்னேகூட இதுமாதிரி ஸில்க்குச் சட்டை தந்தாயே ராஜு" என்றான் கணபதி.

ராஜு கொடுத்த சிவப்பு ஸில்க்குச் சட்டையுடன் வீட்டுக்கு ஓடினான் கணபதி.

கணபதி போய் ஒரு மணி நேரமாயிற்று. ராஜுவைப் பார்க்க சப் இன்ஸ்பெக்டர் சைக்கிளில் வந்தார். போலீஸ்காரர் வந்தால் பயந்தானே! பணக்காரராக இருந்தாலும் ராஜுவின் அப்பா சற்றுப் பயத்தோடு வரவேற்றார்.

"உங்கள் பையனை என்னோடு திருச்சிக்கு அனுப்ப வேண்டும்."

ராஜு பயந்து போனான். இதற்குள்ளாக வேலைக்கார முத்தையன் வந்தான். இன்ஸ்பெக்டர் கையிலே அந்தப் பழஞ் சட்டை இருந்தது.

யாருக்கும் என்ன காரியம் என்று புரியவில்லை.

"ராஜு, பயப்படாதே! நீ எனக்குத் துணை செய்ய வரவேண்டும். இது திருட்டுச் சொத்து. உனக்கு எப்படிக் கிடைத்தது? அந்த விவரத்தைச் சொல்" என்றதும், ராஜுவின் அப்பாவுக்கு உயிர் வந்தது. ஒரு வாரத்திற்கு முன்னதாக முத்தையன் வீட்டிலே திருட்டு நடைபெற்றது. அதிலே துணிமணிகள், நகைகள், இரண்டு கறவை மாடுகள்கூடத் திருட்டுப் போய்விட்டன.

"சின்ன எசமான், நீங்க மூணு நாலு மாசத்துக்கு முந்தி எடுத்துக் கொடுத்த சட்டைதான் இது. இதையே திருப்பி நீங்க வாங்கி வந்திருக்கிறதாலே எனக்குப் பால் வார்த்த மாதிரி ஆகணும். போலீஸ் இஞ்சிபெட்டர் எந்தத் துப்புக் கிடைச்சாலும் உடனே தங்கிட்ட வந்து சொல்லச் சொன்னார். காணாமல் போன சட்டையை நம்ம பய கணபதி கொண்டு வந்தானோ இல்லையோ, உடனே ஸ்டேசனுக்கு எடுத்துக்கொண்டு ஓடினேன்" என்று கூறினான் முத்தையன்.

"சார், உங்களுக்கு என்ன செய்யணும், நான்? சொல்லுங்கள் செய்கிறேன்" என்றான் ராஜு.

"முத்தையன் வீட்டிலே நடைபெற்ற திருட்டின் மதிப்பு ஆயிரம் ரூபாய் இருக்கும். யார் இதைச் செய்திருக்க முடியும் என்று துப்புத் துலக்க இந்தப் பழைய சட்டை உதவும். நீ என்னோடு திருச்சிக்கு

வரவேண்டும். நானே இவ்விடம் வந்துவிடலாம்'' என்றார் இன்ஸ்பெக்டர்.

''சிறு பையனைத் தனியாக எவ்வாறு அனுப்புவது? காரையும் எடுத்துக்கொண்டு போய் வாருங்கள்'' என்றார் ராஜுவின் அப்பா.

''மிகவும் நன்றி, சார். வேலைக்கார முத்தையன் எங்களோடு வர வேண்டும். உங்களுக்குச் சிரமம்'' என்று கூறினார் சப் இன்ஸ்பெக்டர்.

இன்ஸ்பெக்டர், முத்தையன், ராஜு, இவர்களைத் தாங்கி, கார் ஜம்மென்று திருச்சிக்கு வந்து கொண்டிருந்தது.

காரில் வரும்போது, ''ராஜு, நீ போய் முன்பு வாங்கிய அதே பழைய துணிக் கடையில் வேறு துணி கேள். முத்தையன் தன் வீட்டுத் துணி ஏதேனும் அங்கே அகப்படுமா என்று கவனிப்பான். பிறகு, நான் கவனித்துக்கொள்கிறேன்'' என்றார் இன்ஸ்பெக்டர்.

காந்தி மார்க்கெட்டு அருகாமையில் கார் வந்து நின்றது. காரில் இன்ஸ்பெக்டர் இருந்தார். ராஜுவும் முத்தையனும் இறங்கிப் புறப்பட்டார்கள். பழையதுணி விற்கும் கடைகளைத் தாண்டி ராஜு போனான். கடைக்காரன் எமப்பேர்வழி. சற்று முன் அதிக விலை கொடுத்து வாங்கிய பையன் 'திரு திரு'வென பார்ப்பதை அறிந்து அவனே, ''தம்பி வா'' என்றான்.

''கடைக்காரரே, அப்போது ஒரு சட்டை கொடுத்தீர். அது இவர் பையனுக்கு. இவருக்கு ஏதேனும் சட்டைத் துணிகள் இருந்தால் எடும்'' என்றதும் கடைக்காரன் நிறையப் பணம் கிடைக்கும் என்ற ஆசையால் கட்டிக் கிடந்த மூட்டைகளைப் பிரித்தான்.



முத்தையன் நோட்டம் பார்த்தான்.

ஒரு கிழிசல் அங்க வஸ்திரம். ராஜுவின் அப்பா கொடுத்தது அங்கே கிடந்தது. அது தவிர, முத்தையன் மகளுடைய பச்சைப் பாவாடையும் கிடந்தது.

''அட பாவிப் பயலே, நீதானு திருடினது?' என்று முத்தையன் கத்தினுன்.

கடைக்காரன் விழித்துக் கொண்டு, ''யாருடா உன் வீட்டிலே திருடினது? அடிடா அவனை!'' என்று கத்தினுன். ஒத்தாசைக்கு இருந்த இன்னொருவன் அடிக்கக் கை ஓங்கினுன். நல்ல வேளையாக அடி விழவில்லை.

''நிறுத்தப்பா. ஏன் அடிக்கப் போகிறுய்?'' என்று போலீஸ்காரன் ஒருவன் தடுத்தான்.

''துணியும் இல்லை. சட்டையும் இல்லை. போங்கடா. வியாபாரக் கடையிலே என்ன கலாட்டா?'' என்று கடைக்காரன் மெதுவாகத் தள்ளிவிடப் பார்த்தான்.

இன்ஸ்பெக்டர் இரண்டு மூன்று கான்ஸ்டேபிள்களுடன் அங்கே வரவே கும்பல் கூடிற்று. கடைக்காரன் கையையும் காலையும் உதறிக் கொண்டான்.

அங்கே கிடந்த துணிமணிகளில் எது தன்னுடையது என்பதை முத்தையன் சொன்னுன். குறித்த துணிமணிகள் பொறுக்கப்பட்டன. அதை இன்ஸ்பெக்டர் பெற்றுக் கொண்டு, ''கடைக்காரரே, வாருங்கள், பாலக்கரை ஸ்டேஷனுக்கு. அங்கே வந்து சொல்ல வேண்டியதைச் சொல்லலாம்'' என்றதும், பெட்டிப் பாம்பாகக் கடைக்காரன் வந்தான்.

பாலக்கரைப் போலீஸ் ஸ்டேஷனில் ராஜு வாக்கு மூலம் கொடுத்தான்.

பழைய துணிமணி விற்கும் கடைக்காரன், ''இதை நான் திருடவில்லை. கள்ளத் தெருவில் குடியிருக்கும் மாமுண்டி என்பவன் எனக்கு விற்றுன். இது தவிர, இரண்டு கறவை மாடுகள் விற்பனைக்கு இருப்பதாகவும் என்னிடம் சொன்னுன். துணிமணியை நான் விலைகொடுத்து வாங்கினேன். நான் விற்ற நபரை நன்ருக அறிவேன்'' என்று வாக்கு மூலம் சொன்னுன்.

இரண்டு மூன்று கான்ஸ்டேபிள்களுடன் இந்த இன்ஸ்பெக்டரும் பாலக்கரை இன்ஸ்பெக்டரும் மாமுண்டியைத் தேடிப் போனுர்கள். தன்னை போலீஸார் துரத்தி வந்ததை அறிந்து, அணுக்குண்டு வெடியை எறிந்து பயங்காட்டினுன் மாமுண்டி.

யாரும் பயப்படவில்லை. முடிவிலே, மாமுண்டியைத் துரத்திப் பிடித்தபோது முத்தையன் வீட்டுக் கறவைப் பசுக்களை, விற்று விட்டதாக ஒப்புக்கொண்டான். நகைகளை அழித்துத் தன் கையிலே செயினுகப் போட்டிருப்பதாகவும் தெரிவித்தான்.

கறவை மாடுகளை முத்தையன் அடையாளம் கண்டான்.

நேரம் நடுநிசி. எங்கும் சந்தடி ஓய்ந்தது. அத்தனை சிரமத்திலும் இன்ஸ்பெக்டருடன், குட்டி இன்ஸ்பெக்டர் போன்று ராஜு நடந்தான்.

''தம்பி. நீ அன்புடன் ஒரு துணி எடுத்துக் கொடுக்க எண்ணியதால் ஏழை முத்தையன் பறிகொடுத்த பொருள்கள் பெரும்பாலும் கிடைத்தன. அன்பினுல் தான் உலகம் இயங்குகிறது. உன்னுடைய அன்பிற்கு என் நன்றி. என்ருவது ஒரு நாள் உனக்குச் சர்க்காரிலிருந்து இந்த உளவுக்குக் காரணமாக இருந்ததற்குப் பரிசு வரும். அதையும் நீ வந்து பெற்றுக் கொள்ளவேண்டும்'' என்று உணர்ச்சியுடன் குலுக்கி நன்றி தெரிவித்தார்.

''சிறு துரும்பு பல்லுக்குத்த உதவும் என்பதற்கு இன்றுதான் பொருள் தெரிந்தேன். இனிமேல் ஊர் போகலாமா?''

''பத்திரமாய்ப் போய் வா. நாளை உன் அப்பாவிற்கும் அம்மாவிற்கும் நேரில் நன்றியை வந்து சொல்லுவேன்'' என்று சொல்லியவர் போலீஸ் வீரர்களுடன், பிரபல திருடன் மாமுண்டியை அழைத்துக் கொண்டு, பாலக்கரை ஸ்டேஷனுக்குப் போனுர்.



இரவு ஒரு மணிக்குக் கார் வந்ததும், ராஜுவின் அம்மா அப்பா இருவரும் ஆசையோடு வரவேற்ருர்கள்.

தான் செய்து முடித்தவற்றை அவன் சொல்லச் சொல்ல அவர்கள் கேட்டுக்கொண்டிருந்தார்கள்.

''உன்னைப் பெற்ற நாங்கள் அடைகின்ற சந்தோஷம் சொல்லுலுக்கு அடங்காது. ராஜு! இனி மேல் நீ செய்யும் தருமத்தை நாங்கள் தடுக்கமாட்டேம்'' என்று ஆனந்தத்தோடு சொன்னுர்கள்.

''நிஜமாகவா? அப்படியானுல் என்னுடைய புதிய சட்டைகளில் ஒன்றை அந்தக் கணபதிக்கு நான் கொடுக்கலாமா?'' என்று கேட்டடான் ராஜு.

''பேஷாக'' என்ருர்கள் அவர்கள்.

எல்லா பத்திரிகைகளும்,

''சிறுவன் ராஜுவின் தீரம்! பிரபல கள்வன் பிடிபட்டான்!.. இன்ஸ்பெக்டருக்குத் துணையாக இருந்த பள்ளி மாணவன் ராஜு!'' என்று அவன் படத்தோடு செய்திகள் வெளியிட்டிருந்ததைப் பார்த்து, அவன் பள்ளிக்கூடச் சிநேகிதர்கள், ஆசிரியர்கள் அனைவரும் அவனை ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்டிருக்கிருர்கள்!




சொக்கன் என்று ஒரு பையன் இருந்தான். செல்லி என்று ஒரு பெண் இருந்தாள். சொக்கனுக்குச் செல்லி அக்கா.

செல்லி ரொம்பக் கெட்டிக்காரி. காலையிலே எழுந்திருப்பாள். கால் முகம் கழுவுவாள். கடவுள் துதி பாடுவாள். காபி கொஞ்சம் குடித்த பிறகு, கணக்குக் கொஞ்சம் போடுவாள். அம்மாவுக்கு உதவியாக, அம்பி தொட்டிலை ஆட்டுவாள். ஆடிப் பாடிக் குதிப்பாள். அப்பாவோடு சாப்பிட்டுவிட்டு, அக்காவோடு பள்ளிக்கூடம் போவாள். அவளைச் 'சுறுசுறுப்புச் செல்லி' என்று எல்லாரும் சொல்லுவார்கள்.

சொக்கன் ரொம்பச் சோம்பேறி. காலையிலே எழுந்திருக்கமாட்டான். கால் முகம் கழுவ மாட்டான். காபி மாத்திரம் குடித்துவிடுவான். கணக்குக் கொஞ்சம் போடமாட்டான். அம்மாவுக்கு உதவியாக, அம்பி தொட்டிலை ஆட்டமாட்டான்.. ஆடிப்பாடி மாத்திரம் குதிப்பான். அப்பாவோடு சாப்பிட்டு விடுவான். அண்ணாவோடு பள்ளிக்கூடம் போகமாட்டான். அவனைச் 'சோம்பேறிச் சொக்கன்' என்று எல்லாரும் சொல்லுவார்கள்.

சொக்கன் எப்போது பார்த்தாலும் விளையாடுவான். கேரம் ஆடுவான். அது தப்பினால் சீட்டாடுவான். அது தப்பினால் செஸ் ஆடுவான். அது தப்பினால், டிராப்ட்ஸ் ஆடுவான். அது தப்பினால் பதினைந்தாம் புள்ளி ஆடுவான். அது தப்பினால் கோலி ஆடுவான். அது தப்பினால் பந்தாடுவான். அது தப்பினால் பம்பரம் விடுவான். அது தப்பினால் காற்றாடி விடுவான். அது தப்பினால் பிளேகிரவுண்டுக்குப் போய் விடுவான். பாடமே படிக்கமாட்டான்.

அப்பாவுக்குக் கவலையாய்ப் போச்சு. ஒரு சாமியாரிடம் போனார். ''சொக்கன் சோம்பேறியாயிருக்கிறான். என்ன செய்வேன்?'' என்றார்.

சாமியார் ஒரு கிளி கொடுத்தார். ''கிளி சொல்கிறபடி சொக்கனும் செல்லியும் கேட்கவேண்டும். அவர்களிடம் சொல்லிவிடுங்கள்'' என்றார்.

அப்பா கிளியுடன் வீட்டுக்கு வந்தார்.

''சொக்கா, செல்லி, நீங்கள் இரண்டு பேரும் கிளி சொல்கிறபடி கேட்கவேண்டும்'' என்றார்.

''சரி; அப்படியே செய்கிறேன்'' என்றாள் செல்லி.

''அதுக்கென்ன பார்க்கலாம்'' என்று இழுத்தான் சொக்கன்.

கொல்லையிலே கொய்யா மரம் இருந்தது. ஒரு நாள் அதில் இரண்டு பழம் பழுத்திருந்தன.

''பழுத்திருக்கும்போதே பறித்துத் தின்னு; பழுத்திருக்கும்போதே பறித்துத் தின்னு'' என்றது கிளி.

உடனே செல்லி போனாள். ஒரு பழத்தைப் பறித்தாள். தின்றாள். கமகம என்று நல்ல மணமாய், ஜிலு ஜிலு என்று நல்ல ருசியாய் இருந்தது. ஜோராய்த் தின்றாள்.

சொக்கன் என்ன செய்தான்?? ''இப்ப என்ன வந்தது? நாளைக்குப் பறித்தால் போச்சு'' என்றான்.

மறுநாள் போய்ப் பார்த்தான். கொய்யா மரத்தில் பழம் இருக்குமா? அது எப்படி இருக்கும்? பழத்தை அணில் பாதி கடித்துவிட்டது; குருவி பாதி கொத்திவிட்டது. ஒரு சின்னத் துண்டுதான் மிச்சம். அது அழுகிக் கீழே கிடந்தது. சொக்கன் ஏமாந்தான்.

தோட்டத்திலே மல்லிகைச்செடி இருந்தது. ஒரு நாள் மாலை அதில் நிறைய அரும்பு கட்டியிருந்தது. தோட்டக்காரன் அரும்பை யெல்

லாம் பறித்தான். ஒரு செம்புத் தண்ணீரில் போட்டான். வீட்டிலே வைத்தான். மறுநாள் அரும்பெல்லாம் மலர்ந்தன. மணம் வீசின.

"மணம் இருக்கும் போதே சூட்டிக்கொள்; மணம் இருக்கும் போதே சூட்டிக்கொள்" என்றது கிளி.

உடனே செல்வி எழுந்தாள். நார் கொண்டு வந்தாள். பாதிப் பூவை எடுத்தாள். நாரிலே தொடுத்தாள். பூமாலை 'கம்' என்று மணம் வீசியது. செல்வி ஆனந்தமாய்த் தலையிலே சூட்டிக்கொண்டாள்.

சொக்கன் என்ன செய்தான்? "இப்ப என்ன வந்தது? நாளைக்குத் தொடுத்தால் போச்சு" என்றான்.

மறுநாள் வந்து பார்த்தான். பூ இருக்குமா? பூ எல்லாம் வாடிப் போச்சு! அவன் ஏமாந்தான்.

கோயிலில் ஒரு நாள் உற்சவம் வந்தது. சுவாமிக்கு அலங்காரம் எல்லாம் செய்திருந்தார்கள்.

கிளிக்குத்தான் பறக்கத் தெரியுமே. அது கோயிலுக்குப் போய் விட்டு வந்தது. "சொக்கா, செல்வி" என்று கூப்பிட்டது. "கோயிலிலே சுவாமி ரொம்ப அலங்காரமாய், அழகாய் இருக்கிறது. பள பள என்று விளக்கெல்லாம் போட்டிருக்கிறார்கள். விளக்கிருக்கும் போதே கோயிலுக்குப் போ; விளக்கிருக்கும்போதே கோயிலுக்குப் போ" என்று சொல்லியது கிளி.



செல்வி உடனே சோப்பை எடுத்தாள். கை, கால், முகம் எல்லாம் கழுவினாள். தலை வாரி, கால் எடுத்து, ரிப்பன் வைத்துப் பின்னிக் கொண்டாள். பூச்சூட்டிக் கொண்டாள். கண்ணாடி பார்த்துக் கொண்டாள். பட்டுப் பாவாடை, வில்வட்டுச் சொக்காய் எல்லாம் அணிந்து கொண்டாள். நகையெல்லாம் பூட்டிக்கொண்டாள். கோயிலுக்குப் போனாள். சந்தோஷமாய்ச் சுவாமி தரிசனம் செய்தாள். வீட்டுக்கு வந்தாள்.



சொக்கன் என்ன செய்தான்? "இப்ப என்ன வந்தது? மெல்லப் போனால் போச்சு; மெதுவாகப் போனால் போச்சு" என்றான்.



ரொம்ப நேரம் ஆச்சு. அப்புறம் சொக்கன் புறப்பட்டான். வாசலெல்லாம் ஒரே இருட்டு; வழியெல்லாம் ஒரே இருட்டு. விளக்கையெல்லாம் அணைத்துவிட்டார்கள். வழியெல்லாம் ஒரே பயமாயிருந்தது.

அத்தனை நாழிகை கோயில் திறந்திருக்குமா? கோயில் மூடியிருந்தது. சொக்கன் ஏமாந்தான்.

ஒரு நாள் அப்பா அசலூருக்குப் புறப்பட்டார். ''சொக்கா, செல்லி'' என்று கூப்பிட்டார். ஆளுக்கு அரைப்படி நெல் கொடுத்தார். ''நான் நாளைக்குத்தான் வருவேன். இந்த நெல்லைக் காய வைத்து, தூற்றி, அவல் இடித்து, புடைத்துச் சாப்பிடுங்கள்'' என்று போய்விட்டார்.

காலையில் எட்டு மணி ஆச்சு. நல்ல வெயில் புறப்பட்டது.

''வெயில் எரிக்கும்போதே காயப்போடு; வெயில் எரிக்கும் போதே காயப்போடு'' என்றது கிளி.

உடனே செல்லி நெல்லை எடுத்துக் காயப்போட்டாள்.

சொக்கன் என்ன செய்தான்? ''இப்ப என்ன வந்தது? சாயந்தரம் வரையில்தான் வெயில் எரிக்கப் போகிறது. மெல்லக் காயப்போட்டால் போகிறது; மெதுவாகக் காயப்போட்டால் போகிறது'' என்றான்.

சாயந்தரம் என்ன ஆச்சு? வெயிலே இல்லை. மேகம் சூரியனை மறைத்துவிட்டது. அப்போதுதான் நெல்லை முற்றத்தில் சொக்கன் கொட்டினான். நெல் காயவே இல்லை. சொக்கன் ஏமாந்தான்.

நல்ல காற்று அடிக்கத் தொடங்கியது.

''காற்றுள்ள போதே தூற்றிக்கொள்; காற்றுள்ள போதே தூற்றிக்கொள்'' என்றது கிளி.

செல்லி உடனே நெல்லை வாரினாள். முறத்தில் போட்டாள். உயரத் தூக்கினாள். தூற்றினாள். தூசி துப்பை யெல்லாம் காற்றிலே பறந்து போச்சு. பதரெல்லாம் தள்ளிப் போய் விழுந்தது. மணி மணி மணியாய் நல்ல நெல் கீழே குவிந்தது. செல்லி அதை எடுத்தாள். அடுப்பு மூட்டினாள். அடுப்

பிலே சட்டியைப் போட்டாள். சட்டியிலே நெல்லைக் கொட்டினுள். துடைப்பம் பிடித்துத் துழாவித் துழாவிப் பொரித்தாள். உரலிலே கொட்டினுள். உலக்கையால் இடித்தாள். முறத்திலே எடுத்துப் புடைத்தாள். உமியெல்லாம் நீங்கியது. அவல் மிஞ்சியது. சுகமாய்த் தின்ருள்.

சொக்கன் என்ன செய்தான்? "இப்ப என்ன வந்தது? நெல் இன்னும் காயவே இல்லை. காய்ந்த அப்புறம் தூற்றி, பொரித்து, இடித்து, புடைத்தால் போச்சு" என்ருன்.

அது எப்படிக் காயும்? சூரியனே மறைந்து போச்சு. மேகமோ சூழ்ந்துகொண்டது. காற்ருே அடித்தது. மழையும் பிடித்துக் கொண்டது; 'சோ' என்று பெய்தது. சொக்கன் காயப்போட்ட நெல் எல்லாம் போச்சு. அதை மழைத் தண்ணீர் அடித்துக் கொண்டு போய்விட்டது. சொக்கன் ஏமாந்து போனுன்.


சொக்கனுக்குச் சாப்பிட ஒன்றுமே இல்லை. பாவமாயிருந்தது. செல்லி பரிதாபப்பட்டாள். "போனுல் போகிறது. என் அவலில் கொஞ்சம் தருகிறேன். சாப்பிடு. பட்டினி கிடக்காதே" என்ருள். சொக்கனுக்குக் கொஞ்சம் அவல் கொடுத்தாள். அவன் அதைச் சாப்பிட்டான்.


அப்பா ஊரிலேயிருந்து வந்தார். "சொக்கா, செல்லி, என்ன சேதி? அவல் இடித்துச் சாப்பிட்டீர்களா?" என்று கேட்டார்.

"சாப்பிட்டேன், அப்பா" என்ருள் செல்லி.

"என் நெல் எல்லாம் போச்சு, அப்பா, செல்லி கொஞ்சம் அவல் கொடுத்தாள். இல்லாவிட்டால், நான் பட்டினி கிடந்திருப்பேன். சோம்பேறியாயிருந்தேன். பழம் போச்சு; பூப் போச்சு; சுவாமி தரிசனம் போச்சு; நெல்லும் போச்சு. இனிமேல் நான் சுறுசுறுசுறுப்பாய் இருப்பேன்" என்ருன் சொக்கன்.

"அதுதான் சரி. சுறுசுறுப்பாயிரு. சுறுசுறுப்புச் சொக்கன் என்று எல்லாரும் உன்னைக் கூப்பிடுவார்கள்" என்ருர் அப்பா.






# இரும்புப் பெட்டி

**கே. எஸ். பி.**

சின்னஞ் சிறு கிராமம் அது; ஆனால் சிங்காரமாக இருந்தது. ஓடு வேய்ந்த இருபது வீடுகளும், நாலுபுறமும் வயல்களுமாகக் காட்சி தந்தது ஊர்.

எல்லா வீடுகளிலும் மிகவும் சின்ன வீடு கோடி வீடுதான். அந்த வீட்டுக்கு எஜமானி காமுப் பாட்டி. அதிகாலையில் எழுந்து வாசலுக்குக் கோலமிட்டுவிட்டு, குளத்துக்குக் கிளம்புவாள். உதறும் குளிரானாலும் கொட்டும் பனியானாலும் விடியற்காலையில் எழுந்து குளத்தில் ஸ்நானம் செய்வது அவள் வழக்கம். கோயில்மரத்தில் பன்னீர்ப்பூ பொலபொலவென்று கொட்டிக் கிடக்கும். வரும்போது செம்பு நிறையப் பூவை அள்ளிக்கொண்டு வருவாள்.

காமுப் பாட்டி ஒரே ஆத்மா தானே? பிள்ளைகளும் பேரன்களுமாக எல்லாரும் பட்டினத்தில் இருக்கிறார்கள். எப்போதாவது விடுமுறைக்கு வந்து போனால் வீடே கலகலப்பாக இருக்கும். மற்றச் சமயங்களில் ஊசி விழுந்த சத்தம்கூட அந்த வீட்டில் கேட்கும்.

ஒரு வேளை ஆகாரம்தான் பாட்டிக்கு. காலையில் சாதத்தை வடித்துவிட்டால், அதுவே போதும். தோட்டத்தைப் பாதுகாப்பாக மூங்கில் படலால் வேலி கட்டி, கண்ணாகக் காத்து வைத்திருந்தாள். ஆயினும் சில சமயங்களில் புடலும் பாகலும் கொள்ளை போய்விடும். பாட்டி ஆத்திரம் தீரக் காலையில் கத்துவாள்.

அந்த ஊரிலே உள்ளவர்களில் கிருஷ்ணன் என்பவன் மட்டும் மகா சோம்பேறி; போக்கிரியும் கூட. பாட்டியிடம் தேனொழுகப் பேசுவான்; ஆனால் மனத்திலே ஊறிக் கிடப்பது அவ்வளவும் விஷம். பாட்டியின் மேலே எப்போதும் அவனுக்கு ஒரு கண்!

பாட்டியின் மூத்த மகன் மாதம் முப்பதோ நாற்பதோ அனுப்புவான்.

பாட்டிக்குச் செலவு ஏது? ஆழாக்குப் பாலும் தயிரும் வாங்கிக் கொள்வாள். குத்தகைக்காரன் வருஷத்துக்கு வேண்டிய சாப்பாட்டுக்கு நெல்லாகக் கொடுத்துவிடுவான்.

காமுப் பாட்டி பலே கெட்டிக்காரி. மீதமுள்ள பணத்தை ஊரில் பொறுப்புள்ள சிலரிடம், முக்கியமாகக் கோயில் மணியகாரரிடம் பத்து இருபது என்று கொடுத்து வைப்பாள். தேவைப்படும்போது வாங்கிக்கொள்வாள். கிருஷ்ணனுக்கு அவரைக் கண்டால் ஆகாது.

''ஆளைப் பாரு. காமுப் பாட்டியோ கிழம். ஒரு நாள் அவள் பணத்தை வாயில் போட்டுக் கொள்ளப் போகிறார்......!'' என்று தன் சகாக்களிடம் சொல்லுவான்.

கிருஷ்ணன் காமுப் பாட்டியை விசாரிக்கப்போவது வழக்கம்.

''ஏண்டா, இப்படிச் சுத்திண்டிருக்கே? வேலை வெட்டி இல்லாமல்? என் பிள்ளை பட்டினத்தில் இருக்கான், படிச்சுப் பாஸ் பண்ணிணயானா வேலை வாங்கித் தரச் சொல்றேன்....!'' என்பாள்.

கிருஷ்ணன் கொல்லென்று நகைப்பான்.

''படிப்பு ஏறல்லியே பாட்டி..!''

''போடா மண்டு. எட்டாவது கூடவா பாஸ் பண்ணத் துப்பு இல்லே? என் பேரன் காலேஜில் படிக்கிறுனே!'' என்பாள்.

விசேஷ நாட்களில் பட்சணம் மிச்சமிருக்கும் போதெல்லாம் வஞ்சனையில்லாமல் கிருஷ்ணனைக் கூப்பிட்டுக் கொடுப்பாள் பாட்டி.

''ரொம்ப நன்னயிருக்கு, பாட்டி இந்த முறுக்கு......!'' என்று ஒன்றரைக் கண்ணால் பாட்டியைப் பார்ப்பான். அவன் கவனமெல்லாம் ரேழியிலிருந்த சிறு இரும்புப்பெட்டி மேலேதான்! காமுப் பாட்டியின் சேமிப்பு முழுவதும் அதிலே அடங்கியிருந்தது. குறைந்தது நூறு இருநூருவது இருக்காதா அந்தப் பொக்கிஷத்தில்? அது அவன் கண்ணை உறுத்தியது. பாட்டியின் இரும்புப் பெட்டியை ஒரு நாள் அபகரித்துவிடுவது என்று அவன் தீர்மானித்துவிட்டான்.

*   *   *

**அ**ன்று அமாவாசை. காலையில் கோயில் மணியகாரர் பாட்டியின் வீட்டுக்குப் போனதைக் கிருஷ்ணன் பார்த்தான். அவர் கையிலே ரூபாய் நோட்டுகள் பளபளத்தன; பாட்டியிடம் வாங்கிய கடனைத் திருப்பித் தர வந்திருக்கிறாரோ?

சூது நிறைந்த கிருஷ்ணனின் மனம், இரவுப் பொழுது எப்போது நெருங்கும் என்பதிலேயே விநாடிகளை எண்ணிக்கொண்டிருந்தது. 'இரும்புப் பெட்டியைத் தூக்கிப் போய் பட்டினத்துக்குக் கம்பி நீட்ட வேண்டியதுதான். அங்கே சின்ன வெற்றிலை பாக்குக் கடையாக வைத்து....! எத்தனை நாளைக்கு இப்படிக் கிராமத்தில் வரும்படியும், குஷியும் இல்லாமல் அவதிப்படுவது?' என்று எண்ணினான்.

இரவு ஏழுமணி. முன்னிருட்டுக் காலமாகியதால் நன்ருக இருட்டிவிட்டது. பாட்டி கோயிலுக்குப் போயிருந்தாள். திரும்பி வர, குறைந்தது இன்னும் முக்கால் மணி நேரமாவது ஆகும்.

வாசல் பூட்டியிருந்தது. கொல்லைப்புறம் வந்தான். படல் சாத்தியிருந்தது. சுற்றிலும் முள் வேலி; அதைத் தாண்டி உள்ளே குதிக்கவேண்டும். தோட்டத்தைக் கடந்து, கிணற்றங்கரையையும் தாண்டினால் கொல்லைக் கதவு; பழங்கால ஓட்டைக் கதவு; ஓரிடி இடித்தால் பெயர்ந்துவிடும். பின்பு உள்ளே போய்விடலாம்.

ஒரே எம்பாகத் தாவினான் கிருஷ்ணன்; தோட்டத்துக்குள்ளே குதித்துவிட்டான். வேகமாகத் திரும்பிப் பார்த்துக்கொண்டே நடந்தான்.

''ஐயோ, இது என்ன! பேயா?''

கிணற்றினருகில் முக்காடிட்டுக்கொண்டு ஒருருவம் நின்றது. தலையிலிருந்து கால்வரையில் முக்காடு; அமாவாசையா? நல்ல இருட்டு.

கிருஷ்ணனுக்கு வெலவெலத்தது.

''டேய்.......!'' உரத்த சப்தம்; கடகடவென்று பிசாசு நகைத்தது.

வேர்த்து வெலவெலத்துப் போன கிருஷ்ணன் அப்படியே தரையில் சாய்ந்துவிட்டான்.

முக்காடிட்ட உருவம் பற்களை நற நறவென்று கடித்துக்கொண்டு அவனிடம் ஓடிவந்தது.

''ஐயோ, பிசாசு.......!'' அவனையுமறியாமல் கூச்சலிட்டு விட்டான் கிருஷ்ணன். கண்களில் மருட்சி; மயங்கினாற்போலப் புலன்கள் அடங்கிவிட்டன.

இரண்டு நிமிஷம் ஆகியிருக்கும். கொல்லைக் கதவு திறந்தது. அரிக்கேன் லைட்டோடு ஓர் உருவம் வெளியே வந்தது; காமுப்பாட்டி!

''யாருடா திருடன்!''

கைகள் நடுங்க, எழுந்தான் கிருஷ்ணன்.

''பாட்டி, நான்தான். மன்னிச்சுடு!'' லாந்தர் வெளிச்சம் அவன் மேல் அடித்தது. முக்காடிட்ட உருவம், முக்காட்டைக் கீழே தள்ளியபோது, கிருஷ்ணன் ஸ்தம்பித்துவிட்டான்; கோயில் மணியகாரர் பரமசிவம்!

''நீதானுடா, டேய்......!''

மூச்சு வந்தது கிருஷ்ணனுக்கு.

''தினம் தினம் காய்கறி திருட்டுப் போயிண்டேயிருக்கு; ஆளைக் கையுங் களவுமாகப் பிடிக்க இன்னிக்கு இந்த ஏற்பாடு பண்ணினேன்; அமாவாசையோல்லியோ! நீதான் தினமும் காய்ச்சிருக்கிற புடலங்காயையும், கத்தரிப் பிஞ்சையும் திருடிண்டு போறயா....! ஏண்டா நன்றி கெட்டவனே, திருட்டுத் தொழில்லே வேறே இறங்கிவிட்டாயா?''

காமுப்பாட்டி மூச்சுவிடாமல் அடுக்கிக்கொண்டே போனாள்.

''இல்லை பாட்டி, சத்தியமா காய்கறியை நான் திருடினதேயில்லை; இன்னிக்குத்தான் இந்தச் சபல புத்தி; நன்னா மாட்டிண்டேன்......!''

'ஜில்'லென்று உடல் முழுவதும் வேர்த்துக்கொட்டியது கிருஷ்ணனுக்கு. நேர்ந்த அதிர்ச்சியில் இரும்புப் பெட்டி ஞாபகமே பறிபோய்விட்டது! ஒழுங்காக நடந்துகொண்டு, படித்து முன்னுக்கு வர வேண்டியதைப்பற்றிய சிந்தனையில் அவன் லயித்துவிட்டான்!



# இரட்டை வெடி



'நீலம்'

JL 031211,N5 KN N55
842 01

பட்டாமணியகாரரின் பெண்ணுக்குத் தலை தீபாவளி. மாப்பிள்ளை பட்டணத்திலேயிருந்து ஒரு வாரகாலத்துக்கு முன்பாகவே கிராமத்துக்கு வந்துவிட்டார். அவருடைய தம்பி பிரகாஷும் கூட வந்திருந்தான். அவனுடைய வாய்த் துடுக்கும், துஷ்டத்தனமும் சொல்லி முடியாது.

கலியுக அநுமார் என்றே சொல்லிவிடலாம்! கிராமத்துக்கு வந்த இரண்டாவது நாளே உளுந்து போல கருநிறம் பாய்ந்திருந்த உளுந்து கிருஷ்ணன், குள்ளச் சாரங்கன், வேதபுரி ஆகிய மூன்று (ஆஞ்ச) நேயர்களும் பிரகாஷ் நீட்டிவிட்ட வாலில் தோரண வெடி மாதிரித் தொங்கலானார்கள்! மத்தாப்புக் கம்பிகள், 'அவுட்டு' ஆகியவற்றை ஒவ்வொன்றாக உருவிக் கொண்டு வந்து, கோபுர வாசலில் பகல் நேரத்திலேயே கொளுத்தி, ஊரையே புகைமண்டலமாக்கினான் பிரகாஷ்!

கோயிலுக்கு முன் போட்டிருந்த கீற்றுப் பந்தல் 'தீபாவளி' யாகிவிடப் போகிறதே என்ற கவலையைத் தெருவாசிகள் மணியகாரர் காதில் போட்டு வைத்தார்கள். தம்பியைப் பற்றிப் புகார் சொன்னால் மாப்பிள்ளை கோபித்துக்கொண்டால் என்ன செய்வது என்று அவர் பயந்தார்.

வாசலில் சைக்கிளோடு இரண்டு தலைகள் தட்டுப்பட்டனவோ இல்லையோ, தோட்டப் பக்கமிருந்து துள்ளிக்கொண்டு ஓடிவந்தான் பிரகாஷ். அவ்வளவு சீக்கிரம் காரியம் முடியும் என்று அவன் எதிர்பார்க்கவில்லை.


"ஏதுடா சைக்கிள்?" என்றான் பிரகாஷ்.

"டிராயிங் மாஸ்டருடையது. அவர் நல்ல வேளை வீட்டில் இல்லை. நீ சொன்னபடி, மணியகாரர் வீட்டிலே அவசரமாகக் கேட்பதாகச் சொன்னோம். கொடுத்துவிட்டார்கள்" என்றான் உளுந்து கிருஷ்ணன்.

"சரி; நான் முதல்லே ஏறிக்கொண்டு மெதுவா ஓட்டறேன்.. நீங்களும் ஏறிக்கொண்டு விடுங்கள்" என்றான் பிரகாஷ்.

சாரங்கன் 'காரிய'ரில் தொற்றிக்கொண்டான். ஒரே எழும்பாக எழும்பி முன்புறப் 'பாரில்' பாய்ந்தான் உளுந்து கிருஷ்ணன்.

வாணக் கடைக்குப் போகும் அவசரத்தில் பிரகாஷ் சைக்கிளை அபார வேகத்தில் செலுத்தினான். நண்பர்களிருவருக்கும் குஷி பிய்த்துக்கொள்ளவே தலை கால் தெரியாமல் கோஷமிட்டார்கள். முன் சக்கரத்தில் காற்று குறைந்து, மேற்கொண்டு 'பெடல்' செய்ய முடியாமல் பிரகாஷ் மூச்சுத் திணறினான். வேகம் குறைவது கண்டு நண்பர்கள் பிரகாஷை உற்சாகப் படுத்தினார்கள். ஆனால் பின் சக்கரம் 'டக் டக்' என்று தரை



தட்ட ஆரம்பிக்கவே பிரகாஷ் சைக்கிளைவிட்டு இறங்கினுன். நண்பர்களும் அடுத்தபடியாக தங்கள் இடங்களி லிருந்து குதித்தனர்!

உளுந்து கிருஷ்ணன் முற்றிய மந்திக் குரங்குபோல 'டப் டப்' என்று தன் புளி இலைக் கண்களை மூடுவதும் திறப்பதுமாக நின்ருன்.

குள்ளச் சாரங்கன் குறும்பை போன்ற தன் முகத்தைக் கீழே இறக்கிக்கொண்டுசைக்கிளின் அடிப் பாகத்தைக் குனிந்துகுனிந்து, ரொம்பத் தெரிந்தவன்போல நோட்டம் பார்த்தான். அவனுக்குச் சவாரி தடைபட்டதில் மிகுந்த ஏமாற்றம்!

பிரகாஷ் டயரைத் தன் விரலால் அழுத்திப் பார்த்தான். பின் சக்கரத்தில் பாக்கியிருந்த காற்றும் 'உஷ்' என்ற ஓசையோடு வெளிப்பட்டு, சக்கரம் அடியோடு சிரம பரிகாரம் செய்து கொண்டுவிட்டது!

காற்றடிப்பதற்கு மூன்று பேரும் ஒருவர் பின் ஒருவராகக் குனிந்து குனிந்து டியூபை ஊதினர். ஊஹூம்! காற்று ஏறினுல்தானே? அந்த ஊரில் எங்கேயும் சைக்கிள் கடையோ, பம்ப்போ கிடையாது.

''பம்ப்புகூட வேண்டாம். இந்த ஊரில் எந்தத் தெருவில் நாதஸ்வரக்காரர்கள் வீடு இருக்கிறது?'' என்ருன் பிரகாஷ்.

''இந்த நொண்டிச் சைக்கிளுக்கு மேள தாளத்தோடு ஊர்வலம் நடத்தப் போகிருயோ!'' என்ருன் குள்ளச் சாரங்கன்.

கடைசியில் நாதஸ்வரக்காரர் வசிக்கும் வீட்டுக்கு சைக்கிளை உருட்டிக்கொண்டு வந்து சேர்ந்தனர்.

நடுத்தர வயதுள்ள ஆசாமி ஒருவர் வெளியே வந்து, விஷயம் என்னவென்று விசாரித்தார். அவரைப் பார்த்த மாத்திரத்திலேயே அவர் தவுல் வாசிப்பவர் என்பதைப் புரிந்துகொண்டு விட்டான் பிரகாஷ். ஆகவே அவன், ''அவர் இருக்காரா?'' என்ருன்.

''அவர் என்றால் எவர்?''

''ஒண்ணுமில்லே. பாதி வழியிலே சைக்கிள்..'' என்று இழுத்தான் பிரகாஷ்.

''சைக்கிள் ரிப்பேரா? இந்தப் பக்கத்திலே அதற்கு எதுவும் செய்ய முடியாதே, தம்பி!''

''நீங்கள் ஒன்றும் செய்ய வேண்டாம். உங்கள்கூட ஒருவர் வருவாரே; அவர் வந்தால் சரி செஞ்சுடலாம். அதுதான் ஒத்து ஊதுவாரே, அவரைக் கொஞ்சம் வரச்சொல்லி, பின் சக்கரத்திலே விடாமெ ஊதச் சொன்னால்....'' என்று இழுத்தான் பிரகாஷ்.


''அயோக்கியக்கழுதைகளா! உங்களுக்கு எவ்வளவு திமிர்இருந்தா, இப்படிப் பேசுவீங்க!'' என்று தவுல்காரர் தாவிக் குதித்தார்!

தலை தப்பினால் போதும் என்ற நிலைமை ஏற்படவே சைக்கிளைப் போட்ட இடத்திலேயே போட்டு விட்டுப் பிராகாஷும் தோழர்களும் சிட்டாய்ப் பறந்து விட்டார்கள். சைக்கிள் இரவல் வாங்கி வந்தது தானே?

டவுனுக்குப் போய் வாணக் கடைகளைப் பார்க்க முடியாமல் தடை செய்துவிட்டது சைக்கிள். உள்ளூர்க் கடையிலாவது போய் விசாரிக்கலாம் என்று நண்பர்களைத் தாஜா செய்து கூட்டிப் போனான் பிரகாஷ்.

மண்ணெண்ணெய் வியாபாரி கண்ணாயிரம் தீபாவளிக்காகச் சொற்பமாகச் சில வாண, வெடி வகைகளையும் வரவழைத்து விற்று வந்தார். பிரகாஷும் நண்பர்களும் இந்தக் கடை முன்பு போய் நின்றுகொண்டு, ''அது என்ன விலை, இது என்ன விலை?'' என்று வாய் ஓயாமல் தொண தொண வென்று விசாரித்தார்கள்.

வியாபாரத்துக்கு இடைஞ்சலாக வெட்டிப் பேச்சுக் கொடுத்த பிரகா



ஷிடம், ''ஏம்பா, உனக்கு எந்த மார்க் எண்ணெய் வேணும்?'' என்ருர் கண்ணுயிரம்.

''சூரியன் மார்க் இருக்கா?''

''அது இல்லே. யானே மார்க் இருக்கு.''

''ஐயையோ! அது வேண்டவே வேண்டாம். எங்க அண்ணு புதுசா 'பெட்ரோமாக்ஸ்' லைட் பட்டணத்திலேருந்து வாங்கிண்டு வந்திருக்கார். அந்த எண்ணெய் போட்டால் யானேயின் கனத்தைத் தாங்காமல் புது லேட் அறுந்து விழுந்துடும்!''

தர்மத்துக்குக்கூடப் புன் சிரிப்பு சிரிக்காத கண்ணுயிரத்துக்கே அப்போது சிரிப்பு வந்தது. அதை அடக்கிக்கொண்டு, ''குரங்கு மார்க் வாங்கிக்கோயேன்!' என்று கூறினர்.

''குரங்கு மார்க்கா! அடியம்மாடியோவ்! அது கூரையையே கொளுத்திவிடுமே! போதும் போதும்!'' என்ருன் பிரகாஷ்.

''நங்கூரம், ஓடம், ஆந்தைமார்க் எண்ணெய்களும் இருக்கு.''

நங்கூர எண்ணெய் போட்டால் 'பெட்ரோமாக்ஸ்' இருந்த இடம் விட்டு நகராமல் நங்கூரம் பாய்ச்சிவிடுமென்றும், ஓடம் மார்க் விட்டால் லேட் கவிழ்ந்து விபத்தேற்படும் என்றும், ஆந்தை மார்க் உபயோகித்தால் வீட்டுக்கே அபசகுனமென்றும், விதண்டாவாதம் செய்தான் பிரகாஷ்.

பிரகாஷின் இடக்குப் பேச்சைக் கேட்டு அங்கிருந்த எல்லாரும் விழுந்து விழுந்து நகைக்கவே, கண்ணுயிரத்துக்கு மூஞ்சி சிறுத்தது.

சரேலென்று அவர் கடையிலிருந்து தாண்டி பிரகாஷின் காதைப் பிடித்துத் திருகினர். ''ஐயா! ஐயா! உமக்குத்தான் கண்ணுயிரம்! எனக்குக் காதாயிரம் இல்லே ஐயா!'' என்று அப்போதும் பிரகாஷ் நையாண்டி செய்து கொண்டே கத்தினன். இதன் பேரில் கண்ணுயிரத்தின் கோபம் முற்றி அவர் கை, பிரகாஷின் காதை அழுத்தமாகத் திருகியது!

பிரகாஷ் வீறிட்டலறியபடி மயக்கம் போட்டுக் கீழே விழுந்து விட்டான். உ.கி., கு.சா. இருவரும் வெலவெலத்துப் போய்,குபீரென்று பாய்ந்து மணியகாரர் வீட்டுக்கு ஓடித் தகவல் கொடுத்தனர். அவர்கள் பிரகாஷுக்கு என்னவோ, ஏதோ என்று பதறிப்போய் ஓடி வந்தார்கள்.

கண்ணுயிரத்துக்குக் கலவரமாகப் போயிற்று. அங்கே ஒரு சிறு கூட்டம் கூடிவிட்டது.

மணியகாரர், அவர் மாப்பிள்ளே இருவரும் வரவே கண்ணுயிரத்துக்கு நடுக்கம் அதிகரித்தது. அவர் தழு தழுத்த குரலில் பேசினர். ''ஒண்ணுமில்லீங்க. இந்தப் புள்ளே வாணத்தை எடுத்து....'' என்று ஏதேதோ உளறினர் அவர்.

இவ்வளவிலும் பிரகாஷ் கண்ணேயே திறக்கவில்லே. கண்ணுயிரம் மயங்கிய பையனின் மனத்தெம்புக்காகக் கடையிலிருந்த வெடி வகைகள் பலவற்றைத் தட்டில் வைத்து அவனுடன் வீட்டில் கொண்டு சேர்த்தார். இதற்குள்ளாக அங்கே தவுல்காரர் புகார் செய்ய வந்திருந்தார். சைக்கிளேக் காணவில்லேயே என்று பிராது கொடுக்க டிராயிங் மாஸ்டரும் வந்துவிட்டார். மணியகாரருக்கு பயந்துகொண்டு அவர்கள் எல்லாரும் போனல் போகிறதென்று வீட்டுக்குச் சென்றனர். கண்ணுயிரம் காசில்லாமல் வாணமும், வெடியும், பெட்ரோமாக்ஸுக்கு மண்ணெண்ணெயும் சப்ளே செய்தார்.

கண்ணுயிரம் நகர்ந்த கையோடு கண்விழித்தான் பிரகாஷ்! கண்ணேச் சிமிட்டினன். நண்பர்களிருவரும் பிரமித்தார்கள். தம்பிக்கு மயக்கம் தெளிந்ததில் மகிழ்ச்சி கொண்ட அண்ணுவோ மணியகாரரோ அவனே ஒன்றும் பேசவில்லே. கண்ணுயிரம் கொடுத்தவைகளில் இரட்டை வெடிதான் அதிகம். அதைத் தூக்கிக்கொண்டு கு.சா., உ.கி., சகிதம் கோபுர வாசலில் கொளுத்த முயன்ருன் பிரகாஷ். அநுமான் இலங்கையைக் கொளுத்தியமாதிரி, இரட்டை வெடிகளால் கோபுரவாசல் பந்தல் தீப்பிடித்து, கிராமமே பஸ்பமாகிவிடும் என்று ஜனங்கள் கேட்டுக் கொள்ளவே பிரகாஷ் பெரிய மனது வைத்து மணியகாரர் வீட்டு வாசலிலேயே அவைகளேக் கொளுத்தினன்!




# புயலுக்குப் பின்

கே. சுந்தரேசன்

"ஹும்..அம்மா .. உம்..'' நான்காம் நம்பர் வார்டிலிருந்து முனகல் சப்தம் வந்து கொண்டிருந்தது. அந்த அறைக்கு வெளியே, ''என்னங்க, பிழைச்சிப்பானா? பாவம், சிறுபையன்!'' என்று சிலர் கவலையோடு கேட்டார்கள்.

''ரோட்டிலே பாத்து வந்தாத் தானே! 'துரை....துரை' ன்னு யாரையோ கூப்பிட்டுக் கொண்டே நடு ரோட்டிலே ஓடியாந்தான். கார் இடிச்சிட்டுது'' என்றான் ஒருவன் அலட்சியமாக.

''ஐயா, ஐயா! பையன் உயிருக்கு ஒன்றும் ஆபத்தில்லையே!'' என்று அலறினாள் பையனின் தாய்.

''அம்மா, சும்மா அழுதுகலாட்டா செய்தால் பையனுக்கு ஜாஸ்தியாகிவிடும். நீங்க முதல்லே வீட்டுக்குப் போங்க!'' என்றார் டாக்டர்.

''பார்த்துக்கோங்க, டாக்டர், எவ்வளவு செலவானாலும் சரி.. நான் கொடுக்கறேன்'' என்று வெளியேறினார் அவன் தந்தை.

டாக்டர்கள் நீண்ட நேரம் பரிசோதனை செய்தார்கள்.

கால் உடைந்து படுக்கையில் படுத்திருக்கும் சிறுவன் வேலு வலி பொறுக்காமல் முனகினான். டாக்டரும் அவன் தாயும் பேசியது அவன் காதில் விழாமலில்லை. தாயின் பதற்றத்தைக் கண்டு அவனுக்கு இந்த வேதனையிலும் சிரிப்புத்தான் வந்தது. 'துரைக்கண்ணு, பாவம்! அவனை அம்மா படுத்திய பாடுதான் என்னை அநுபவிக்க வைத்துவிட்டது' என்று வேலு நீண்ட பெருமூச்சு விட்டான்.

* * *


துரைக்கண்ணு அவன் பெற்றோருக்குச் செல்லப்பிள்ளை. அவனுக்கும் படிப்புக்கும் வெகு தூரம். 'படித்து என்ன சாதிக்கப் போகிறோம்? தந்தை நிறையச் சம்பாதிக்கிறார். கவலையில்லாமல் குஷாலாய் உட்கார்ந்து சாப்பிட வேண்டியவன்தானே!' என்பதுதான் அவனது கொள்கை. அவன் தாயும் இதற்கு ஒத்துப் பாடுவாள். தகப்பனார் எவ்வளவோ கண்டித்துத்தான் பார்த்தார். ஆனால் அவர் பேச்சை அவன் லட்சியம் செய்தால்தானே! திடீரென்று அவன் வாழ்க்கையில் புயல் எழும்பியது. கஷ்டமே தெரியாமல் வளர்ந்த அவனைவிட்டுவிட்டு, அவன் பெற்றோர்கள் ஒருவர் பின் ஒருவ

ராக மறைந்தார்கள். அவன் தகப்பனுர் படுத்த படுக்கையாகக் கிடக்கும்போது துரையைப் பார்த்து, ''அப்பா, படிப்புத்தான் முக்கியமானது. ஏதோ நான் சம்பாதித்தேன். நீயும் நன்ருக வளர்ந்தாய். இனி நீ என்ன கஷ்டப்படப் போகிருயோ? எங்கிருந்தாலும் புத்தியாய் இரு!'' என்று கண்ணீர் வடித்தார். அப்போது அருகிலிருந்த அவன் மாமா முத்தையா, ''கவலைப்படாதீர்கள். நான் அவனைப் படிக்க வைத்து முன்னுக்குக் கொண்டுவருகிறேன்'' என்று ஆறுதல் கூறினுர்.

அவனுடைய மாமாவுக்கு அவனைப் படிக்க வைத்து முன்னுக்கு கொண்டுவர வேண்டும் என்று ஆசை. ஆனுல் மாமாவின் மனைவி அஞ்சலை அவனிடம் அன்பு காட்டவில்லை. அவனிடம் பேசும்போது அவள் பேச்சில் கனல் கக்கும். வீட்டு வேலைகள் எல்லாம் செய்யச் சொல்வாள். ஆனுல் துரை அஞ்சவில்லை. அவள் ஒன்று பேசினுல், அவன் ஒன்பது பேசுவான்.

''ஏய்! துரைக்கண்ணு! கடைக்குப் போயிட்டுவாடா! என்னடா முறைச்சுப் பாக்கறே? சோறு கொட்டிக்கலை...ஊம்!'' என்றெல்லாம் அவள் பேசுவாள்.

''இந்தாங்க! கடைக்குத்தானே போகணும்? உங்க மவன் வேலு



சாமி போவதற்கு என்னவாம்? தேஞ்சா போயிடுவான்? அவன் மட்டும் ஆகாயத்தில் இருந்து குதிச்சிட்டானு?'' என்று பதில் சொல்வான். சொல்வானே தவிர, வேலையை விட்டுக் கொடுக்கமாட்டான்.

''கோபித்துக் கொள்ளாதே, அம்மா! அவனைப் பார்க்கவே பாவமாக இருக்கிறது. உன்னிடம் வசவுகளையும் வாங்கிக்கொண்டு, கடைக்கும் போகிருனே'' என்று தாயிடம் கெஞ்சுவான் வேலு.

வேலுசாமி படிப்பில் ரொம்பக் கெட்டிக்காரன். பரம சாது. அவன் பலமுறை, ''துரை உனக்கு முன் கோபமே கூடாதுடா! எங்க அம்மா தான் மிகவும் கோபக்காரி என்று தெரிகிறதே; அவளிடம் நீ ஏன் எதிர்த்துப் பேசுகிருய்?'' என்பான்.

''எதிர்த்துப் பேசாமல் என்ன செய்வது? நீ பாத்திரத்தைத் தூக்கிக் கொண்டு, கடைக்கு நடந்தால் உனக்கும் என் சிரமம் தெரியும். சொந்தக்காரர்கள் என்று என்னை உங்களிடம் அப்பா ஒப்படைத்தாரே தவிர உங்க வீட்டு வேலை செய்ய அல்ல, தெரிஞ்சுக்கோ!'' என்பான் துரை.

அவனிடம் சிறிதும் கோபப் படமாட்டான் வேலு. தன்னுடன் கூடப் பிறந்த அண்ணனுகவே அவனை நினைத்து வந்தான். துரைக்கும் அவனுடைய பேச்சில் ஓர் இன்பம், நம்பிக்கை, இருக்கத்தான் இருந்தது. ஆனுல் வெளியில் வெறுப்பைக் காட்டிப் பேசினுன். வேலு துரையுடன் பழகுவதையே வெறுத்து வந்தாள் அஞ்சலை. அவள் மனம் சதா பொருமிக்கொண்டே இருந்தது. முத்தையாவுக்கு என்ன செய்வது என்றே புரியவில்லை. பல வழிகளிலும் துரைக்கு நன்மை செய்துதான் கொடுத்தார். ஆனுல் எல்லோரையுமே துரை எதிர்த்துப் பேசும்போது அவருக்குக் கோபம் வரத்தான் செய்தது.

சிறுகச் சிறுகத் தோன்றிய சண்டை ஒரு நாள் முற்றிவிட்டது.

''ஏண்டா தடியா! கடன் காரரா, பழுக்காய்ச் சிமிழில் வைத்திருந்த நாலணுவை



எங்கேடா காணோம்? திருடக்கூட ஆரம்பிச்சுட்டியா?'' என்று அனலைக் கக்கினாள் அஞ்சலை. எவ்வளவோ வசவுகளைப் பொறுத்துப் பதில் சொன்ன அவன், திருட்டுப் பட்டத்தைச் சுமத்தியதும் நடுங்கினான்.

''பாவம்! பரம சாது! பசுத் தோல் போர்த்த புலி!.. என்னடா பொறிஞ்சு கொட்டுவியே! வாய் அடைத்து விட்டதாடா?

''இது உருப்படாது....எனக்குத் தோணலை..'' என்று அஞ்சலை ஓயாமல் போகவே துரைக்குக் கோபாவேசம் தலை தூக்கியது. ''நீதான் திருடி....உன் அப்பன் தான் திருடன்....! உங்க வீட்டுச் சோற்றைத் திங்கறேன்னு என்ன வேண்டுமானாலும் பேசலாம் என்று நினைச்சுடாதே! யாருக்கு வேணும் உன் நாலணா!'' என்று பொழிந்து விட்டான்.

''எப்பொழுது நுழைந்தாலும் இந்த வீட்டில் ஒரே ரகளைதானா? இவனாலே பெரிய தொல்லையாப் போச்சே!'' என்று அப்போது உள்ளே வந்த மாமா துரையின் கன்னத்தில் ஓங்கி ஓர் அறை கொடுத்தார்.

''சே! இந்த வீட்டில் இனி ஒரு கணம் கூட இருக்கமாட்டேன்!'' என்று கிளம்பினான் துரை. 'எங்கே போவான்? இவன் திரும்பி இங்கே தானே வந்தாக வேண்டும்?' என்ற நம்பிக்கையில், ''போடா..போ!'' என்றார் முத்தையா.

அன்று வெளியேறியவன்தான். பிறகு அவன் திரும்பவே யில்லை. வேலுவுக்கோ அடிக்கடி அவன் நினைப்பு வந்தது. எங்கெங்கோ தேடி அலைந்தான். அவனை எப்படியாவது அழைத்து வர வேண்டும் என்ற ஆசை அவனுக்கு. மாலையில் பள்ளிக்கூடம் விட்டு விட்டால் வேலு விளையாட்டிற்குக் கூடப் போகமாட்டான். இரண்டு மணி நேரம் ஊரெல்லாம் சுற்றி வலம் வருவான். அன்றும் அதே போல் தான் அவன் வந்தான். சுற்றிச் சுற்றி ஐந்து மைல் போல நடந்து விட்டான். கடைசியில் ஸென்ட்ரல் ஸ்டேஷன் அருகில் மூர் மார்க்கெட்டைச் சுற்றி வந்தான். ஜனங்கள் கூட்டம், கூட்டமாகப் போய்க் கொண்டிருந்தனர். பஸ்களும் கார்களும், வண்டிகளும் சைக்கிள்களும் ஒரே நெரிசல்! ஆனால் அதோ குறுக்கே போகும் அந்தப் பையன் யார்?

வேலு உன்னிப்பாகப் பார்த்தான். ஆம்! அதே கட்டம் போட்ட சட்டைதான்; நீல நிக்கர், துரைதான்! சந்தேகமே இல்லை!

''துரை!.....துரை!....துரைக் கண்ணு!....'' இரைந்து கூவிக் கொண்டே பாய்ந்தான் வேலு. ரோட்டிலே வேகமாக வரும் வண்டிகள் ஒன்றையும் அவன் லட்சியம் செய்யவில்லை. ''சர்...ர்..ர்...ர்..'' கண் மூடிக் கண் திறப்பதற்குள் அவன் மேல் மோதியது ஒரு மோட்டார். வேலுவுக்கு உலகமே சுற்றுவதுபோல இருந்தது. அதன் பின்பு நடந்த நிகழ்ச்சிகள் ஒன்றும் அவனுக்குத் தெரியாது.

* * *

**டா**க்டர்கள் மும்முரமாக பரிசோதனை செய்தார்கள். ''ரத்த நஷ்டம் அதிகமாகி விட்டதால் ரத்தம் செலுத்தவேண்டியது தான்'' என்று முடிவுக்கு வந்தார்கள். இந்தச் செய்தி வெளியில் பரவியது. சற்றைக்கெல்லாம் நர்ஸ் உள்ளே நுழைந்தாள். தலைமை டாக்டரிடம், ''டாக்டர், இப்பொழுது இந்த ரத்தம் புதிதாக வந்தது. இது பொருந்துகிறதா, பாருங்கள்!'' என்றாள்.

அந்த ரத்தம் பொருந்தியிருந்தது. வேலுவின் உடம்பில் ரத்தம் ஏற்றப்பட்டது. ஸ்மரணை இழந்து கிடந்த அவன் மெதுவாகக் கண் திறந்து பார்த்தான். ''அப்பாடா!'' என்று பெருமூச்சு விட்டார் டாக்டர்.

* * *

**வே**லுசாமியின் தாய் அஞ்சலையும் தந்தை முத்தையாவும் செய்தி கேட்டு ஓடோடியும் வந்தார்கள்.

''டாக்டர்....டாக்டர்.. என் குழந்தை!''

''அவனுக்கு இனி ஒரு ஆபத்துமில்லையம்மா. இன்னும் ஒரு வாரம் கட்டுகள் போட்டால் சரியாகிவிடும். நல்ல வேளை. உன்

மகனின் அதிருஷ்டம்; நல்ல ரத்தமாகக் கிடைத்தது..! கடைசி நிமிஷத்தில் ஒரு பையன் 'ரத்த தானம்' செய்ய முன் வந்தான். பாவம்! அந்தச் சிறுவன் மிகவும் இளகிய மனதுடையவன். வயதில் சிறுவனானாலும் புத்திசாலி'' என்றார் டாக்டர்.

''டாக்டர் ஸார், யார் அந்தப் பையன்? எங்கள் மகனின் உயிரைக் காத்த உபகாரி! அவனை நாங்கள் ஒரு முறை பார்க்கவேண்டும்'' என்றார் முத்தையா.

''ஊஹூம்! அது எப்படி முடியும்? முதலில் அவன் ரத்தம் கொடுக்கறேன் என்று முன் வந்த போதே நான் அவனை, 'ஏன் தம்பி, ரத்தம் தருகிறேன் என்கிறாயே, உனக்கென்ன அப்பா, அவ்வளவு அக்கறை?' என்று கேட்டேன். 'சார்! எப்படியோ பையன் பிழைச்சால் அவனை முதலில் அக்கறையாகக் கவனியுங்க, ஸார்!' என்றான். மறுபடி வருவானோ, என்னவோ?'' என்றார் டாக்டர்.

இரண்டு மூன்று நாட்கள் சென்றன. அன்று மாலை முத்தையாவும் அஞ்சலையும் ஆஸ்பத்திரிக்கு வந்தார்கள். வேலுவிடம் நீண்ட நேரம் பேசிக்கொண்டிருந்துவிட்டு வெளியேறும் போது அவர்களை இடித்துக்கொண்டு ஒருவன் உள்ளே நுழைந்தான். அவன் கையில் ஆப்பிள், ஆரஞ்சு, ஹார்லிக்ஸ், முதலியவைகள் இருந்தன.

''வேலு....வேலு.... அடே! என்னைத் தெரிகிறதா வேலு! உடம்பு எப்படி இருக்கிறது? இந்தா, மெதுவாக எழுந்து பழத்தைச் சாப்பிடு..'' என்று கூறினான் அவன். எல்லையில்லாத மகிழ்ச்சியில், ''வேலு..வேலு..'' என்று பல முறை அழைத்தான். அவன் கண்களில் ஆனந்தக் கண்ணீர் பெருகியது. அவனைப் பார்த்த வேலுவின் பெற்றோர் ஸ்தம்பித்து நின்றனர். அங்கே வந்த டாக்டர், ''அடேடே! நீயும் பையனுக்குச் சொந்தக்காரன்தானா? என்னிடம் சொல்லவேயில்லையே. சமயத்துக்கு ரத்தம் கொடுத்தாயே!'' என்றார் டாக்டர்.



''துரைக்கண்ணு! நீயா?'' என்று ஓடிச் சென்று அவனை அணைத்தார் முத்தையா,

அஞ்சலைக்கு ஒன்றுமே தோன்றவில்லை. புயலுக்குப் பின் அமைதி போல், குழந்தைகளின் அன்பு ஒளியில் அவள் மனத்தில் இருந்த கொடுமை அழிந்துவிட்டது.

அஞ்சலை அந்த நிமிஷத்திலிருந்து தன் பிள்ளைக்கு உயிர் கொடுத்த அவனை, தன் இரண்டாவது புதல்வனாகவே நினைத்தாள்.

''அத்தே! இனி நீங்கதான் என் தாய். மாமாதான் என் தந்தை! ஏன் தெரியுமா? வேலுதான் என் சகோதரனாகிவிட்டானே!'' என்றான் துரை.

# ரங்குவின் தங்கை



சூப்பு:

**பூவாளூர் சுந்தரராமன்**

"அம்மா!''

''என்னம்மா, லலிதா?''

''சொன்னு, கோவிச்சுக்குவே?''

''கோபித்துக் கொள்ளமாட்டேன்; சொல்லு.''

''அவாத்து ராஜிக்கு வெல்வெட் சொக்காய் தெச்சிருக்காம்மா; அதே மாதிரி எனக்கும்...''

''சீ அசடு! அவாள்ளாம் பணக்காரா; ராஜியின் அப்பாவுக்கு இருநூறு, முந்நூறு ரூபா சம்பளம்; நாம் எங்கேம்மா போறது, அவ்வளவு பணம் போட்டு வாங்க?....''

''ரொம்ப அழகா இருக்கம்மா; தொட்டா வழ வழன்னு...''

''நாளைக்கு நம்ம ரங்குவும் பெரியவனுனு, உனக்கு வாங்கித் தருவான்.''

''போம்மா; எப்பப் பாத்தாலும், எதுக்கு எடுத்தாலும் 'ரங்கு பெரியவனுகட்டும், ரங்கு பெரியவனுகட்டும்'னு சொல்லிண்டிருக்கே. ஆமாம்! அவன் எனக்கு வாங்கித் தருவானுக்கும்? நேத்திக்குக் கூட என் தலையிலே நறுக்குனு குட்டினுனே!'' என்று குத்திக்கொண்டு வரும் கண்ணீரை மறைத்துக் கொண்டு ஓடினுள் லலிதா.

இவ்வளவையும் ரங்கு கேட்டுக்கொண்டுதான் இருந்தான்.. அவனுக்குப் பத்து வயது ஆகிறது. முதல் படிவம் படித்துக்கொண்டிருந்தான்; சூடிகையான பையன். 'நம்ப அப்பா இல்லாமல் அம்மா நமக்காக எவ்வளவோ கஷ்டப்படறு; அம்மா மனசைப் புண்படுத்தக் கூடாது' என்கிற எண்ணம் அவன் மனத்தில் இருந்து கொண்டே இருக்கும். அதனுல் தானே என்னவோ, அம்மாவின் வீட்டு வேலைகளில் கூட உதவி செய்வான்; அவ்வளவு நல்ல பிள்ளை!

லலிதாதான் அவனுடைய தங்கை; எட்டு வயது; பிடிவாதம் அதிகம்; அடிக்கடி அம்மாவுடன் முரண்டிக்கொண்டு 'ஆகாத்தியம்' செய்வாள்; அப்பொழுதெல்லாம் ரங்குவுக்கு லலிதாமீது கோபம் வரும். அம்மாவோ அவள் பக்கம் தான் பரிந்து பேசுவாள்.

முந்தின நாள்கூட இப்படித்தான் நடந்தது. அவன் பள்ளிக்கூட 'லைப்ரரி' புத்தகத்தை எடுத்து, ''பொம்மை பார்க்கிறேன்'' என்று கசக்கிவிட்டாள் லலிதா. அதைப் பார்த்ததும் ரங்குவுக்குக் கோபம் வந்து அவள் தலையில் குட்டிவிட்டான். லலிதா விஷயம்தான் தெரியுமே! தலையே உடைந்துவிட்டது போல உரக்க அழ ஆரம்பித்தாள். அம்மா ஓடோடியும் வந்து, ''குழந்தையை இப்படித்தான் தலையில் குட்டுவாளா? மூளை கலங்கி விடுமே!'' என்ருள்.

''கலங்கிப் போகட்டுமே! அவள்

செய்தது மட்டும் தேவலையா? செத்துக்கூடப் போகட்டும்!''

''ரங்கு இப்படி எல்லாம் பேசினுல் நீ என்னேடு பேசக் கூடாது; ஆமாம்!'' என்று சொன்னபோது அவனுடைய கண்களில் கண்ணீர் தேங்கிவிட்டது. மெதுவாகத் தாயாரிடம் வந்து, ''இனிமேல் அவளை அடிக்க மாட்டேம்மா!'' என்று மன்னிப்புக் கேட்டுக்கொண்டான். இன்றைக்கும் 'தாயாரைப் படுத்துகிறுளே' என்றுதான் லலிதாமீது அவனுக்குக் கோபம் வந்தது. ஆனுல், 'அம்மாவுக்குத்தான் அவள்மீது எத்தனை ஆசை! எத்தனை பிரியம்! கையில் மட்டும் பணம் இருந்தால் உடனே லலிதாவுக்கு அந்தச் சொக்காயை வாங்கிக்கொடுத்து விடமாட்டாளா?' என்று இப்படியெல்லாம் ரங்கு நினைத்துக்கொண்டான்.

அன்று முதல் ரங்குவின் நடத்தையில் மாறுதல் ஏற்பட்டது. காலை, மாலை இரு வேளைகளிலும் அவன் வீட்டில் தங்குவதில்லை. பள்ளிக்கூடத்திலிருந்து வீட்டிற்கு நேரம் கழித்தே வரத் தொடங்கினுன்; முன்போல விளக்கு ஏற்றினதும் புத்தகத்தை வைத்துக் கொண்டு படிப்பதில்லை. அவனுடைய தாயாருக்கு, அவன் குணம் புரியவில்லை!

இரண்டு வாரத்திற்குப் பிறகு ஒரு நாள் மத்தியானம் இரண்டு மணி இருக்கும்; ரங்கு நகராட்சி மன்றத்து விளையாட்டு மைதானத்தை நோக்கி வேகமாகப் போய்க் கொண்டிருந்தான். அன்று மூன்று மணிக்கு நகரத்தில் உள்ள பள்ளி



மாணவர்களுக்குப் பல விதப் போட்டிப் பந்தயங்கள் நடைபெற இருந்தன. அதில் கலந்துகொள்ளத்தான் ரங்கு அப்படி ஓடிக் கொண்டிருந்தான்!

வழியில் ஒரு மணிக் கூண்டு இருந்தது; அதில் மணி பார்த்தான்; இரண்டரை ஆகியிருந்தது; மைதா

னம் இன்னும் ஒரு மைல் தொலைவு இருந்தது. ஆதலால் இன்னும் வேகமாக நடக்க ஆரம்பித்தான்.

திடீரென்று ஒரு குரல், ''தம்பி, உன்னைத்தானே!'' என்று கேட்டது. திரும்பிப் பார்த்தான்; ஒரு தொண்டு கிழவன் ரங்குவைப் பார்த்து, ''இதோ பார், தம்பி! கந்தசாமிமுதலித் தெருவு எங்கே இருக்கிறது? கொஞ்சம் சொல்லேன்..'' என்று கேட்டான்.

ரங்குவுக்கு அவனுடன் நின்று பேச இஷ்டமில்லை. அவன் மனது முழுதும் பந்தயத்திலேயேதான்.

''இந்தச் சாலை வழியாகவே போய், அதோ அந்த மூணாவது விளக்குக் கம்பம் தெரியுதே, அதன் பக்கத்திலே இருக்கிற சந்து வழியாகப் போய், வலக் கைப் பக்கம் திரும்பினா ஒரு தெரு வரும்; அந்தத் தெருதான்.....''

''தம்பி, நீ நல்லா இருப்பே; இந்தக் கிழவனைக் கொஞ்சம் அந்தத் தெருக் கோடியிலே கொண்டு போய் விட்டுவிடேன்!''

''எனக்கு அவசரமான வேலை இருக்கு, பெரியவரே!''

''இருக்கட்டும் தம்பி; கொஞ்சம் இரக்கம் காட்டேன்!''

கிழவனுடைய தீனமான குரல் ரங்குவின் உள்ளத்தைக் கவர்ந்து விட்டது.

''சீக்கிரம் வாங்க!'' என்று கிழவனுக்கு வழி காட்ட ஆரம்பித்தான். கிழவன் மிகவும் மெதுவாக நடந்தான். பத்தடி நடந்தால், ''தம்பி, கொஞ்சம் மெதுவாக நடவேன்; என்னால் அவ்வ

## குழந்தையின் மகிழ்ச்சி



ஜட்டியைப் போட்டு....



நாடாவைப் பிடிச்சு....

போட்டோ: என். ராமகிருஷ்ணு

ளவு வேகமாக நடக்க முடியவில்லே! வயசு ஆயிடுத்துப் பாரு!'' என்முன். ரங்குவுக்கோ உடம்பும் கால்களும் பதறின. இடையிடையே கோபம் கோபமாகக் கூட வந்தது!

கடைசியில் கிழவனேக் கந்தசாமி முதலித் தெருவில் விட்டுவிட்டு, திரும்பவும் விளேயாட்டு மைதானத்தை நோக்கி ஓட ஆரம்பித்தான். மணிக்கூண்டில் மணி மூன்றைக் காட்டிற்று. அப்படியே அசந்து நின்று விட்டான். 'இனி மேல் போய்ப் பயனில்லே!' என்று திரும்பினன் வீட்டுக்கு.

'சர்'ரென்று ஒரு கார் அவன் பக்கம் வந்து நின்றது. ''ஏறிக் கோடா ரங்கு! கிரௌண்டுக்குத் தானே?'' என்று அவன் வகுப்பு நண்பன் வாசு கூப்பிட்டான்.

''ஸ்மைதானத்துக்குத்தான் புறப் பட்டேன்; ஆனல் நேரம் ஆகிவிட் டதுபோல இருக்கிறதே என்று..!''

''இல்லேடா; கால் மணி இருக்கு. ஏறிக்கொள்'' என்று ரங்குவை ஏற்றிக்கொண்டான்.

வழியில் ஒரு பெரிய ஹோட்டலில் கார் நின்றது.

''டிபன் சாப்பிடலாம், வா'' என்று கூப்பிட்டுக்கொண்டு போய் டிபன் வாங்கிக் கொடுத்தான். பந்தயத்தில் கலந்துகொள்ளப் போவதால் 'லேட்'டாகச் சாப்பிட்டான். ரங்குவுக்குத் தெம்பாகவும் இருந்தது. ஆனுலும் நேரம் ஆகிவிடப் போகிறதே என்ற பயம் இருந்தது.

ரங்கு மைதானத்தைப் போய்ச் சேர்ந்தபோது நல்ல வேளேயாகப் பந்தயம் ஆரம்பிக்கவில்லே. ரங்கு



நன்ன இழுத்து....



முடிஞ்சப்புறம்....

ஓடிப் போய், பந்தயங்களில் கலந்து கொண்டான். அன்றைக்கு அவனுக்கு இரண்டு வெள்ளிக் கிண்ணங்கள் பரிசாகக் கிடைத்தன!

ரங்கு வீட்டிற்கு வரும்போது, மணி ஏழிருக்கும். அவனுடைய தாயார் பட்ட கவலை கொஞ்ச நஞ்சமல்ல. ரங்குவைக் கண்டதும்தான் அவளுக்குப் போன உயிர் வந்தது. ''அம்மா, இந்தா உனக்குப் பரிசு!'' என்று ஒரு பொட்டலத்தை நீட்டினான் ரங்கு.

பொட்டலத்திற்குள் இளம் பச்சை வண்ணத்தில் ஒரு வெல்வெட் சொக்காய் இருந்தது! ரங்குவின் தாயாருடைய கண்களில் ஆனந்தக் கண்ணீர் பொங்கிற்று!

''ஏதுடா, யார் கொடுத்தா?''


''நான்தான் லலிதாவுக்கு வாங்கி வந்தேன், அம்மா!''

''பணம்?....''

''இன்று எல்லாப் பள்ளிக்கூடப் பையன்களுக்கும் விளையாட்டுப் போட்டி நடந்தது. நானும் அதில் கலந்துகொண்டேன்; இரண்டு 'பிரைஸ்' கிடைத்தது. அதை அப்படியே கடையிலே கொடுத்துவிட்டு லலிதாவுக்கு இந்தச் சட்டையை வாங்கிக்கொண்டு வந்தேன்.

''அதனால்தான் இரண்டு வாரமாகப் புத்தகத்தையே தொடவில்லை....''

அம்மா அவனை அணைத்துக் கொண்டபோது ரங்குவுக்கு ஒரே பெருமையாக இருந்தது! அண்ணாவுக்குத் தன் மீதுள்ள அன்பைக் கண்டு அப்படியே அசைவற்று நின்றுவிட்டாள் லலிதா.



எப்படி, நன்னா இருக்கா?



ஹிஹ் ஹிஹ் ஹி!

# சைக்கிள் ஆசை

## சங்கரசுப்பு

அன்று புரட்டாசி சனிக்கிழமை. நான் கிணற்றடியில் குளித்துக்கொண் டிருந்தேன். அப்போது என் தாயார் கையில் கரண்டியோடு என் முன் பிரசன்னமாகி, ''டேய், அம்பி, குளிச்சுட்டு என் பெட்டியில் இருக்கிற அண்ணு பட்டு வேஷ்டியை எடுத்துக் கட்டிக் கொள்'' என்று தன் கழுத்துச் சங்கிலியில் முடிந்திருந்த சாவியை அவிழ்த்து என் சமீபம் தூக்கி எறிந்தாள்.

நான் உள்ளே வந்தேன். அம்மா பெட்டியைத் திறந்து வாழைக்காய்க் கறை பட்டிருந்த பட்டு வேஷ்டியை எடுத்தேன். அப்போது என் பார்வை பெட்டியினுள்ளிருந்த சந்தனக் கிண்ணத்தில் பாய்ந்தது. கிண்ணத்தினுள் சில சந்தன வில்லைகள், கழக்கோடிகள், மாசிக்காய்கள், அறுந்த பவழமாலை, இவைகளுடன் கற்றை நூறு ரூபாய் நோட்டுகளும் இருந்தன. பணத்தைப் பார்த்ததும் என் மனத்தில் பல எண்ணங்கள் எழுந்தன. நானும் இத்தனை நாட்களாகக் கேட்டுக்கொண்டு வருகிறேன், சைக்கிள் வேண்டுமென்று. கேட்டுக் கேட்டு அலுத்துக்கூடப் போய்விட்டது. கேட்கும் ஒவ்வொரு சமயமும் என் தகப்பனுரிடமிருந்து, ''படிக்கிற படிப்புக்கு சைக்கிள் ஒன்றுதான் குறை? அப்படி என்ன இங்கே 'ஜமீன்' ஏதாவது தட்டுகெட்டுப்போச்சா? சோற்றுக்கே தாளம் போடறது, சைக்கிளா?'' என்ற ஒரே பதில்தான் வரும்.

அந்த ஆசைதான் இப்போது பணத்தைப் பார்த்ததும் என்னுள் ஒரு புதிய துணிச்சலை உண்டுபண்ணிவிட்டது. பட்டு வேஷ்டியைப் பிரித்துக் கட்டிக்கொண்டு சமையலறைக்குச் சென்று எட்டிப் பார்த்தேன். மோர்க் குழம்புக்கு அரைத்துக் கொண்டிருந்தாள் அம்மா. அப்பா திண்ணைமேல் நின்றுகொண்டு வேஷ்டியைப் பஞ்சக்கச்சம் கட்டிக் கொண்டிருந்தார். இதுதான் சமயம் என்று கிண்ணத்திலிருந்து இருநூறு ரூபாய் நோட்டுகளை எடுத்து என் இடுப்பில் பத்திரப்படுத்திக்கொண்டேன்.

*　　*　　*

அப்புறம் எனக்குத் தலைகால் தெரியவில்லை. எதிலும், நிதானம் இல்லை. வேகமாகச் சாப்பிட்டுவிட்டு எழுந்து பலகை நுனியில் காலை வைத்தேன். 'தடால்' என்று சப்தம்; அதையடுத்து வெங்கலப் பேலாவிலிருந்த தண்ணீர் பிரவாகமெடுத்தது.

''என்ன அவசரம், ஏன் இப்படிப் பறக்கறே? பள்ளிக்கூடமோ கிடையாது! வெயில் - மழை விணுகிறதோ!'' என்றுர் அப்பா.

''எனக்கு இன்னிக்கு, 'கிரிக்கெட் மாட்ச்' இருக்கு. போகாட்டா ரங்கராஜ ஐயங்கார் 'பைன்' போடுவார்.''

''பள்ளிக்கூடத்திலே 'மாட்ச்' சுன்ணு போக வேண்டாமாக்கும்! குழந்தை போறபோது அபசகுனமாட்டமா சொல்றேளே! இந்தாடா, அம்பி, இந்த தீர்த்தத்தைச் சாப்பிட்டுவிட்டுப் போ'' என்று அம்மா பரிந்து பேசிஞள்.

''இப்படி இடம் கொடுத்துக் கொடுத்துத்தான் கெட்டது! இந்தப் பதைபதைக்கிற வெயிலிலே என்ன இழவு விளையாட்டோ? ஹூம்.. கிரகசாரம்!''

*　　*　　*

அப்பா சொன்னதை அரைகுறையாகக் காதில் வாங்கிக் கொண்டே நான் பட்டை அவிழ்த்து கொடிமேல் விசிறி எறிந்தேன். ஞாபகமாக, கொடிமேல் பட்டைத் தூக்கியெறிந்தபோது, இரு நூறு ரூபாய் நோட்டுகளைச் சராயின்

பக்கவாட்டுப் பையில் திணித்துக் கொண்டு வாசலுக்கு ஓடினேன்.

நேராகச் சக்ரவர்த்தி ஐயங்கார் வீட்டு வாசலுக்கு ஓடி இரைக்க இரைக்க, ''சீமாச்சு, சீமாச்சு!'' என்று கத்தினேன்.

''யார்டா, அம்பியா?''

''ஆமாம்; ஒரு சமாசாரம்!''

''என்ன?''

''நீ வச்சுருக்கிறமாதிரி நானும் ஒரு சைக்கிள் வாங்கிக்கணும். நீ எந்தக் கடையில் வாங்கினாய், சொல்லு!''

''இங்கே பார், இதோடு ஆயிரம் தடவை கடையைக் கேட்டாய். என்ன பிரயோஜனம்? உங்கப்பா வாங்கித் தரப் போறதில்லே.''

''இதோ பாரு, பணம்'' என்று பையிலிருந்த பச்சை நோட்டுகளை எடுத்துக் காண்பித்தேன்.

''என்ன!'' சீமாச்சுவின் கண்கள் அகல விரிந்தன.

''ஏதடா, பணம்?''

''அதெல்லாம் உனக்கு எதற்கு? எங்கப்பாதான் கொடுத்தார்.''

''இந்த ஸ்ரீரங்கத்தான் கிட்டயே அளக்கறியே! நீ இப்படி ஒருத்தருக்கும் தெரியாமல் பணத்தை எடுத்துக்கொண்டு வந்து விட்டாயே! அப்புறம், உங்கப்பா, எங்கப்பாவிடம் அடிச்சுப்பாரேடா, 'உங்க பயலோடு சேர்ந்து என் பயல் கெடறான்'னு!''

''அதற்கெல்லாம் நீ பயப்படாதே. நான் பார்த்துக்கொள்கிறேன்.''

''அப்போ சரி; கிளம்பு!''




திருச்சிராப்பள்ளி சைனு பஜார் வீதி கலகலப்பாக இருந்தது.

'நடேசன் பிரதர்ஸ்! சைக்கிள் ஷாப்'பினுள் நுழைந்தோம்

''என்னங்க, ஸார்! ஒரு 'ஹிந்த்' இருபத்திநாலு இஞ்ச் வேணும். கிடைக்குமா?'' என்றான் சீமாச்சு.

''என்ன அம்பிகளா? இருபத்து நாலு இஞ்ச் இல்லே முப்பது இஞ்சுகூடக் கிடைக்கும், பணமிருந்தால்!''

''என்ன, அப்படி நினைச்சுட்டீங்க?'' என்று கேட்டேன் நான்.



எனக்குப் பொறுக்கவில்லை. இரு நூறு ரூபாய் வைத்திருக்கிறேனே!

''இந்தாலே, வீரபத்ரா, சின்ன ஐயருக்கு 'இந்த்' இருபத்துநாலு பார்ட்டுகளெல்லாம் எடுத்துக் கோத்துக் கொடு.''

''டைனமோ லைட், ஸ்பீட் அட்ஜஸ்ட் செய்ய பிரேக், குஷன் ஸீட், ஹாண்ட் பிரேக், அதில் பர்மிங்ஹாம் ரப்பர் கைப்பிடி, ஆர்டினரி பெல், ஸ்பிரிங்பெல், இரண்டு பூட்டுச் சாவி, பாக் ஸீட், அதிலே புஸ்தகம் வைக்க ரப்பர் வளையம், டேஞ்சர்லைட், ஸ்டாண்டு, ஸீட்டுக்கு பின்னாலே ஒரு சின்ன தோல் பை, கிராஸ் பார்லே குழந்தை ஸீட் ஒண்ணு....'' என்று விவரம் சொன்னேன். என் கவலை எனக்கு.

ஒரு மணி நேரத்தில் சைக்கிள் சகலவிதமான சௌகரியங்களுடன் வந்து நின்றது.

''எவ்வளவு பணம்?'' சீமாச்சு கேட்டான் அவிழ்ந்த குடுமியை முடிந்துகொண்டே.

''நூத்தி நாற்பது.''

சீமாச்சுவுக்கு ஒரு தும்மல் வந்தது. மூக்கைக் கரண்டிச் சிந்தி விட்டு, ''அம்பி, பணத்தை எடு!'' என்றான்.

முழுசாக இரு பச்சை நோட்டுகளைப் பார்த்ததும் முதலாளிக்கு விலாவில் அரித்ததுபோலும்!

கையில் நோட்டுகளை வாங்கிக் கொண்டு ''தம்பி! புள்ளைகளை மாத்திரம் நம்பக்கூடாது. வூட்டுலேந்து பணத்தைத் தூக்கியாந்துவிடும். பிற்பாடு அவங்க அத்தை, மாமா யாராவது ஆஜராகி, 'சின்னப் பையன் பணம் கொண்டாந்தான்னு தலையிலே கட்டிட்டியே!' என்று கூப்பாடு போடு வாங்க. இது எனக்கு வெகு நாளைய அநுபவம். அதனாலே, போயி அப்பாரைக் கூட்டியாங்க'' என்றார்.

''என்னையா, பணத்தையும் வாங்கிக்கிட்டே! எங்கப்பாரு அசலூரு போயிருக்காரே.''

''அம்மாவையோ இல்லே, வூட்லே வேற பெரிய மனுஷாள் யாராவது இருந்தா கூட்டிவா.''

''எங்க அம்மா வெளியே வர மாட்டாங்க. வூட்லே வேற பெரிய மனுஷாள் கிடையாது.''

''சரி, அம்மா கிட்டேதான் ஒரு கடிதாசாவது வாங்கிக்கிட்டு வாங்க!''

இருவரும் ஒரு நிமிஷ நேரம் யோசித்தோம். நான் சீமாச்சுவின் காலை மெதுவாய் நெருடினேன்.

உடனே ''சரி'' என்று இருவரும் புறப்பட்டோம்.



**அம்மா:** ஏண்டா, அலமாரியில் வைத்திருந்த லாடு எங்கேடா?

**பையன்:** எனக்குத் தெரியாதே, அம்மா!

நேராகத் திருச்சி கோட்டை ஸ்டேஷனுக்குச் சென்று ஸ்டேஷன் மாஸ்டரிடமிருந்து ஒரு தாளை வாங்கி, கையிலிருந்த நோட்டிலிருந்து கிழித்தால் தெரிந்துவிடும் என்று ஊகித்து, "டேய், நாமே அந்தப் புளிய மரத்தடியில் உட்கார்ந்து கடிதாசி எழுதணும். என்ன சொல்றே?" என்று என் யோசனையை வெளியிட்டேன்.

"தரமான ஐடியா!"

நான் எழுதத் தொடங்கினேன்:

"டேய், லொட்டாங் கையால் எழுதுடா. அப்பத்தான் பொம்மனாட்டி எழுதினமாதிரி இருக்கும்" என்று சீமாச்சு சொல்லவே, சிரமப்பட்டு இடது கையால் எழுதினேன்.

'வரும் பையன் என் பிள்ளைதான். அவா அப்பாதான் சைக்கிள் வாங்கிக்கொள்ளப் பணம் கொடுத்திருக்கார். அவர் அசலூர் போயிருக்கிறபடியால், நல்ல சைக்கிளாகப் பார்த்துக் கொடுத்தனுப்பவும். பாக்கியை, பொட்டலம் கட்டிக் கொடுத்தனுப்பவும். நான் வெளியே வருவதற்கில்லை.

இப்படிக்கு,
எச்சுமி அம்மாள்.'

"பேஷ்! நன்னா அமைஞ்சிருக்கு. வாடா, போகலாம்" என்றான் சீமா.

* * *

அரை மணி அவகாசத்திற்குப் பிறகு நாங்கள் மறுபடி கடையை அடைந்தோம்.

கடிதம் எழுதியிருந்த தினுசும், வார்த்தைப் பிரயோகங்களும் அம்மாதான் எழுதியிருக்கிறாள் என்று நிச்சயம் செய்ய வைத்தனவோ, என்னவோ! சைக்கிளையும் அதற்கான ரசீதையும் கொடுத்தனுப்பினான்.

"அம்பி, மணீஸ் கபேயில் நுழைவோமா?"

"அட, உனக்கில்லாமலா?"

சைக்கிளை 'ஸ்டாண்'டில் நிலைவாகப் பூட்டிவிட்டு உள்ளே நுழைந்தோம். சைக்கிள் பார்வையில் படும்படியாக இருந்த நாற்காலிகளில் உட்கார்ந்தோம்.

"இரண்டு புரூட் சாலெடு, பீட்ரூட் அல்வா, நெய் தோசை!"

வயிறாரச் சாப்பிட்டோம். என்னத்தைச் சாப்பிட்டும் மீதிப் பணம் நாற்பத்தைந்து 'சொச்சம்' அப்படியே இருந்தது!

மணி ஆக ஆகத்தான் எனக்குப் பீதி வளர்ந்தது. வீட்டிலிருந்து பணத்தைத் தெரியாமல் எடுத்து வந்து 'தாம் தடாக்' பண்ணிவிட்டோமே எனச் சிந்தித்தேன். இந்தச் சிந்தனை வந்ததும் அப்புறம் சாப்பிட்டது எதுவும் ருசிக்கவேயில்லை.

ஹோட்டலிலிருந்து வெளியே வந்ததும், "சீமாச்சு, நீ வேணுமானால் வீட்டுக்குப் போ. நான் சாவகாசமாக வறேன்" என்றேன்.

"சரி, நான் போறேன். ஸ்ரீரங்கத்துக்குப் போக, சில்லறை ஏதாவது கொடு" என்று ஒரு ரூபாய் வாங்கிக்கொண்டு சிட்டாய்ப் பறந்து சென்றான் சீமாச்சு.

அன்று சைக்கிளில் திருச்சிராப்பள்ளியில் நான் சுற்றாத இடமேயில்லை. ஒரு கையை விட்டுவிட்டு ஓட்டினேன். ஹாண்ட் பாரை இரு கைகளாலும் பிடிக்காமலே செலுத்தினேன். பின்

ஸீட்டில் உட்கார்ந்து சைக்கிள் விட்டேன். இத்தனை வருஷ காலமாய், சொந்த சைக்கிள் ஒன்று வாங்கி அதில் ஹாய்யாகச் செல்லச்சேர்த்து வைத்திருந்த ஆசையை யெல்லாம் தீர்த்துக்கொண்டேன்.

மாதாகோவில் மணி ஆறடித்தது. உடனே வீட்டின் நினைவு வந்தது. நேராக வண்டியை ஸ்ரீரங்கத்திற்கு ஓட்டினேன். வீட்டு வாசலை அடைந்து மெதுவாய் இறங்கினேன். என்ன தைரியம் எனக்கு! சைக்கிளை வாசல் சுவரில் சாற்றி விட்டு, வீட்டினுள் நுழைந்தேன்.

கூடத்தில் குறுக்கு நெடுக்காக, பின்கையைக் கட்டிக்கொண்டு உலாவிக்கொண் டிருந்தார் அப்பா. ''எங்கேடா தொலைந்து போயிருந்தாய்? ஆமாம்; இருநூறு ரூபாய் பணத்தைக் காணுமே, நீ பார்த்தாயா?'' என்றார் அவர்.

அப்பாவின் கேள்வி என் உடலில் உயிர் இல்லாததுபோல் செய்து விட்டது. நடுங்கிப் போனேன்.

உள்ளிருந்து கன அவசரமாக அம்மா வந்தாள். ''நன்னாயிருக்கு! குழந்தை வீட்டுக்குள்ளே நுழைஞ்சதும் நுழையாததுமா, கேட்கிற கேள்வி!'' என்று அப்பாவிடம் சொல்லிவிட்டு, என்னைப் பார்த்து, ''ஏண்டா அம்பி, பொட்டியிலே வச்சுருந்த பணத்திலே இரு நூறு ரூபாய் குறையறது. உனக்குத் தெரியுமா? நீ பார்த்தயோ?'' என்று விஷயத்தை வாங்கும் தினுசில் கேட்டாள்.

நான் பதில் பேசவில்லை. விழித்தேன். திடீரென்று அழுகை பீறிட்டது எனக்கு.

''ஏண்டா அழறே?'' என்றாள் அம்மா. அப்பாவுக்குச் சொந்த அநுபவமோ என்னவோ, சந்தேகம் தட்டிப்போய் என் சட்டைப் பையில் கையை விட்டார்.

பையிலிருந்து நாற்பது ரூபாய்ச் சில்லறையுடன் அவர் கை வெளியே வந்தது.

''பாக்கிப் பணம் எங்கே?''

விக்கிக்கொண்டே, ''சைக்கிள் வாங்கினேன்'' என்று வாசலில் கையைக் காண்பித்தான்.



அம்மாவுக்கு உடம்பு பதற ஆரம்பித்துவிட்டது. அப்பாவின் முகத்தில் கோபம் கொதித்தெழுந்தது. வாசலுக்குச் சென்று சைக்கிளை எடுத்து வந்து உள்ளே ரேழியில் சாத்திவிட்டு, வாசல் கதவைத் தாளிட்டுக்கொண்டு வந்தார்.

வந்ததும் வராததுமாய் என்மேல் பாய்ந்து கண், காது வாகு தெரியாமல் என்னை அடிக்கத் தொடங்கி விட்டார்.

அம்மா குறுக்கே வந்து தடுத்தாள். அதனால்அவளுக்கும் இரண்டு விழுந்தது.

முதல் நாள் இரவு மிளகாய் இடித்துவிட்டு, கூடத்து மூலையிலேயே வைத்திருந்த இரும்பு உரலினுள் இருந்த கடப்பாரையை எடுத்து ஓங்கினார்.

''இனிமே இல்லே அண்ணா.....'' என்று கத்தினேன். ஆனால் அப்பாவின் ஓங்கல் நிற்கவில்லை. எக்கச்சக்கமாய் என் இடதுகால் முட்டியில் விழுந்தது.

''ஐயோ...அம்மா!'' என்று அறிறிக் கீழே ஸ்மரணையற்று விழுந்து விட்டேன்.

* * *

**நா**ன் கண்ணைத் திறந்தபோது என் அருகே அம்மா கண்ணீர் மல்கிய கண்களுடன் உட்கார்ந்திருந்தாள்.

''ஏண்டா, அம்பி, இப்படிப் பண்ணலாமாடா? அண்ணா சுபாவம் தான் உனக்குத் தெரிந்ததாயிற்றே! கொஞ்ச நாள் பொறுத்திருந்தால் அவரே வாங்கித் தந்திருப்பாரே. ஏண்டா இப்படிப் பண்ணினே?''

''தெரியாமல் பண்ணிவிட்டேன். இனிமேல் இப்படிச் செய்யமாட்டேன், அம்மா. இனிமேல் ஒழுங்காக இருக்கேன்.''

''சரி, வேண்டாம். எழுந்திரு. கொஞ்சம் போனால் அண்ணாவின் கோபம் சரியாய்விடும்.''

''என்னாலே எழுந்திருக்க முடியலையே, ஐயோ! அம்மா! முட்டியிலே வலி 'விண் விண்' என்று தெறிக்கிறது. யம்மாடியோவ்! காலே அறுந்து தொங்கற மாதிரியிருக்கே!''

அம்மா அங்கேயே பக்கத்தில் என் படுக்கையைத் தட்டி விரித்தாள். என்னை அப்படியே தூக்கிப் படுக்கையில் கிடத்தினாள். உடனே உள்ளே போய் ரசம் சாதமாகக் கரைத்து வந்து வாயில் ஊற்றினாள். குடித்துவிட்டுக் கண்களை மூடினேன். அசதியுடன் அப்படியே தூங்கிப் போய்விட்டேன்.

**ம**றுநாள் காலையில் நான் கண் விழித்துக் காலை நகர்த்தியபோது, அசைக்க முடியாதபடி வலித்தது.

எட்டு மணி சுமாருக்கு, காலைக் காபி ஆனபிறகு, மோட்டார் ஒன்றை வாடகைக்கு அமர்த்தி என்னைத் திருச்சிராப்பள்ளியில் பிரபலமான டாக்டர் காளமேகத்தின் ஆஸ்பத்திரிக்கு இட்டுச் சென்றனர்.

என்னால் காலைக் கீழே ஊன முடியவில்லை. 'ஸ்டெரச்சர்' கொண்டுவந்து என்னை அதில் எடுத்துச் சென்றார்கள். டாக்டர் காளமேகம் கால் முட்டியில் கையை வைத்து அமுக்கிப் பரிசோதித்தார். அவருக்கு என்ன தெரிந்ததோ, தெரியவில்லை. என்னை உடனே 'எக்ஸ்-ரே' அறைக்கு எடுத்துச் சென்று போட்டோ எடுத்துப் பார்த்தார்.

படத்தைப் பார்த்ததும் டாக்டர் அப்பாவிடம் குசுகுசுவென்று ஏதோ பேசினார். அப்பா, அம்மாவிடம் ஏதோ சொன்னார். அம்மா அலறினாள். எனக்குப் புரியவில்லை.

அப்புறம் நடந்தது எனக்குத் தெரியாது. மயக்க மருந்து கொடுத்துவிட்டார்கள் எனக்கு.

விழிப்பு வந்து பார்த்தபோது மின்சார விசிறிக்குக் கீழே மெத்தை விரித்த கட்டிலில் படுத்துக்கொண்டிருந்தேன். கட்டிலுக்குப் பக்கத்தில் உட்கார்ந்திருந்தாள் அம்மா. அவள் பார்வை என் இடுப்பில் பதிந்திருந்தன. நானும் பார்த்தேன். ஒரு கால் நீளமாய் இருந்தது, மற்றது குட்டையாக அம்மிக் குழவிபோல இருந்தது. அதைச் சுற்றி பெரிய கட்டுக் கட்டியிருந்தார்கள். பிறகு தான் தெரிந்தது. அந்தக் கால் முழங்காலுக்குக் கீழே மூளி என்று.

பணத்தைப் பெற்றோருக்குத் தெரியாமல் எடுத்தது நானல்ல; என் சைக்கிள் ஆசைதான். அந்த ஆசைக்குக் கூலி கிடைத்தது.

டாகுர் கதை

# பொம்மைத் திருடன்

லேனா



அந்தக் கிழவன் எப்போதும் மண் பொம்மை செய்து கொண்டே இருப்பான்; அரண்மனையில் வாழ்ந்து வந்த குழந்தைகளுக்காகவே பெரும்பாலும் அவைகளைச் செய்வான். வருஷத்தில் ஒரு தடவை அரண்மனையில் ஒரு கண்காட்சி வைப்பார்கள். அதில் அந்தக் கிழவன் செய்த பொம்மைகளுக்குத்தான் எவ்வளவு கிராக்கி!

ஆனால் இந்தத் தடவை புதிய பொம்மைக்காரன் ஒருவன் வந்து சேர்ந்தான்; அவன் வாலிபன்; பெயர் கிஷண்லால். புது ரீதியில் பொம்மை செய்து வைத்திருந்தான். உடனே அரண்மனைக் குழந்தைகள் எல்லாம், "இந்தப் பொம்மைகள்தான் எங்களுக்கு வேண்டும்!" என்று அவைகளைச் சூழ்ந்துகொண்டார்கள். இதனால் அந்தப் புதிய பொம்மைகளுக்குப் பின்னும் மவுசு ஏற்பட்டுவிட்டது.

கிழவனுடைய வியாபாரம் படுத்துவிட்டது. யாரும் அவன் செய்யும் பொம்மைகளைச் சீந்துவதேயில்லை. ஒரு வருஷமும் ஆயிற்று; அவனை எல்லாரும் மறந்தேகூடப் போய்விட்டார்கள்.

கிழவனுடைய மனம் முறிந்துவிட்டது. ஒரு நாள் அவன் மகளும் மருமகனும் அவனிடம் வந்தார்கள். "அப்பா, நீ என் வீட்டுக்கு வந்துவிடேன்" என்றாள் மகள். மருமகன், "நான் இனிமேல் உங்களுக்கு ஒரு குறைவும் நேராதபடி பார்த்துக்கொள்கிறேன். குழந்தை, மாடு கன்றுகளைக் கவனித்துக்கொண்டு வீட்டோடு இருங்கள்" என்றான்.

கிழவன், "சரி" என்று தலையசைத்தான். காலம் மாறிவிட்டது என்று இன்னும் கிழவனுக்குப் புரியவில்லை. பழைய கவலை அவனை விட்டபாடு இல்லை. தன் பேத்திக்கு வயசு பதினாறு ஆகிறது என்பதுகூட அவனுக்கு நினைவில்லை. மகளின் வீட்டில் உண்டுவிட்டு ஒரு மரத்தடியில் உறங்குவான்; அப்போது அவன் பேத்தி சுபத்திரை வந்து அவன் கழுத்தைக் கட்டிக்கொள்வாள். கிழவனுக்குச் சற்று உணர்வு பிறக்கும்; "என்ன, அம்மா, என்ன வேண்டும்?" என்பான்.

"எனக்குப் பொம்மை பண்ணித் தா, தாத்தா" என்பாள் பேத்தி.

"என் பொம்மையெல்லாம் உனக்குப் பிடிக்காதே, அம்மா!"

"உன்னைவிட அப்படி யார் பிரமாதமாகப் பண்ணிவிடப் போகிறார்கள்?"

"ஏன், கிஷண்லால் பண்ணுவானே!"

"ஊஹூம். முடியவே முடியாது. நீ செய்தால்தான் நன்றாக இருக்கும்" என்பாள் பேத்தி.

கிழவன் உற்சாகத்தோடு எழுந்து கண்ணில் மூக்குக் கண்ணாடியைப் போட்டுக்கொண்டு தன் பையை வெளியில் எடுப்பான்; "அதிருக்கட்டும்; இதோ பருப்பு உலர்த்தியிருக்கிறதே, அதைக் காக்கை கொத்திக்கொண்டு போய் விடுமே!" என்பான்.

''நான் காக்கையை விரட்டிக் கொள்கிறேன்'' என்பாள் பேத்தி.

பொழுது ஏறிக்கொண்டே போகும்; தூரத்தில் கிணற்றிலிருந்து நீர் இறைக்கும் சத்தம் கேட்கும். பேத்தி காக்கையை விரட்ட, கிழவன் பொம்மை பண்ண உட்காருவான்.

கிழவனுக்கு எல்லாரையும்விடத் தன் மகளிடத்தில்தான் மிகவும் பயம். அவள் மிகவும் கண்டிப்பாகக் குடும்பத்தை நடத்தி வந்தாள்; எல்லாருமே அவள் சொன்ன சொல்லை மீறுமல் நடந்து வந்தார்கள்.

கிழவன் இப்படிப் பொம்மை பண்ணிக்கொண்டிருந்தபோது திடீரென்று ஒரு நாள் அவன் மகள் வந்து, ''இதென்ன, இன்னும் பால் கறந்தாகவில்லை. நீயோ பொம்மை பண்ணிக்கொண்டிருக்கிருய்! இவ்வளவு பெரிய பேத்திக்குப் பொம்மை வேண்டுமா?'' என்று எரிந்து விழுந்தாள்.

கிழவன் அறியாத பாலகனைப் போல் நாக்குக் குழற, ''இல்லை, இல்லை. அரண்மனையிலே கொண்டு போய் விற்கத்தான், அம்மா. நம் சுபத்திரைக்குக் கல்யாணம் பண்ணுகிறபோது தங்கக் காசு மாலை போடப் போகிறேன்; அதற்காகவே பணம் சேர்க்கிறேன்'' என்ருன்.

மகள், ''உம்... போயும் போயும் இதை அரண்மனையில் யார் வாங்கப் போகிருர்கள்!'' என்று சலித்துக்கொண்டாள்.

அப்போது சுபத்திரையும், ''அம்மா. நான் அங்கே கொண்டு போய்விற்று வருகிறேனு இல்லையா, நீயே பார்!'' என்ருள்.

இரண்டு நாள் கழித்துச் சுபத்திரை தன் தாயிடம் வந்து, ''அம்மா, இந்தா, தாத்தாவின் பொம்மை விற்றுக் கிடைத்த காசு'' என்று ஒரு தங்கக் காசைக் கொடுத்தாள்.

தாய் வியப்போடு, ''எங்கே வாங்கினுர்கள்?'' என்ருள்.

''அரண்மனையில்தான்.''

தாய்க்கு உள்ளூற மகிழ்ச்சி; அவள், ''மொத்தம் பதினுறு காசு சேர்ந்துவிட்டால் சுபத்திரைக்குக் காசுமாலை ஆகிவிடுகிறது'' என்ருள்.



பேத்தி கிழவனிடம் வந்து அவன் கழுத்தைக் கட்டிக்கொண்டு, "தாத்தா, நீ கவலைப் படாதே! எல்லாம் சரியாக முடியும்" என்ருள்.

கிழவனுடைய உதடுகளில் சிரிப்பு வந்தாலும் கண்களிலிருந்து ஏனே ஒரு துளி நீர் வழிந்தது; அவன் கண்ணைத் துடைத்துக்கொண்டான்.

கிழவனுக்கு இளமை திரும்பியமாதிரி இருந்தது. அவன் தினந்தோறும் புதிய புதிய பொம்மைகளைச் செய்தான். பழையபடி கிணற்றிலிருந்து நீர் இறைக்கும் சத்தம் கேட்கும். சுபத்திரை பருப்பைக் காக்கை கொத்தாதபடி பார்த்துக் கொள்வாள்.

ஒவ்வொன்ருகப் பதினறு தங்கக் காசுகள் கிடைத்துவிட்டன.



கிழவன் மகள், "சரி; மருமகனை நிச்சயம் பண்ண வேண்டியதுதான்" என்ருள்.

சுபத்திரை கிழவன் காதோடு காதாக, "தாத்தா, நான் ஏற்கனவே வரன் பார்த்து வைத்திருக்கிறேன்" என்ருள்.

"எங்கே, அம்மா?" என்ருன் கிழவன் ஆவலுடன்.

சுபத்திரை, "முதல் நாள் நான் உன் பொம்மையை விற்க அரண்மனைக்குப் போயிருந்தேனே; அன்றைக்கு அங்கே காவல் காப்பவன், 'வெளியே போ!' என்று என்னைத் துரத்தினன். எனக்கு அழுகை அழுகையாக வந்துவிட்டது. அப்போது அங்கே இருந்த ஒருவர், 'இப்படிக் கொடு, அம்மா; நான் அதை வாங்கிக்கொள்கிறேன்' என்ருர். அவர்தான் நம் பொம்மைகளைத் தினந்தோறும் வாங்கிக் கொள்கிருர். அவரைக் கண்டால் எனக்கு ரொம்பப் பிடித்திருக்கிறது, தாத்தா" என்ருள்.

"அந்த ஆள் எங்கே அம்மா இருக்கிருர்?" என்ருன் கிழவன்.

"வெளியே மரத்தடியில் காத்துக்கொண்டிருக்கிருர்."

"வரச் சொல், பார்க்கலாம்" என்ருன் கிழவன்.

உள்ளே ஓர் ஆள் நுழைந்தான். கிழவன் நிமிர்ந்து பார்த்தான்; "என்ன, கிஷண்லாலா?" என்ருன் ஆச்சரியத்தோடு.

கிஷண்லால் கிழவனுடைய காலில் விழுந்து வணங்கினன். கிழவன் அவனைத் தூக்கி மார்போடு அணைத்துக்கொண்டான்; இன்ப மிகுதியால் குரல் தழுதழுக்க, "தம்பி, முன்னே என் பொம்மை வியாபாரம் உன் கைக்குப் போச்சு! இப்போதோ தங்கப் பதுமை போல் காணும் என் பேத்தியையே கொள்ளை கொண்டுவிட்டாயே!" என்ருன்.

பேத்தி சுபத்திரை கிழவனைத் தொட்டு அவன் காதோடு காதாக, "சீச்சீ! என்ன தாத்தா இது! பைத்தியம் மாதிரி என்னவோ பேசுகிருயே!" என்ருள்.




"ஏய் தம்பி! இன்னிக்கு ஏண்டா இவ்வளவு நேரம்?''

''ம்.......''

''டேய், தர்மலிங்கம்....!''

''ஊம்.....''

''ஏண்டா ஒரு மாதிரியா இருக்கே?''

''ஒண்ணுமில்லேம்மா...''

''பின்னே, ஏண்டா அப்படிப் பித்துப் பிடிச்சாப்பலே உட்கார்ந்து கிட்டிருக்கே?......''

''இன்னிக்கி நடந்த விசயத்தை யோசிச்சா ஒரே குழப்பமா இருக்கம்மா.....''

''என்னடா, என்ன விசயம்?''

''நமக்கு அதிர்ஷ்டம் திடீர்னு வந்துட்டுது அம்மா!''

''அதிர்ஷ்டமா? விளங்கற மாதிரி தான் சொல்லேன்.''

''கொள்ளை எடுத்துக்கிட்டு வாம்மா. அந்த வேலைகளைப் பார்த்திட்டு வந்திடலாம். பிறகு சாவகாசமாய்ச் சொல்றேன்.''

அவன் தாய் தனபாக்கியம் கொள்ளை எடுத்துக்கொண்டு கிளம்பினாள். 'மினுக்', 'மினுக்' கென்று எரிந்த ஒரே மண்ணெண்ணெய் விளக்கை எடுத்துக்கொண்டு தாயைத் தொடர்ந்தான் தர்மலிங்கம்.

வீட்டுக் கூரையைச் சேர்த்தே போடப்பட்டிருந்த சிறு ஓலைச் சார்ப்பில் சோனிக் குதிரை ஒன்று கட்டப்பட்டிருந்தது. வீட்டு வாசலிலேயே வர்ணம் மங்கிய வண்டி ஒன்று கிடந்தது.

ஆவலாகக் கொள்ளைத் தின்னத் தொடங்கியது குதிரை. தர்மலிங்கம் ஒரு கையால் குதிரையின் முதுகைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டே மற்றொரு கையால் 'மாலிஷ்' செய்யத்தொடங்கினான். முதுகைச் சுவாரஸ்யமாக வளைத்துக் கொடுத்தது குதிரை. அவன் தாய் புல்லை அவிழ்த்து உதறிவிட்டு, பாத்திரத்தை எடுத்துக்கொண்டு உள்ளே சென்றாள்.

தர்மலிங்கத்தின் தகப்பனார் கந்தசாமியும் ஒரு ஜட்கா வண்டிக்காரர்தான். அவர்களுக்கு அது ஒரு பரம்பரைத் தொழில்.

அவன் அப்பாவைத் தெரியாதவர்கள் கிடையாது. ''ரொம்ப நாணயம் உள்ளவன், மரியாதை தெரிந்தவன், நியாயமான கூலி கேட்பவன்'' என்றெல்லாம் பிரசித்தி அடைந்தவன். தகப்பனார் திடீரென்று மரண மடையவே பள்ளிப் படிப்பை அரை குறையாக நிறுத்திவிட நேர்ந்தது. தகப்பனார் வைத்துச் சென்றது, ஒரு குடிசையும், சோனிக் குதிரையும், பழைய வண்டியும்தான். வேறு வழி யில்லாததால், தன் தகப்பனின் தொழிலையே சிறுவனை அவன் மேற்கொண்டான்.

முன் போல் குதிரை வண்டிகளுக்கு இப்பொழுது கிராக்கியில்லை. சைக்கிள் ரிக்ஷாக்களும், ஆட்டோ ரிக்ஷாக்களும், போதாததற்குப் பேபி டாக்ஸிகளும் போட்டியிட்டன. ஆயினும் வயிற்றுப்

பிழைப்பை நடத்த வேண்டுமே!

ஏதோ கிடைத்ததைக் கொண்டு சிரமத்துடன் சமாளித்து வந்தான் தர்மலிங்கம். வெயிலுக்கும் மழைக்கும் தாங்காமல், ஓட்டையாக நின்ற வீட்டையும் கொட்டகையையும் ரிப்பேர் செய்ய வேண்டும் என்று வெகு நாட்களாக அவன் எண்ணி வந்தான். அவன் தாய்க்குக் கட்டிக்கொள்ளத் துணியே இல்லை. ஏன், அவனுக்குக் கூடத்தான். தீபாவளி நெருங்கி வரும் இந்தச் சமயத்தில் வாங்கிக்கொண்டால்..பண்டிகையும் கொண்டாடலாமே என்பது அவன் ஆசை.. ஆனால் பணம்.......?

அம்மாதிரி இக்கட்டான சமயத்தில்தான் வந்தது அதிர்ஷ்டம். தன் அதிர்ஷ்டத்தை நினைத்தால் அவனுக்குப் பெருமையாகத்தான் இருந்தது. ஆனால் அதே சமயத்தில் இனந் தெரியாத ஒரு பயமும் இருந்தது.

குதிரை ஒரு கணைப்புக் கணைத்தது. சுய உணர்வுக்கு வந்தான் தர்மலிங்கம். புல்லைச் சரியாக உதறி விட்டுக் குதிரையின் முதுகிலே இரண்டு ‘ஷொட்டு’ வைத்துவிட்டு உள்ளே நுழைந்தான் அவன்.

அவன் தாய் தனபாக்கியம் கிண்ணத்தில் சோற்றைப் போட்டுத் தயாராக வைத்திருந்தாள். அதை அள்ளிப் போட்டுக்கொண்டே, தாயிடம் அந்த நிகழ்ச்சியைக் கூறத் தொடங்கினான்.

‘‘ராத்திரி வழக்கமா வீட்டுக்குத் திரும்பற நேரத்திலே, வண்டியைத் திருப்பிக்கிட்டு வந்துக்கிட்டிருந்தேன். திடீர்னு யாரோ, ‘ஜட்கா, ஏ..ஜட்கா’ன்னு கூப்பிடறாப்பிலே சத்தம் கேட்டிச்சு. நான் யாருன்னு திரும்பிப் பாக்கறதுக்குள்ளே, யாரோ ஒரு ஆளு வண்டியிலே ‘டபார்’னு தாவி ஏறிக்கிட்டான். ஏறின வேகத்திலே வண்டியிலே அப்படியே படுத்தாப்பிலே விழுந்துட்டான். ‘ஓட்டு, வேகமாக ஓட்டு’ன்னு கத்தினான். உள்ளே திரும்பிப் பார்த்தேன். நிஜாரும் கோட்டும் போட்ட ஆசாமி; பெரிய மனிசன் மாதிரி இருந்தது. ‘எங்கே போவணும்?’னு கேட்டேன். ‘எங்கேயாவது ஓட்டு. நேரே ஓட்டு, விரட்டு வேகமா’ன்னு கத்தினான். ஏதோ பிசாசைப் பாத்துப் பயந்தவன் மாதிரி அவசரப்பட்டான். நானும் நிறுத்தாமல் ஓட்டினேன்.

‘‘ஆறு மூணு, நாலு மைலுக்கு மேல் சவாரி போன பிறகுதான் சத்தம் வந்தது. ‘பக்கத்திலே டாக்டர் வீடு ஏதாவதிருந்தா சீக்கிரமா அங்கே ஓட்டு’ என்றார் அந்த ஆள். எனக்கு விஷயம் புரியல்லே.

‘‘பக்கத்துத் தெருவிலே டாக்டர் ஒத்தர் இருக்கிறது எனக்குத் தெரியும். அங்கே ஓட்டினேன். டாக்டர் வீட்டு வாசலில் வண்டியை நிறுத்திவிட்டுப் பின்னால் வந்து கூப்பிட்டேன். அவர் என் தோளைப் பிடித்துக்கொண்டே இறங்கினார். அப்போதுதான் அவரைப் பார்த்தேன். அவர் சட்டை, கோட்டு எல்லாம் ரத்தமாக இருந்தது. தடுமாறிய அவர்கூடப் போய் ஒத்தாசை செய்ய வேண்டுமென்றுதான் நினைத்தேன். ஆனால் அவர் தன் கோட்டின் வெளிப்பையில் கையைவிட்டு ஒரு நோட்டை வெளியில் எடுத்தார். என்னிடம் கொடுத்து, உடனே போய்விட வேண்டுமென்றும், யாரிடமும் மூச்சுவிடக் கூடாதென்றும் சொன்னார்.

‘‘வரும் வழியிலேயே வெளிச்சத்தில் அவர் கொடுத்த நோட்டைப் பார்த்தேன். புத்தம் புதிய அஞ்சு ரூபா நோட்டு. அதிர்ஷ்டம்தான் என்று நினைத்துக்கொண்டேன். வீட்டிற்கு வந்து சேர்ந்தேன். வண்டியை அவிழ்த்துவிட்டு, புல்லை எடுக்கச் சாக்கை இழுத்தேன். ‘பொத்’ தென்று கீழே ஏதோ விழுந்தது. பார்த்தால் கத்தை கத்தையா அஞ்சு ரூபா நோட்டுகளாயிருந்தது. இன்னிக்குத்தான் பகவான் கண்ணைத் திறந்தாருபோல இருக்குன்னு நினைச்சேன். நமக்கு அதிர்ஷ்டம் வந்திடுச்சு, அம்மா; இனிமே கவலைப்படாதே!’’ என்று கூறிப் பெருமூச்சு விட்டான் தர்மலிங்கம்.

கேட்டுக்கொண்டே வந்த தனபாக்கியமும் பெருமூச்சு விட்டாள். ‘‘ஏய், அதிர்ஷ்டமாடா அது?.... ஆபத்துடா. தர்மலிங்கம்! நான்

சொல்றதைக் கேளு. பிறருடைய சொத்து நமக்கு வேண்டாம்.''

''போம்மா.....தானா வந்த அதிர்ஷ்டத்தை வேண்டாங்கிறயே! எந்த ஜன்மத்திலே நான் இவ்வளவு சம்பாதிக்கப் போறேன்?''

''தொடக்கூடாது. நம்ம குடும்பத்திலே இத்தனை நாளா இருக்கிற நல்ல பேரைக் கெடுத்திடாதே. ரூபா போகும் வரும். ஆனா பேரு வராது. இப்ப அரை வயிற்றுக்குக் கஞ்சி கெடைக்கிற பிழைப்பும் போய்விடும்.''

''கையிலே காசில்லாமே திண்டாடறப்போ, நானா போய்த் திருடினேன்? தானா வந்ததுதானே?..''

''நமக்குக் கிடைக்கிறது போதும். போய், கொடுத்திட்டு வந்துடு.''

''நடு ராத்திரிலே அஞ்சாறு மைலு எப்படியம்மா போறது? அதோடே அந்த ஆளு யாருன்னு தெரியாது.''

''அப்போ, நேரே போலீஸ் ஸ்டேஷனுக்குப் போ. விஷயத்தை எல்லாம் சொல்லிக் கொடுத்திட்டு வந்துடு.''

''உ...ம்......''

''சரி, கிளம்பு; நானும் வரேன்!''

ஃ ஃ ஃ

மறு நாள் இரவு தர்மலிங்கம் சீக்கிரமாகவே திரும்பிவிட்டான். வண்டியிலிருந்து குதிரையை அவிழ்த்துக்கொண்டே, ''அம்மா, அம்மா'' என்று பரபரப்பாகக் கூப்பிட்டான். ''என்னடா'' என்று கேட்டுக்கொண்டே வெளியே வந்தாள் தனபாக்கியம்.

''விஷயம் தெரியுமா? நேத்திக்குப் போலீஸ் ஸ்டேஷன்போய்க் கொடுத்தோமே, அந்த அஞ்சு ரூபா நோட்டெல்லாம் கள்ள நோட்டாம். ராத்திரியே போயி, அந்த டாக்டர் வீட்டிலேயே அந்த ஆளைப் பிடிச்சுட்டாங்களாம். கள்ள நோட்டு அடிக்கிற கும்பல்லே ஒரு ஆளாம் அது. கூட்டாளிங்க




தகருரிலே, நல்ல கத்திக் குத்தாம் அந்த ஆளுக்கு. அவனுடைய கூட்டாளிகளையும் புடிச்சுட்டாங்களாம். ஸ்டேஷன்லே கூப்பிட்டு இன்ஸ்பெக்டர் ஐயா சொன்ருரு, 'பலே! கந்தசாமி மகனில்லே, புலிக்குப் பிறந்தது'ன்னு முதுகிலே தட்டிக் கொடுத்தாரு. சர்க்காருலே எனக்கு இனும் கொடுக்கச் சிபாரிசு செஞ்சிருக்காங்களாம்.''

பிள்ளையைத் தடவிக் கொடுத்தாள் தனபாக்கியம். ''நல்ல வேளை! அதைக் கொடுக்காமே ஆசைப்பட்டு வச்சிக்கிட்டிருந்தா, கதி என்ன ஆகியிருக்கும்? கிடைக்கிறது போதும்னு இருந்தா, ஆண்டவன் கொடுப்பாருடா தம்பி!''

அந்த ஆண்டவன் அதிக நாள் காக்க வைக்கவில்லை. நேர்மைக்குப் பரிசு சர்க்காரிடமிருந்து இன்ஸ்பெக்டர் மூலம் கிடைத்தது. அதுவும் தீபாவளிக்கு ஒரு நாள் முன்னுலேயே வந்துவிட்டது.







# பாலர் கவி அரங்கம்

## தீபாவளி

பாமை போரில் வென்ற நாள்
பாவி நரகன் ஒழிந்த நாள்
தீமை தோற்ற வெற்றி நாள்
தீ(பா)வளியாம் இந்த நாள்.

அன்னை வெற்றி கொண்ட நாள்
அரக்க னுவி துறந்த நாள்
இன்ப தீபம் ஒளிரும் நாள்
இருளகற்றும் இந்த நாள்.

அன்பு தழைக்கச் செய்யவல்ல
அறமும் வெற்றி பெற்ற நாள்
சின்னஞ் சிறுவர் துள்ளி ஆடிச்
சிரித்து மகிழும் இந்த நாள்.

இந்த நாளில்—
வாணம் கொளுத்தி ஆடுவோம்
வண்ண ஆடை பூணுவோம்
பாணம் விட்டுக் கொன்ற அன்னை
பாமை புகழ் பாடுவோம்.

குளித்து நல்ல உணவு உண்டு
கூடி மகிழ்ந்து ஆடுவோம்
களிப்புடனே கடையில் சென்று
'கண்ணன்' மலரை வாங்குவோம்.

—ஆர். ஸரஸ்வதி.

## கதிரவன்

அடிவானில் அரும்பி விட்டாய்
அம்புவிக்கோர் பொன் மலராய்ச்
செங்கதிர்கள் தனைப்பரப்பிச்
சிந்தைதனை மகிழச் செய்வாய்.

வானத்து ஒளி விளக்காய்
வையத்துப் பொன்னொளியாய்
உலகமிசை உணர்வெழுப்பி
உவகை மனம் கொளச் செய்வாய்.

விண்ணாளும் வேந்தனாய்
விலையில்லாத் தங்கமாய்
புவி சூழும் இருளைப் போக்கிப்
புத்துணர்வுப் பெருகச் செய்வாய்.

—டி. கே. எம். காதர்.

84201

EDITED, PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM
AT THE MADRAS LAW JOURNAL PRESS, MADRAS-4.
ASSOCIATE EDITOR: R. VENKATARAMAN.

தக்ஷிண ரயில்வே

# திருவண்ணாமலையில்

## மகத்தான கார்த்திகை தீபம் உற்சவம்

## 20—11—55 முதல், 30—11—55 வரை

முக்கிய தினங்கள்:

நவம்பர் 21, 23, 24 & 25வ.

ரதோத்ஸவம் 26—11—'55, கார்த்திகை தீபம் 29—11—'55

கீழ்க்குறித்த ஸ்டேஷன்களிலிருந்து திருவண்ணாமலைக்குப் போய்த் திரும்புவதற்கான 3-ஆம் வகுப்புச் சலுகை ரிட்டர்ன் டிக்கட்டுகள் 1½-மடங்கு ஒற்றைப் பிரயாணக் கட்டணத்திற்கு 18—11—'55 முதல் 28—11—'55 வரை வழங்கப்படும். திரும்பும் பிரயாணத்தை 2—12—'55 நள்ளிரவிற்குள் முடித்துக் கொள்ள வேண்டும்.

(1) மதராஸ் எழும்பூர் ஜில்லாவிலும், திருச்சிராப்பள்ளி ஜில்லாவிலுமுள்ள எல்லா ஸ்டேஷன்களிலிருந்தும் (விழுப்புரம்—காட்பாடி பிரிவிலுள்ள எல்லா ஸ்டேஷன்களும்—விழுப்புரம், காட்பாடி உள்பட—நீங்கலாக).

(2) மதராஸ்—பெங்களூர் சிடி பிரிவிலுள்ள எல்லா ஸ்டேன்களிலிருந்தும் (மாரிக் குப்பம் பிராஞ்சு, நாரோ - கேஜ் பிரிவு மற்றும் காட்பாடி நீங்கலாக).

சில முக்கியமான ஸ்டேஷன்களிலிருந்து திருவண்ணாமலைக்குப போய்த் திரும்புவதற்கான 3-ம் வகுப்புச் சலுகை ரிட்டர்ன் டிக்கட் கட்டணங்களை யாத்ரீகர்கள் அறிவதற்காகக் கீழே பிரசுரித்துள்ளோம்.

| புறப்படும் ஸ்டேஷன் | * ரூ. | அ. | † ரூ. | அ. | புறப்படும் ஸ்டேஷன் | * ரூ. | அ. | † ரூ. | அ. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| மதராஸ் எழும்பூர் ... | 5 | 15 | 6 | 11 | விருத்தாசலம் ... | 3 | 5 | 3 | 10 |
| திருச்சிராப்பள்ளி ஜங். | 6 | 7 | 7 | 4 | ஸ்ரீரங்கம் ... | 6 | 2 | 6 | 14 |
| அரக்கோணம் ... | 4 | 1 | 4 | 7 | சேலம் ஜங்ஷன் ... | 6 | 13 | 7 | 3 |
| மதராஸ் செண்டிரல் ... | 5 | 14 | 6 | 8 | மாயவரம் ஜங்ஷன் ... | 5 | 0 | 5 | 9 |
| ஜோலார்பேட்டை ... | 4 | 12 | 5 | 2 | கும்பகோணம் ... | 5 | 12 | 6 | 8 |
| பங்காரப்பேட் ... | 6 | 10 | 7 | 7 | தஞ்சாவூர் ஜங்ஷன் ... | 6 | 13 | 7 | 12 |
| பெங்களூர் சிடி ஜங். ... | 8 | 5 | 9 | 7 | மதனபள்ளி ரோடு ... | 6 | 5 | ... | |
| செங்கல்பட்டு ... | 4 | 9 | 5 | 15 | திருத்தணி ... | 4 | 7 | 4 | 13 |
| காஞ்சீபுரம் ... | 5 | 6 | 5 | 2 | புத்தூர் ... | 5 | 3 | 5 | 11 |
| கடலூர் ஜங்ஷன் ... | 3 | 2 | 3 | 7 | பொன்னேரி ... | 6 | 13 | 7 | 6 |
| புதுச்சேரி ... | 2 | 14 | ... | | | | | | |

மூன்று வயதுக்குமேல் 12-வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்குச் சரிபாதிக் கட்டணம். வழியில் எந்த ஸ்டேஷனிலும் இறங்கித் தங்கிச் செல்ல முடியாது. இதர விவரங்களுக்கு, சம்பந்தப்பட்ட ஸ்டேஷன் மாஸ்டரிடம் விசாரிக்கவும்.

சென்னை. சீப் கமர்ஷியல் சூபரின்டெண்டெண்டு.

குறிப்பு: * 3-ம் வகுப்பு சாதாரணக் கட்டணம்.
† 3-ம் வகுப்பு மெயில்/எக்ஸ்பிரஸ் மற்றும் சாதாரணக் கட்டணம் சேர்ந்த டிக்கெட்.

(Regd. as News pap... ...eylon.) Reg. No. M. 5542.




# INKS

Available in 5 colours in 1, 2, 4, 12 & 22 oz packings

## RESEARCH CHEMICAL LABORATORIES

MADRAS-4 • BANGALORE-3

## ஐரிஸ் பவுண்டன் பேனா மைகள்

ராயல் ப்ளூ, ப்ளூ ப்ளாக், சிவப்பு, பச்சை, வயலெட்,
ரப்பர் ஸ்டாம்பு இங்குகளில், 1 அவுன்ஸ், 2 அவு.,
4 அவு., 12 அவு., 22 அவு., புட்டிகளில் கிடைக்கும்.

விவரங்களுக்கு எழுதுக:

ரிஸர்ச் கெமிகல் லாபரடரீஸ்,

550, VIII மெயின் ரோட்,
பங்களூர் 3.

30, அலர்மேல்மங்காபுரம்,
சென்னை 4.